T. 1895

மகோடி க்ரந்தாவளி : 33

श्रीगुरुभ्यो नमः

# நாற்பது ஸம்ஸ்காரங்களும் கர்மானுஷ்டானங்களும்

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளான

ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய நன்மொழிகள்



श्रीकामकोटिर्विजयते


ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு

சென்னை



ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள்

T.1895

ௐ

श्रीगुरुभ्यो नमः

# நாற்பது ஸம்ஸ்காரங்களும் கர்மானுஷ்டானங்களும்

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளான

ஜகத்குரு

## ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய நன்மொழிகள்

2/11/53



श्रीकामकोटिर्विजयते

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை.

பதிப்புரிமை] [விலை அணா 10.

முதற் பதிப்பு—பிப்ரவரி, 1950

Thompson & Co., Ltd., Madras.

॥ श्रीः ॥

**यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।**

**अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥**

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள், 1932௵ செப்டம்பர் ௴ சென்னைக்கு விஜயம் செய்தார்கள். அச்சமயம் அவர்கள் அருளிய பொன்மொழிகள் இங்கே அளிக்கப்படுகின்றன.

காலவேறுபாட்டால் மக்கள் ஒரு நிலையில் இல்லை. நமது மதங்கள், வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் அவற்றின் கொள்கைகள், நாகரிகம் முதலியவற்றின் உண்மைகளைச் சரிவர அறிந்து கொள்ளமுடியாமல் பலவாறு குழம்பி யிருக்கின்றனர். அன்னாரது நன்மைக்காகப் பல விஷயங்களும் எளிதில் விளங்குமாறு, தக்க மேற்கோள்களுடன் உபதேசிக்கப்பட்டுள்ளன.

மக்கள் தங்களது ஆத்ம லாபத்தைக் கருதி நற்பயன் அடையும் முறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வேண்டப்படுகிறார்கள்.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

# விஷய அட்டவணை

பக்கம்

1. ஸம்ஸ்காரங்கள் ... ... 1

2. ஆரம்ப ஸம்ஸ்காரங்கள் ... ... 11

3. பிரம்மசரியமும் விவாஹமும் ... 21

4. விவாஹம் ... ... 39

5. ஹவிர்யஜ்ஞங்களும்
ஸோமயஜ்ஞங்களும் ... ... 68

6. ஸந்தியாவந்தனம் ... ... 85

7. காயத்ரீ ... ... 97

# நாற்பது ஸம்ஸ்காரங்களும் கர்மானுஷ்டானங்களும்

## 1. ஸம்ஸ்கார்ங்கள்

(14—11—1932)

நாம் வஸிக்கும் இந்த லோகத்திற்கு மிஸ்ரலோகம் என்று பெயர். மிஸ்ரம் என்றால் கலந்தது என்பது அர்த்தம். எவை கலந்தது? ஸுகம் துக்கம் என்னும் இரண்டும் கலந்தது. ஸுகமே இல்லாமல் துக்கமே இருக்கும் ஒரு லோகம் இருக்கிறது. துக்கமே இல்லாமல் ஸுகமே இருக்கும் ஒரு லோகம் இருக்கிறது. இரண்டும் கலந்த லோகம் இது. பிரம்மலோகம் அதாவது ஸத்திய லோகம், வைகுண்டம், கைலாஸம் முதலியவைகள் ஸுகமே இருக்கிற லோகங்கள். துக்கமே இருக்கிற லோகம் நரக லோகம். அதில் அநேக பேதங்கள் உண்டு. நிரம்ப கொடூரமான நரகம் ரௌரவ நரகம் என்பது. நரகலோகத்தைத் தவிரப் பாக்கி லோகங்களில் பிதுருக்கள் இருந்தால் அமாவாஸைத் தர்ப்பண பலன் அவர்களுக்குப் போய்ச் சேரும். நரக லோகத்தில் இருப்பவர்களுக்குச் சேராது. அவர்களுக்கு உபயோகப் படுபவைகளும் இருக்கின்றன. அழுக்கு வேஷ்டியில் உள்ள ஜலம், தலை மயிர் ஜலம், கை அலம்புகிற ஜலம் இவைகளை அவர்களை உத்தேசித்துக் கொடுத்தால் அவர்களுக்குத் திருப்தி உண்டாகும். அதனால்தான் வேஷ்டி பிழிய ஒரு மந்திரம் இருக்கிறது. சிரோதகத்தைப்

பிழிய ஒரு மந்திரம் ஏற்பட்டிருக்கிறது. ஆந்திர தேசத்தில் உத்தராபோசனத்துக்குப் பின்பு பாக்கி உள்ள ஜலத்தை எச்சில் இலைக்கு வலது புறத்தில் ஒரு மந்திரம் சொல்லி விட்டு விடுகிற ஸம்பிரதாயம் இருக்கிறது.

रौरवेऽपुण्यनिलये पद्मार्बुदनिवासिनाम् ।

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரௌரவம் ஒரு கடுமையான இடம். பாபத்திற்கு இருப்பிடம். பத்மம் என்பது ஒரு எண்ணிக்கை. அற்புதம் என்பதும் ஒரு எண்ணிக்கை. பல கோடி பத்மம், பல கோடி அற்புதம் எவ்வளவு வருஷங்களோ அவ்வளவு காலம் அந்த ரௌரவத்தில் இருந்து கஷ்டப்படுகிறவர்களும் இருக்கிறார்கள். 'அவர்களுக்கு இந்தத் தீர்த்தம் கொடுக்கிறேன்; அவர்களுக்குள்ள அக்ஷயமான தாஹம் தீரட்டும்' என்று அந்த தீர்த்தத்தை விடவேண்டும்.

நாம் வைஶ்வதேவம் பண்ணுகிறோம். அதற்குப் பதிலாக ஆந்திரர்கள் போஜன காலத்தில் ஐந்து பலி கொடுப்பார்கள். அதற்குச் சித்திராதி பலி என்று பெயர். அதாவது தனியாகச் சாதத்தை எடுத்து வைப்பார்கள். ஆபோசனத்துக்கப்புறம் ஒரு மந்திரத்தைச் சொல்லி ஜலத்தைவிட்டு உபஸம்ஹாரம் செய்வார்கள்.

இந்த லோகத்தில் ஸந்தோஷம் இருக்கிறது. இப்பொழுது இங்கே இருப்பவர்களுக்கு இங்கிருந்து எழுந்து போகிறவரையிலும் ஸந்தோஷம் இருக்கிறது. துக்கமும் இந்த லோகத்தில் இருக்கிறது. நாம் பிரயத்தினம் பண்ணினால் ஸுகம் அதிகமாக இருக்கிறது. ஸுகதுக்கங்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்றக்குறைவாக

இருக்கின்றன. சிலருக்கு ஸுகம் அதிகமாக இருக்கிறது; சிலருக்குக் குறைவாக இருக்கிறது. மனதைக் கட்டுப் படுத்தித் துக்கப்படாதவர்களும் இருக்கிறார்கள். எப்பொழுதும் துக்கப்படுகிறவர்களும் இருக்கிறார்கள். மற்றப் பிராணிகளிலும் இப்படி உள்ளவை இருக் கின்றன. ஒவ்வொருவருக்கும் மாத்திரைக் (Degree) கணக் கில் வித்தியாஸம் இருக்கிறது. ஸுக துக்கங்கள் சீதோஷ்ணத்தைப்போல் இருக்கின்றன. லோகங்க ளெல்லாம் தர்மாமீடர் (Thermometer) போல இருக் கின்றன. அந்தத் தர்மாமீடரில் கொதிக்கும் இடம் (Boiling Point) தான் நரகலோகம். உறையும் இடம் (Freezing Point) தான் ஸ்வர்க்கலோகம். இந்த இரண்டையும் மாற்றியும் வைத்துக்கொள்ளலாம். கொதிக்கும் இடத்தில் (Boiling Point) குளிர்ச்சி இல்லை. உறையும் இடத்தில் (Freezing Point) உஷ்ணமே இல்லை. மொத்தத்தில் மூன்று தினுஸுகள் இருக்கின்றன. உறையும் இடம் (Freezing Point), கொதிக்கும் இடம் (Boiling Point), இந்த இரண்டுக்கும் நடுவில் டிகிரிகள் (Degrees) உள்ள இடம், ஆக மூன்று உள்ளன. இந்த மூன்றையும் மூன்று லோகங்களுக்கு உபமானங்களாகச் சொல்லலாம். மேல் லோகம் ஒருவகை. அவை ஸத்திய லோகம், வைகுண்டம், கைலாஸம் என்பவைகள். உப நிஷத் இவைகளை ஒன்றாகச் சொல்லும். புராணங்கள் பிரித்துச் சொல்லும். கீழே இருப்பது நரக லோகம். மத்தியில் இருப்பது மிச்ர லோகம்.

நம்முடைய சாஸ்திரப்படி மற்ற லோகங்களை விட இந்த லோகந்தான் உயர்ந்தது. ஏன்? இதிலிருந்து எந்த லோகத்துக்கு வேண்டுமானாலும் போகலாம். மற்ற

லோகங்களுக்குப் போனல் இஷ்டப்படி அவ்விடம் விட்டுப்போக முடியாது. தர்மராஜா இவ்வளவு காலம் இருக்கவேண்டுமென்று எழுதி வைத்திருப்பான். நாமாக ஒன்றும் செய்ய முடியாது. இங்கே நமக்கு ஒரு தனி ஸ்வாதந்திரியம் இருக்கிறது. புண்ணியம் பண்ணலாம். பாபமும் பண்ணலாம். கையினல் பூஜையும் பண்ணலாம், அடிக்கலாம். நாக்கினல் நாம் பாராயணம் பண்ணலாம், அல்லது யாரையாவது வையலாம். இரண்டுக்கும் நமக்குச் சக்தி இருக்கிறது. இப்படி ஒவ்வொரு இந்திரியத்துக்கும் இரண்டுவித சக்தியைப் பகவான் கொடுத்திருக்கிருர். இந்த ஸ்வாதந்திரியம் மற்ற இடங்களில்லை. அவைகளெல்லாம் போகபூமிகள். மாடாகப் பிறந்தால் புண்ணியம் பண்ண முடியுமா? தேவர்களும் அந்த மாட்டைப் போன்றவர்கள்தான். மாட்டுக்குப் பாபமும் இல்லை; புண்ணியமும் இல்லை. இந்த லோகத்தில் கர்மாநுஷ்டானம் பண்ணி நல்ல கதியடையலாம். தேவலோகத்தில் அது முடியாது. கிருஷி பண்ணுகிற பூமிஸ்தானம் இது. பாக்கியெல்லாம் வயிற்றுக்குச் சாப்பிடுகிற ஸ்தானம். உற்பத்தி ஸ்தானம் அல்ல. அங்கே பலன்களை அநுபவிக்கலாம். எவ்வளவு புண்ணிய பாபம் பண்ணியிருக்கின்ருேமோ அவ்வளவு பலன்களை அநுபவிக்கலாம். அதனல் அவைகளுக்குப் போக பூமியென்ற பெயர் ஏற்பட்டது. பண்ணுகிற சக்தி இங்கேதான் உண்டு. இங்கு மனுஷ்ய ஜன்மத்திற்குத்தான் உண்டு. இந்த லோகத்தில்தான் உண்டு. மற்றவைகளெல்லாம் போகபூமிகளே. குணத்தில், நல்லது கெடுதல் இருக்கலாம். கர்மாவைப் பண்ண, மற்ற லோகங்களிலிருப்பவர்க்கு அதிகாரம் இல்லை.

கர்மா ஒன்று, குணம் ஒன்று. ஆக இரண்டும் சேர்ந்து ஜீவனை மற்ற லோகங்களுக்கு அழைத்துக் கொண்டு போகின்றன. வேலை செய்து பரலோகத்திற்குப் போவதற்கு இந்தக் கர்ம பூமியைத் தவிர இதர பூமிகளில் ஸாத்தியமில்லை. ஒரு கர்மாவைச் செய்ய வேண்டுமென்றால் அதற்குக் காலதேசம் வேண்டும். சிராத்தம் அர்த்தராத்திரியில் பண்ணலாமா? வழக்கம் இல்லை. அதற்கு ஏற்பட்ட காலம் உண்டு. அப்படியே அந்தக் கர்மா உபதேசிக்கப்பட்ட தேசம் ஒன்று இருக்கிறது. அந்தக் கர்மாவைப் புண்ணிய பூமியில் தான் பண்ணவேண்டும். முக்கியமாக பாரத வர்ஷத்தில் வைதிக கர்மாக்கள் பண்ணப்படவேண்டும். மற்றவைகளெல்லாம் போகபூமிகள். இந்த தேசத்திலும் சில காலங்கள் நிஷித்தமானவை. சில கர்மாக்களுக்குச் சில இடங்களும் நிஷித்தமானவை. பரிசுத்த இடத்தில் பரிசுத்த காலத்தில் கர்மாக்களைப் பண்ணவேண்டும். கர்மா என்றால் என்ன? கர்மா என்பது காரியம். ஒரு வேஷ்டியை உண்டாக்குவதற்கு எவ்வளவு காரியங்கள் செய்யவேண்டியிருக்கின்றன! அதைப்போல அநேக காரியங்கள் பண்ணி ஒருவனை ஆத்மவித்தாக்க வேண்டும். குணத்தினாலும் கர்மாவினாலும் வேலை செய்யவேண்டும். கர்மாவுக்கு ஸம்ஸ்காரம் என்று பெயர். ஒரு பதார்த்தத்துக்கு உள்ள தோஷத்தைப் போக்குவது எதுவோ, குணத்தைப் புகட்டுவது எதுவோ அதுதான் ஸம்ஸ்காரம். கேசஸம்ஸ்காரம் என்பது க்ஷவரம் செய்துகொள்வது, அழுக்கு பேன் முதலியவைகளை எடுப்பது, தைலம் தேய்ப்பது முதலியவைகளாம். ஜீவாத்மாவுக்குத் தோஷங்கள் இருக்கின்றன. தோஷத்தை நிவர்த்தி பண்ணிக் குணத்தை நிரப்பவேண்டும். சீப்பினால் வாரித்

தைலம் தேய்ப்பது போன்றது ஸம்ஸ்காரம். வயலில் சில ஸம்ஸ்காரங்கள் செய்யப்படுகின்றன. முதலில் காயப் போடவேண்டும்; பின்பு உழவேண்டும்; ஜலம்விட்டுப் பரம்படிக்கவேண்டும்; பிறகு விதைக்க வேண்டும்; நாற்றுப்பிடுங்க வேண்டும்; களை பிடுங்கவேண்டும்; ஜலம் பாய்ச்ச வேண்டும்; அதிக ஜலமிருந்தால் மடை திறந்து விட வேண்டும்; விளைந்தால் அறுவடை செய்யவேண்டும்; களத்தில் அடிக்க வேண்டும்; பதர் தூற்ற வேண்டும்; நெல்லைக் கோட்டை கட்ட வேண்டும்; பின்பு அந்த நெல் பழகவேண்டும். அப்புறம் அதை உபயோகிக்க வேண்டும். இவ்வளவு காரியங்கள் இருக்கின்றன. இப்படியே நூலாகி வேஷ்டியாக வேண்டுமென்றால் பல காரியங்கள் செய்யவேண்டியிருக்கின்றன. பஞ்சு யந்திர சாலையில் எவ்வளவு காரியங்கள் செய்யப்படுகின்றன. நம்முடைய ஆத்மாவானது சிக்கலாக இருக்கிறது. சிக்கலை எடுத்து எப்பொழுதும் ஆனந்தமாக இருக்கச் செய்யவேண்டும். அப்படிச் செய்வதற்குச் சில தடைகள் இருக்கின்றன. சில ஸமயங்களில் ஆனந்தம் உண்டாகிறது. வலி இருந்தும் இவ்வளவையும் மீறிக்கொண்டு கொஞ்சம் ஆனந்தம் உண்டாகிறது. அந்த ஆனந்தம் எப்பொழுதும் இருக்கவேண்டும்.

ஜீவனைப் பிரம்மலோகத்தில் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். ஈசுவர ஸந்நிதானத்தில் சேர்த்து விட்டால் அப்புறம் துன்பமே இராது. பிரளயத்துக்கு அப்புறம் ஐக்கியம் உண்டாகும். ஆகையால் அங்கே சேர்க்கத் தயார்பண்ண வேண்டும். அதற்கு 40 ஸம்ஸ்காரங்களும் 8 ஆத்ம குணங்களும் ரிஷிகள் சொல்லியிருக்கிறார்கள். பல தர்மஸூத்திரங்களை அவர்கள் செய்து

ஸம்ஸ்காரங்களைச் செய்யும் முறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் தான் ஸ்மிருதிகள். 28 ஸ்மிருதிகள் இருக்கின்றன. அவைகளில் 18 ஸ்மிருதிகள் பிரதானமானவை. மற்ற பத்து உபஸ்மிருதிகள். மனு, யாஜ்ஞவல்கியர், ஹாரீதர், பராசரர் முதலியவர்கள் ஸ்மிருதிகள் செய்திருக்கிறார்கள்.

இந்த ஸ்மிருதிகளைத் தவிர தர்ம ஸூத்திரங்கள் பொதுவாகச் சிலர் எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்குள் கௌதமர் ஒருவர். விசேஷமாகச் சொல்லப்பட்ட ஒவ்வொரு கல்பஸூத்திரத்திலும் ஸம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகள் ஒன்றுக்கொன்று வித்தியாஸமுள்ளனவாக இருக்கும். ஆபஸ்தம்பரும் கௌதமரும் எல்லோருக்கும் பொதுவானவைகளை எழுதியிருக்கிறார்கள். ஆபஸ்தம்பர் தனியாகவும் எழுதியிருக்கிறார். கௌதமர் 40 ஸம்ஸ்காரங்களையும் 8 ஆத்மகுணங்களையும் சொல்லியிருக்கிறார். ஜீவன் உடம்பை விட்டுப் பிரிந்தவுடன் நேரே பிரம்ம லோகத்துக்குப் போய்ச் சேர இந்த நாற்பத்தெட்டும் காரணங்களாக இருக்கின்றன. இவைகளால் அந்த ஸந்நிதானத்தில் இருக்கலாம். அது பரமஞானியினுடைய ஸந்நிதானத்தில் இருப்பது போல் இருக்கும். அசையாமல் ஆனந்தமாக இருக்கலாம். அவன் அரூபமாகிற பொழுது நாமும் கலந்து விடலாம்.

இந்த நாற்பது ஸம்ஸ்காரங்கள் கை கால் முதலியவைகளை ஆட்டிச் செய்ய வேண்டும். ஓர் உத்தியோகம் செய்ய வேண்டுமென்றால், கையைக் காலை ஆட்டியும், வாயை அசைத்தும் செய்கிறோமல்லவா? நாற்பது கர்ம

ரூப ஸம்ஸ்காரங்களும் எட்டு ஆத்ம குணங்களும் இருக்கின்றன.

यस्यैते चत्वारिंशत् संस्काराः अष्टावात्मगुणाः स ब्रह्मणः सायुज्यं सलोकतां जयति ।

யார் இந்த நாற்பத்தெட்டையும் அநுஷ்டிக்கிறானோ அவன் நேராக பிரம்ம லோகத்துக்குப் போகிறான். கஷ்டம் ஸுகம் என்பவை இல்லாத ஊருக்குப் போகிறான்; கஷ்டமும் ஸுகமும் இல்லாமல் எப்பொழுது இருக்கும்? எல்லாவற்றையும் ஏற்படுத்தினவனிடம் போனால் அப்படி யிருக்கலாம். ஆத்ம குணங்களை ஆத்ம சக்தி என்று சொல்லுகிறார்கள். அது லௌகிகமாக சொல்லுவது. பத்திரிகை வார்த்தை அது. ஆத்மாவுக்குச் சக்தி இல்லை. பழைய தமிழ் ஸம்ஸ்கிருத புஸ்தகங்களில் ஆத்ம சக்தி என்ற வார்த்தை இல்லை. ஆத்ம குணங்கள் தான் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை எட்டு.

நிஷேகாதி ச்மசானாந்தம் நாற்பது ஸம்ஸ்காரங்கள் சொல்லப்படுகின்றன. அதாவது தாயார் வயிற்றில் எந்த தினத்தில் தேஹகாரணமான பதார்த்தம் இருக்க ஆரம்பித்ததோ அதுமுதல் தேஹம் அக்னிக்கு ஆஹுதியாகிற வரைக்கும் நாற்பது காரியங்கள் செய்ய வேண்டும். நிஷேகமும் அக்னி ஸாக்ஷியாக செய்யப்படுகிறது; கடைசியில் ச்மசான கர்மாவும் அக்னி ஸாக்ஷியாகச் செய்யப்படுகிறது. அன்று முதல் அக்னியை அணையாமற் காத்து வரவேண்டும். பிரம்மசாரி ஸமிதாதானம் தினந்தோறும் பண்ணி அக்னி காரியம் செய்ய வேண்டும். கிருஹஸ்தன் ஔபாஸனம் செய்யவேண்டும்.

வானப்பிரஸ்தனுக்கும் கக்ஷாக்கினி என்று ஓரக்கினி சொல்லப்பட்டிருக்கிறது. அது காட்டிற் செய்வது. ஸந்நியாஸாசிரமத்தில் அக்னி இல்லை. அவனிடம் ஞானாக்கினி இருக்கிறது. அவனுடைய தேஹத்துக்கு அக்னி ஸம்ஸ்காரம் கிடையாது. புதைப்பது மரியாதைக்காகச் செய்வது. நியாயமாக அவனுடைய சரீரத்தை நாலாக வெட்டிக் காட்டில் நாலு திக்கில் போட்டுவிட வேண்டும். அது அங்கே உள்ள பிராணிகளுக்கு ஆகாரமாகும். ஜனங்களுக்கு உபத்திரவம் இல்லாமல் இருப்பதற்காகக் காட்டில் போடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யாவிட்டால் புதைத்து அதன்மேல் மரம் செடிகளை வைக்க வேண்டும். காட்டில் போட்டால் பிராணிகளுக்கு ஆகாரம் ஆகிறது. இப்படிச் செய்தால் மரங்களுக்கு எருவாக ஆகிறது. இப்பொழுது பிருந்தாவனம் கட்டுவது முதலியவை மரியாதைக்காகச் செய்பவை. பில்வம், அசுவத்தம் முதலிய பெரிய மரங்களை வைக்கவேண்டுமென்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

விவாஹ காலத்து அக்கினியை ஒவ்வொருவரும் அணையாமல் வைத்துக்கொண்டு அந்த அக்கினியிலேயே தேஹத்தையும் திரவ்வியமாக ஆஹுதிபண்ணி ஔபாஸனம் செய்யவேண்டும். எல்லோருக்கும் அக்கினி உண்டு. விவாஹ காலத்தில் எல்லா வர்ணத்தாரும் ஔபாஸனம் பண்ணவேண்டும். எல்லாரும் அக்கினியைக் காப்பாற்றி வரவேண்டும். இப்பொழுது பாரஸீகர்கள்தாம் அக்கினியைக் காப்பாற்றி வருகிறார்கள். அவர்களுடைய மதம் நம்முடையதிலிருந்து பிரிந்ததுதான். அவர்களுடைய மதக்கிரந்தத்திற்கு

'ஜெண்டவஸ்தா' என்று பெயர்; சந்தோவஸ்தை என்பது அப்படி வந்திருக்கிறது. ஜொராஸ்த்ரர் என்பவர் அவர்களுடைய ஆசார்யர். அப்பெயர் ஸௌராஷ்ட்ரர் என்பதன் சிதைவுதான். இரான் தேசம் அவர்களுடையது. ஆர்யதேசம் என்பது அப்படி மாறிவிட்டது. அவர்கள் அக்கினி அணைந்துபோனால் அதிகச் செலவு செய்து பெரிய பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ளுகிறார்கள். நம்மிடத்தில் அக்கினி காரியம் 30 வருஷ காலமாகக் குறைந்துவிட்டது. வாழ்க்கை மாறிவிட்டது. அதிக சிரத்தை இருந்தால் வைத்துக் கொண்டிருக்கலாம். சிரத்தை இல்லாததற்கு இந்தக் காலப் படிப்பு ஒரு காரணம்.

இந்தத் தேஹத்தால் பிரயோஜனம் ஒன்றும் இல்லை. இதையும் கடைசியாக ஆஹுதியாகத் தேவதைகளுக்கு ஹோமம் செய்துவிட வேண்டும். அதற்காகத் தான் நெய்யைப் போட்டுத் திரவ்வியமாக இதை வைத்து ஹோமமாக்க் கொடுக்கவேண்டும்.

# 2. ஆரம்ப ஸம்ஸ்காரங்கள்

[15—11—1932]

ஜீவாத்மாவுக்குப் பரிசுத்தி ஏற்படுவதற்காக 40 ஸம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவென்று சொன்னேன். அவை கார்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மா, நாமகரணம். அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம், பிராஜாபத்தியம் முதலிய வேத விரதம் 4, ஸ்நானம், விவாஹம் அல்லது ஸஹதர்மசாரிணீ ஸம்பிரயோகம், பஞ்சமஹாயஜ்ஞங்கள் என்னும் பத்தொன்பதும், பாகயஜ்ஞங்கள் ஏழும். ஹவிர்யஜ்ஞங்கள் ஏழும் ஸோமயஜ்ஞங்கள் ஏழும் ஆக இருபத்தொன்று ஆகும். அஷ்டகை, அன்வஷ்டகை, பார்வணம், சிராவணி, ஆக்ரஹாயணி, சைத்ரி, ஆஶ்வயுஜி என்ற ஏழும் பாகயஜ்ஞங்கள். அக்கினியாதானம், அக்கினிஹோத்ரம், தர்சபூர்ணமாஸம், ஆக்கிரயணம், சாதுர்மாஸ்யம், நிரூடபசுபந்தம். ஸௌத்திராமணி என்ற ஏழும் ஹவிர்யஜ்ஞங்கள். அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்த்யம்: ஷோடசி, வாஜபேயம், அதிராத்திரம், அப்தோர்யாமம் என்னும் ஏழும் ஸோமயஜ்ஞங்கள். இவ்வளவும் சேர்ந்து 40 ஸம்ஸ்காரங்கள் ஆகும். இந்த ஸம்ஸ்காரங்களில் தினந்தோறும் பண்ணவேண்டியவை சில இருக்கின்றன. சில காலங்களில் பண்ண வேண்டியவை சில. ஆயுளில் ஒருதரம் பண்ண வேண்டியவை சில. இவைகளுக்குள் நன்றாகத் தெரிந்து கொண்டு செய்யவேண்டிய முக்கியமான ஸம்ஸ்காரங்கள்

பஞ்சமஹாயஜ்ஞங்கள். அவை தினந்தோறும் செய்ய வேண்டியவை.

பஞ்சமஹாயஜ்ஞங்கள்-பிரம்மயஜ்ஞம், தேவயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், மனுஷ்யயஜ்ஞம், பூதயஜ்ஞம் என்பவை. மற்றவைகளில், அநேகம் ஜன்மத்தில் ஒருதரம் பண்ண வேண்டியவைகளாக இருக்கும். ஔபாஸனம், அக்னி ஹோத்ரம் ஒவ்வொரு நாளும் பண்ணவேண்டும். தர்ச பூர்ணமாஸம் பதினைந்து நாளைக்கு ஒருதரம் பண்ண வேண்டும். இவைகளில் ஔபாஸனம் பாகயஜ்ஞத்தைச் சேர்ந்தது; மற்ற இரண்டும் ஹவிர்யஜ்ஞங்களைச் சேர்ந்தவை. பாகயஜ்ஞங்கள் எல்லாம் வருஷத்துக்கு ஒருதரம் செய்யவேண்டும். ஏழு ஸோமயஜ்ஞங்களும் மற்ற ஸம்ஸ்காரங்களும் ஜன்மத்தில் ஒருதரம் பண்ணினால் போதும். இவைகளை வேறுவிதமாக வகுத்துச் சொல்லுகிறேன்.

நித்தியம் செய்யவேண்டியவை ஏழு; அவை பஞ்சமஹாயஜ்ஞங்கள், அக்கினி ஹோத்ரம், ஔபாஸனம் என்பவை. தர்சபூர்ணமாஸம், பக்ஷத்திற்கு ஒருதரம் செய்யவேண்டியது. ஸம்வத்ஸரத்துக்கு ஒருதரம் செய்ய வேண்டிய ஔபாஸனத்தைத் தவிரப் பாக்கியுள்ள ஆறு பாகயஜ்ஞங்களும் மற்றவை எல்லாம் ஜன்மத்தில் ஒரு தரம் செய்யவேண்டியவை.

ஒருபோகம் விளையும் நிலங்களில் அறுப்பறுக்கிறது வருஷத்துக்கு ஒருதரம். ஜலம் தினந்தோறும் பாய்ச்ச வேண்டும். இவைகளெல்லாம் ஸம்ஸ்காரங்கள். ஆனாலும் அவைகளுக்குள் வித்தியாஸம் இருக்கிறது, அவைகளைப் போன்றவைதான் இந்த ஸம்ஸ்காரங்களும்.

கர்ப்பாதானம் முதற்கொண்டு ஸம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. தாயார் வயிற்றில் தேஹம்

ஏற்படுகிற க்ஷணம் முதல் ஸம்ஸ்காரங்கள் ஆரம்பமாகின்றன. சரீர பிண்டமானது மந்திரபூர்வமாக உற்பத்தியாகவேண்டும். கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம் என்பவை தாயார் தேஹத்துக்கு ஏற்பட்ட ஸம்ஸ்காரமென்று நினைக்கிறார்கள். அது தப்பு. அவை உள்ளேயிருக்கிற ஜீவனைக் குறித்தவை. அந்த ஜீவனுடைய பரிசுத்திக்காக ஏற்படுபவை. கர்ப்பத்திலுள்ள வேறொரு ஜீவனை உத்தேசித்துப் பண்ணப்படுபவைகளாதலினால் அந்த ஸம்ஸ்கார விஷயத்தில் தாயார் முதலியவர்களுக்குப் பொறுப்பு அதிகம். தங்களுக்காக என்றால் வேண்டாம் என்று எண்ணலாம். வேறொரு ஜீவனுக்காகயிருப்பதால் அநாதரவு பண்ணக்கூடாது.

தேஹம் வெளியில் வருவதற்கு முன்பு பண்ணப்படுபவை, கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம் என்னும் மூன்று ஸம்ஸ்காரங்களும். பும்ஸவனம் மூன்றாவது மாதக் கர்ப்பத்தில் செய்யவேண்டும். ஆறு அல்லது எட்டாவது மாதத்தில் ஸீமந்தம் பண்ணவேண்டும். இவ்வளவு ஸம்ஸ்காரங்களையும் பரமேசுவரப் பிரீதிக்காகப் பண்ணுகிறேன் என்று ஸங்கல்பம் செய்துகொண்டு பண்ணவேண்டும். இவ்வளவும் அவருடைய கிருபையைப் பெறுவதற்காகத்தான் பண்ணுவது.

நம்முடைய ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் கைலாஸத்திற்குப் போகும்பொழுது சிஷ்யர்களெல்லாம், பரமேசுவரனுடைய கிருபையைப்பெற ஸுலபமான வழி ஒன்று சொல்லவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். இதுவரையிலும் சொன்ன வேதாந்த விஷயங்களில் ஒன்றும் புரியவில்லை. ஸுலபமாக ஒன்று சொல்லவேண்டும்

என்று வேண்டிக் கொண்டார்கள். அப்பொழுது ஸ்ரீ ஆசாரியர்கள் ஐந்து சுலோகங்களைச் சொன்னார்.

वेदो नित्यमधीयतां तदुदितं कर्म स्वनुष्ठीयतां
तेनेशस्य विधीयतामपचितिः काम्ये मतिस्त्यज्यताम् ।
पापौघः परिधूयतां भवसुखे दोषोऽनुसन्धीयताम्
आत्मेच्छा व्यवसीयतां निजगृहात्तूर्णं विनिर्गम्यताम् ॥ १ ॥

என்பது அவைகளில் ஒன்று. 'நித்தியம் வேதாத்தியயனம் செய்யவேண்டும். கர்மாவைத் தவறுமல் அநுஷ்டானம் பண்ணு. அந்தக் கர்மாதான் ஈசுவர பூஜை. அவர் எந்த எந்தக் காரியத்தை எப்பொழுது பண்ணச் சொல்லியிருக்கிறரோ அப்படிச் செய்து வருவதுதான் பூஜை' என்ற கருத்து இதில் இருக்கிறது. சிலபேர் உத்ஸவம், பூஜை, பஜனம் முதலியவை பண்ணிக்கொண்டிருக்கிறர்கள். வேறு சிலபேர் ஔபாஸனம், அக்கினி ஹோத்ரம் செய்து கொண்டிருக்கிறர்கள். அவர்களைப் பார்த்துப் பூஜை பண்ணுகிறவர்கள், "இவர்கள் என்ன பண்ணி என்ன பிரயோஜனம். கொஞ்சங்கூடப் பக்தி கிடையாது?" என்று தூஷிக்கிறர்கள். அவர்கள் இவர்களைப் பார்த்து, கொஞ்சங்கூட ஆசார அநுஷ்டானங்கள் இல்லை. தாளம் போட்டுக்கொண்டிருக்கிறர்கள். மிலேச்சரைப்போல இருக்கிறர்கள். அகங்காரந்தான் இருக்கிறது" என்று சொல்லுகிறர்கள். நியாயமாக மத்தியஸ்தமாகப் பார்த்தால் கர்மாநுஷ்டானம் பண்ணுவதுதான் பெரிய பக்தி என்று தெரியவரும். அதுதான் பஜனை.

ஒரு பிரபுவிடம் இரண்டு வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். ஒருவன் எப்பொழுதும் எதிரில் நின்று கொண்டு பிரபுவை ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டே இருக்கிறான். மற்றொருவன் பேசவே மாட்டான், எதிரில் வர மாட்டான். பிரபு எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று மனதில் நினைக்கிறாரோ அந்தக் காரியத்தைச் செய்வான். பொதுஜனங்கள் கிட்ட இருக்கிறவனிடத்தில்தான் பிரபுவுக்குப் பிரியம் என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் வேலை செய்கிறவனிடந்தான் அவனுக்குப் பிரியம் இருக்கும். அசடனாயிருந்தால்தான் ஸ்தோத்திரம் பண்ணுபவனிடத்தில் அதிகப் பிரியமாக இருப்பான். அவனைப்போல ஈசுவரன் அசட்டுப் பிரபுவாக இருந்தால் வெறும் ஸ்தோத்திரம் செய்பவனிடத்தில் அதிகப் பிரியமாக இருப்பான். அவன் விதித்த கர்மாநுஷ்டானங்களைச் செய்வதுதான் பூஜை. அதனால் தான் 'பரமேசுவரப்ரீத்யர்த்தம்' என்று ஸங்கல்பம் செய்துகொண்டு கர்மாக்களைச் செய்ய வேண்டும். வாஸ்தவமான கர்மாநுஷ்டானம், பக்தியும் கர்மாவும் கலந்ததுதான். அதனால்தான் நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்கள் கர்மாநுஷ்டானம் செய்வதுதான் பரமேசுவர பூஜை என்று சொல்லியிருக்கிறார்.

இவ்வளவுக்கும் அஸ்திவாரம் பரமேசுவரனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டுவது. கடைசியில் **कृष्णानुस्मरणं परं** என்று சொல்லுகிறோம். எல்லா ஸம்ஸ்காரத்துக்கும் தனித்தனியாக மந்திரங்களையும் அர்த்தத்தையும் சொல்லுவது என்பது முடியாத காரியம். எல்லாவற்றிற்கும் முதலில் ஸங்கல்பமும் கடைசியில் அர்ப்பணமும் செய்கிறோம். இந்த இரண்டும் இன்னவை,

இன்ன அர்த்தம் உடையவை என்று தெரிந்தால் நல்லது.

லௌகிகர்களுக்கு ஸங்கல்பம் முதலியவைகளில் நிரம்ப அசிரத்தை இருக்கிறது. ஏதோ உபாத்தியாயர் சொன்னரென்று நினைக்கிருர்கள். அசட்டை செய்கிருர்கள். அவற்றின் அர்த்தம் தெரிந்து கொள்ளுவது கஷ்டமான காரியம் அல்ல. சிரத்தை யிருந்தால் தெரிந்து கொள்ளலாம். அமெரிக்காவில் நடக்கிற பரீக்ஷைக்கு என்ன பாடம் (Syllabus) என்பதைத் தெரிந்து கொள்ளுகிருர்கள். எதையும் சிரத்தையிருந்தால் தெரிந்து கொள்ளலாம்.

यदेव विद्यया करोति श्रद्धयोपनिषदा तदेव वीर्यवत्तरं भवति ।

(சாங்தோக்யோபநிஷத்)

यदेव विद्ययेति हि । (பிரம்மஸூத்திரம்.)

ஒரு கர்மாவை அர்த்தம் அறிந்து கொண்டு பண்ணினல் அது வீர்யவத்தரம் ஆகிறது. தரம் என்பதனல் அறிவில்லாமல் பண்ணினல் வீர்யவத் ஆகிறதென்று தெரிகிறது என்று ஸ்ரீ ஆசார்யர்கள் சொல்லியிருக்கிருர்கள். எனக்கு ஒன்று தோன்றுகிறது: தெரிந்து கொள்ளாமற் பண்ணினல் அதிகப் பிரயோஜனம் உண்டு; தெரிந்தால் அவ்வளவு இல்லை என்று எனக்குத் தோற்றுகிறது. அது எப்படி?

ஒரு கலெக்டர் இருக்கிருர். அவருக்கு ஒருவர் வக்கீலை வைத்து மனு எழுதுகிருர். ஒரு குடியானவன் யாராவது ஒருவரிடம் எழுதி கலெக்டரிடம் நேரில் கொடுக்கிருன். அவனுக்கு ஓரெழுத்துக்கூட தெரியாது. 'எப்படியாவது நல்லது பண்ணவேண்டும்' என்று மனுவைக் கொடுக்

கிறுன். கலெக்டர் பார்த்தார் 'பாவம்! ஒன்றும் தெரியாது! நம்பிக்கை மாத்திரம் இருக்கிறது' என்று எண்ணி நல்லது பண்ணுவார்.

அதைப்போன்றதுதான் மந்திரமும். மந்திரத்துக்கு அர்த்தம் ஈசுவரனுக்குத்தான் தெரியும். நாம் போக்கிரித்தனமாக இருக்கக்கூடாது. வக்கீல் வைத்துப் பேசினுல் குற்றமானுல் கலெக்டர் கோபித்துக் கொள்ளுவார். தெரிந்து தப்பாகப் பண்ணினுல் அதிகக் கோபம் உண்டாகும். தெரியாமல் தப்பாக இருந்தால் தெரியாமல் பண்ணுகிறுன் என்று மன்னிப்பு ஏற்படும். 'என்ன ஸார்! அர்த்தம் தெரியவில்லை. அதைப் பண்ணி என்ன பிரயோஜனம்?' என்று சொல்லுவது தப்பு. அர்த்தம் தெரியாமல் பண்ணுவதுதான் வீர்யவத்தரமாக எனக்குத் தோன்றுகிறது.

எல்லா ஸம்ஸ்காரங்களுக்கும் ஆரம்பத்தில் பரமேசுவரப் பிரீதிக்காக என்ற ஸங்கல்பமும் கடைசியில் 'ஜனார்த்தன: பிரீயதாம்' என்பதும் சொல்லவேண்டும். அந்த இரண்டினுடைய அர்த்தங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

ஸங்கல்பத்தில் முதலில் தேச காலக் கணக்கு சொல்லப்படும். அவைகளை முன்பு ஒரு நாள் சொன்னேன்.

ममोपात्तसमस्तदुरितक्षयद्वारा परमेश्वरप्रीत्यर्थम् ।

என்று பின்பு சொல்லுகிறேம்.

'என்னுல் ஸம்பாதிக்கப்பட்ட எல்லா பாபங்களையும் போக்கிப் பரமேசுவரனுடைய பிரீதி உண்டாகும் பொருட்டு' என்பது இதன் அர்த்தம். இன்று வரையில் நாம் நிறையப் பாபத்தை

ஸம்பாதித்திருக்கிறோம். அந்த ஸாமான் கஷ்டமானது. அதைப் போக்கவேண்டும்; அலம்பவேண்டும், அதனால் என்ன பிரயோஜனம்? நம்முடைய ஹிருதயம் பரமேசுவரனுடைய ஸ்தானம். அதில் குப்பை நிறைய இருக்கிறது, நான் இங்கே பூஜைக்கு வருகிறேன். அப்பொழுது இங்கே குப்பை நிரம்ப இருந்தால் மிகவும் வருத்தமாக இருக்கும். குப்பையை எடுத்துவிடவேண்டும். நம்முடைய ஹிருதயத்திலுள்ள குப்பையைப் போக்கவேண்டும். அப்பொழுதுதான் ஸ்வரூபம் தெரியும். இப்பொழுது பிரகாசம் தெரியாமல் ஆபாஸமாக இருக்கிறது. வந்து உட்காரவேண்டுமானாலும் இருக்கிற குப்பையைப் போக்க வேண்டும். இரண்டு விதத்திலும் குப்பைகள் போக்க வேண்டும். நமக்கோ குப்பையைச் சேர்க்கிறதே தொழிலாக இருக்கிறது. துரிதக்ஷயத்வாரா, அதாவது பாபம் போன வழியாகப் பரமேசுவரனுடைய பிரீதி உண்டாகும். எல்லாவிதமான கர்மாக்களும் அதற்காகத்தான் ஏற்படுகின்றன. மற்ற மந்திரங்களுக்கு எவ்வளவு அர்த்தம் இருந்தாலும் இந்த மந்திர அர்த்தம் தெரிந்து பரமேசுவர பிரீதியை உத்தேசித்துச் சொன்னால் தான் பிரயோஜனப்படும்.

ஒரு காரியத்தில் தவறிப்போனால் பிராயச்சித்தம் பண்ணுகிறோம். அகால ஸந்தியாவந்தனத்துக்காகப் பிராயச்சித்த அர்க்கியம் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பிராயச்சித்தத்திலும் தப்பு வந்தால் என்ன பண்ணுகிறது. அதற்காக எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒரு பிராயச்சித்தம் இருக்கிறது. ஹேமாத்ரி என்று ஒரு புஸ்தகம் இருக்கிறது. அது பிராயச் சித்தங்களைப் பற்றிச் சொல்லுகிறது.

எல்லா பிராயச் சித்தத்துக்கும் மேலான பிராயச் சித்தம் கிருஷ்ணஸ்மரணம். முதலில் பரமேசுவர ஸ்மரணம்; கடைசியில் கிருஷ்ண ஸ்மரணம் செய்ய வேண்டும். இவை சிவ விஷ்ணு அபேதத்தையும் காட்டுகின்றன. இப்படி நினைத்து உற்பத்தி முதல் அவஸான காலம் வரையில் பரமேசுவரனுடைய ஞாபகத்தோடு கர்மாக்களைச் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மந்திரமும் ஒவ்வொரு தேவதையின் த்வாரா அர்ப்பணம் பண்ணப்படுகிறது. நாம் வரி செலுத்துகிறோம். அவைகளெல்லாம் ஒரே ராஜாங்கத்துக்குப் போகின்றன. தொழில் வரி, மோட்டார் வரி, நிலவரி முதலிய பலவரிகள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோரிடம் உண்டு. ஒவ்வொரு முத்திரைக் கடுதாசி உண்டு. அதுபோல ஒவ்வொரு கர்மாவுக்கும் காலம்,மந்திரம், தேவதை,திரவியம் என்று தனித்தனியே பிரிவுண்டு. ஒவ்வொன்றுக்கும் கிரமம் வேறு வேறாக இருந்தாலும் எல்லாவற்றிற்கும் பரம தாத்பரியம் பரமேசுவரனுக்கு அர்ப்பணம் பண்ணுவதுதான். நாம் செலுத்துகிற வரிகளைப் பற்றியும், வரி செலுத்துகிற நம்மைப் பற்றியும் நம்முடைய அரசனுக்கு நன்றாகத் தெரியாது. பரமேசுவரனாகிய அரசனுக்கு ஒவ்வொருவருடைய விஷயமும் நன்றாகத்தெரியும்.

ஒவ்வொரு கர்மாவுக்கும் மந்திரம், திரவியம், தேவதை என்ற மூன்று கிரமங்கள் உண்டு.

பிறப்பதற்கு முன்பு செய்ய வேண்டிய மூன்று கர்மாக்களைச் சொன்னேன். பிறந்தவுடன் ஜாதகர்மா செய்ய வேண்டும். அப்புறம் பதினோராவது நாள் நாமகரணம் செய்ய வேண்டும். ஆறாவது மாதம் அன்னப்பிராசனம்

பண்ண வேண்டும்; முதலில் அன்னத்தை ஊட்டுகிற கர்மா அது. அதுவும் பரமேசுவர பிரீதியாகச் செய்ய வேண்டும்.

கர்ப்பாதானம் முதல் நாமகரண பரியந்தம் உள்ளவை குழந்தைக்காகப் பெற்றோர்கள் பண்ணுபவை. தாயார் மருந்து சாப்பிட்டால் குழந்தைக்குத் தேஹபரிசுத்தி ஏற்படுகிறது. அதைப்போலவே தாயார் தகப்பனுடைய சித்தவிருத்தி எப்படி இருக்கிறதோ அப்படியே உள்ளே இருக்கும் ஜீவனுக்கும் ஸாத்விகஸ்வபாவமோ, பாப அபி விருத்தியோ உண்டாகும். மனது சாந்தமாக இருந்து ஒரு ஸமாசாரம் எழுதி அதைப் படித்துப் பார்த்தால் நன்றாயிருக்கும். கோபமாக இருக்கும் பொழுது எழுதி அப்புறம் பார்த்தால் நன்றாக இருப்பதில்லை. சரீரத்திலும் அப்படியே குண தோஷங்கள் ஏற்படுகின்றன. அவயவஸந்நிவேசம் உண்டாகும்பொழுது தாய் தகப்பனுக்கு எந்தக் குணம் ஏற்படுகிறதோ அது உள்ளே இருக்கும் ஜீவனுக்கும் உண்டாகும். மனோ பாவனையை அநுஸரித்துக் குணங்கள் ஏற்படுகின்றன.

இத்தகைய கர்மாக்களைப் பணக்காரர்கள் உரிய காலத்தில் பண்ணாமல் சேர்த்துப் பண்ணி விடுகிறார்கள். வைதிகர்கள் கிரமமாகப் பண்ணுகிறார்கள்; ஆனால் அவர்கள் அதையே ஜீவனமாக வைத்துக்கொள்ளுகிறார்கள். மற்றவர்கள் எதையும் கவனிப்பதில்லை. அந்த அந்தக் காலத்தில் அந்த அந்த மந்திரத்தைச் சொல்லி அந்த அந்த திரவியங்களைக் கொண்டு அந்த அந்த ஸம்ஸ்காரத்தைச் செய்யவேண்டும். எல்லாவற்றுக்கும் பெரிய காரியம் பரமேசுவரார்ப்பணம் பண்ணிச் செய்வது.

அன்னப்பிராசனத்துக்கப்புறம் சௌளம் செய்ய வேண்டும். அது சிகை வைக்கிறது. அந்தக் கர்மாவும் பகவானுக்கு அர்ப்பணம் பண்ணப்பட வேண்டும். ஸத் கர்மாவுக்கு உபயோகமாக இருக்க அது பண்ண வேண்டும். சிகை எடுப்பது மந்திரபூர்வமாக எடுக்க வேண்டும். ஸந்நியாஸிகள் மந்திரபூர்வமாகத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மந்திரபூர்வமாக வைத்துக்கொண்ட சிகையைப் பரமேசுவரனுக்கு முன்பு பண்ணின பிரதிஜ்ஞைக்கு விரோதமாக இஷ்டப்படி எடுத்துவிடுவது தப்பு. சிகையை எடுப்பது ஒரு பெரிதா என்று கேட்கலாம். பொய் சொல்லுகிறது தப்பு அல்லவா? அது எவ்வளவு தப்போ அவ்வளவு தப்பு இதுவும். பரமேசுவரப்பிரீதியாக ஸங்கல்பம் பண்ணிக் கொண்டு ஸம்ஸ்காரம் பண்ணி, வைத்துக்கொண்டதைக் கிள்ளுக்கீரையாக எண்ணி மனம்போனபடி எடுக்கக் கூடாது. சிவலிங்கப் பிரதிஷ்டை செய்கிறார்கள். வேல், ஸாளக்கிராமம் வைத்துப் பூஜை செய்கிறார்கள். பின்பு கோபித்துக்கொண்டு எடுத்து எறிந்துவிடலாமா? அகஸ்மாத்தாகப் போனால்—திருடன் கொண்டுபோனால் பாதகம் இல்லை. நாமாக வைத்ததை நாமாக வேண்டுமென்று மாற்றுவது பெரிய தப்பு. சௌளத்தைமட்டும் ஸங்கல்பத்தோடு பண்ணிக்கொண்டு அப்புறம் இஷ்டப் படி பண்ணுவது தப்பு. இப்படி பண்ணுகிறவர்கள் முதலில் அதைப் பண்ணாமல் இருக்கவேண்டும். மந்திர பூர்வமாக வைத்த சிகையை இஷ்டப்படி எடுப்பது தப்புத்தான். அதற்காகத்தான் ஸந்நியாஸாசிரமத்தில் அதை எடுக்கும்பொழுது மந்திரபூர்வமாக எடுக்கிறார்கள்.

ஜாதகர்மா முதலியவற்றை இனிமேல் பண்ண முடியாது. புனருபநயனம் பண்ணலாம். அதற்குக்கீழே இருப்பவற்றைச் செய்ய முடியாது. உபநயனம் அறிவு வந்தபோது செய்வது. 'பிக்ஷாசர்யம் சர' அதாவது 'பிக்ஷை எடு' என்று ஆசாரியன் சொன்னால் 'பாடம்' என்று அவன் பதில் சொல்லுகிறான்; உபநயன காலத்துக்கு முன்பே ஸம்ஸ்கிருத ஞானம் இருக்கவேண்டும். அப்பொழுது உபநயன மந்திரம் சொன்னால் அர்த்தம் தெரியும். குழந்தைக்குத் தெரிந்தால் நிரம்ப பக்தி உண்டாகும். குழந்தைப் பருவத்திலேயே நமது மனதில் நாஸ்திக்யம் வந்துவிட்டது. அதனால் அது பலமாக இருக்கிறது. ஆஸ்திகத்தை அப்படியே போதித்தால் அதுவும் பலமாக நிற்கும்.

உபநயனம் முதல் பண்ணப்படும் ஸம்ஸ்காரங்கள் அறிவு வந்த பின்பு ஏற்படுபவை.

எந்த ஸம்ஸ்காரத்தையும் உரிய காலத்தில் பண்ண வேண்டும். அதனால் பாபபரிகாரம் ஏற்படுகிறது. வேறொரு காரியம் பண்ணிப் பாபம் ஸம்பாதித்திருக்கிறோம். அதை நீக்க மனம் வாக்குக் காயங்களால் ஸம்ஸ்காரம் பண்ணவேண்டும். நாம் பாபம் அந்த மூன்றினாலேயும் பண்ணியிருக்கிறோம். மனதால் கெட்ட எண்ணம் நினைத்திருக்கிறோம். வாக்கால் பொய் பேசியிருக்கிறோம். தேஹத்தால் பொய் பண்ணியிருக்கிறோம். பொய் பண்ணுவது என்ன? பாசாங்கு பண்ணுவதுதான் பொய் பண்ணுவது. மனோ வாக்காயங்களால் பண்ணிய பாபங்களை அவைகளாலே காரியங்களைப் பண்ணிப் போக்கிக்கொள்ள வேண்டும்.

மனதினால் பரமேசுவரத்தியானம் பண்ணி அர்ப்பணம் பண்ணவேண்டும்; வாக்கினால் மந்திரம் சொல்ல வேண்டும்; காயத்தால் காரியம் பண்ணவேண்டும். இந்த மூன்றினாலும் ஸம்ஸ்காரம் பண்ணி மூன்றினாலும் பண்ணின பாபத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். எல்லாம் பரமேசுவரப்பிரீதிக்காக என்று எண்ணிச் செய்யவேண்டும். எல்லாவற்றையும் பரமேசுவரார்ப்பணம் பண்ணவேண்டும். எதையும் காலத்திற் பண்ண வேண்டும்.

ஸம்ஸ்காரங்களைச் செய்து வந்தால் நல்ல ஸந்ததி உண்டாகும். வைதிகஸந்ததியார் சிஷ்டர்களாக இருக்கிறார்கள். புத்தி அவர்களுக்கு அதிகமாக இருக்கிறது. அது ஸம்ஸ்காரப் பிரயோஜனந்தான். முன்பு இருந்தவர்கள் செய்தது இரண்டு அல்லது மூன்று தலைமுறைக்கு அஸ்திவாரமாக இருக்கிறது. அந்த எல்லை தாண்டிப்போனால் அப்புறம் கஷ்டந்தான். வைதிக ஸந்ததியிற் பிறந்த குழந்தைகள் லௌகிகத்தில் பிரவேசித்தால் அதிகமாகக் கீழே போகிறார்கள். மடை அடைத்துவைத்ததைத் திறந்து விட்டால் வெகுவேகமாக ஜலம் போகிறமாதிரி அவர்கள் தாம் கடுமையாக லௌகிகத்தில் இறங்கிவிடுகிறார்கள்.

நம்முடைய முன்னோர்கள் ஸம்ஸ்காரம் பண்ணவில்லை; அதனால் நமக்கு நன்மை உண்டாகவில்லை என்ற குறை நமக்கு இருக்கலாம். அதைப்போல நம்முடைய குழந்தைகள் குறைகூறாமல் நாம் நல்ல ஸம்ஸ்காரங்களைப் பண்ணி வைக்கவேண்டும்.

# 3. பிரம்மசரியமும் விவாஹமும்

[16—11—1932]

மாதா பிதாக்களிடத்தில் ஏதாவது பாபதோஷங்களிருந்தால் அவை அவர்களிடத்திலுண்டாகிற ஜீவனையும் பாதிக்கும். அதற்காக ஒரு ஜீவன் யாருடைய கர்ப்பத்தில் வாஸம் பண்ணுகிறதோ எந்தப் பிதாவால் உண்டாகிறதோ அவர்களுடைய தோஷங்கள் அந்த ஜீவனுக்கு ஏற்படாமலிருப்பதற்காக ஸம்ஸ்காரங்கள் செய்யவேண்டும். மாதா பிதாக்களிடம் துர்க்குணங்கள் உண்டு. அவை அவர்களால் ஏற்படும் ஜீவன்களுக்கு உண்டாகாமலிருக்க ஸம்ஸ்காரங்கள் செய்யவேண்டும். அந்த தோஷங்கள் கார்ப்பிகம் என்றும் பைஜிகம் என்றும் இரண்டு வகைப்படும். கார்ப்பிகம் தாயால் உண்டாவது; பைஜிகம் தந்தையால் உண்டாவது. இந்த தோஷங்களின் நிவாரணத்திற்காக உபநயனம் வரையில் உள்ள ஸம்ஸ்காரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைச் செய்யவேண்டியவர்கள் மாதா பிதாக்கள். உபநயனம் வரைக்கும் ஸம்ஸ்காரங்களைச் செய்துகொள்ள புத்திரனுக்கு அருஹமான வயது வரவில்லை.

உபநயனம் என்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன? நயனம் என்றால் அழைத்துக்கொண்டுபோவது என்று அர்த்தம். नयतीति नयनम् । கண்ணுக்கு நயனம் என்று பெயர். அது நம்மை அழைத்துக்கொண்டு போகிறது. அது எப்படித் தெரியும்? கண் இல்லாத பொழுது அது தெரிகிறது. அப்பொழுது ஒருவன் அழைத்துக்கொண்டு போகவேண்டும். அந்தக் காரியத்தைத்தான் கண்

செய்கிறது. நாயகன் (Leader) அழைத்துக்கொண்டு போகிறவன். உப-சமீபத்தில், நயனம்-உபநயனம் கிட்ட அழைத்துக்கொண்டு போகிறது. யார் கிட்ட அழைத்துக்கொண்டு போகிறது. ஒருவனைக் குருவுக்கு ஸமீபத்தில் அழைத்துக்கொண்டு போகிறது உபநயனம். குரு யார்? வேதவித்துக்கள். முதல் ஆசிரமத்துக்கு ஒரு குரு; கடைசி ஆசிரமத்துக்கு ஒரு குரு. முதல் ஆசிரம குரு வேதவித். கடைசி ஆசிரமத்துக்குக் குரு பிரம்மவித். வேத வேதாங்கம் அறிந்தவர்கள் முதல் ஆசிரமத்துக்குக் குரு. எல்லாவற்றையும் விட்டு பிரம்மஜ்ஞானம் அடைந்தவர்கள் கடைசி ஆசிரமத்துக்குக் குரு. வித்தையைத் தெரிந்துகொள்வது முதல் ஆசிரமம். ஞானத்தைத் தெரிந்துகொள்வது கடைசி ஆசிரமம்.

உபநயனம் பிரம்மசரியத்துக்கு ஆரம்பம். அதன் முடிவு ஸமாவர்த்தனம். உபநயனம் முதல் ஸமாவர்த்தனம் வரையில் இருப்பது பிரம்மசரியம். ஸமாவர்த்தனம் என்றால் திரும்பிவருகிறது என்று அர்த்தம். போன இடத்திலிருந்துதான் திரும்பிவரவேண்டும். அத்தியயனத்தைப் பூர்த்தி பண்ணிவிட்டு அகத்திற்கு வருவது ஸமாவர்த்தனம். இதனால், கொண்டுபோய் விட்டது முதல் திரும்பிவருகிற வரையில் அகத்தில் இல்லை என்று தெரிகிறதல்லவா? அந்தக் காலத்தில் குருஸந்நிதானத்தில் இருக்கவேண்டும். உபநயனம் பூர்வாங்கம். அங்கம் என்றால் பிரதானம் ஒன்று வேண்டும், பிரதானத்திற்கு அங்கி என்று ஒரு பெயருண்டு. அது பிரம்மசரியம். அதற்கென்ன அர்த்தம்? பிரம்ம என்ற பதத்திற்கு ஆறு அர்த்தங்கள் இருக்கின்றன. பிரம்மசரியம் என்ற இடத்தில் பிரம்ம என்பதற்கு வேதம்

என்பது அர்த்தம். வேதத்தை ஸ்வாதீனப்படுத்தவே ஒரு ஆசிரமும் ஏற்பட்டிருக்கிறது. அதுதான் பிரம்ம சரியம். அதற்குப் பூர்வாங்கம் உபநயனம். அந்த ஆசிர மத்திற்குக் கடைசிப் பக்ஷமாக ஏற்பட்ட காலம் பன்னி ரண்டு வருஷங்கள். ஒரு வேதத்தை ஸாங்கோபாங்கமாக அத்தியயனம் பண்ணுவதற்குப் பன்னிரண்டு வருஷங் கள் வேண்டும்.

பிரம்ம என்பதற்கு ஆறு அர்த்தங்கள் உண்டென் பதைச் சொன்னேன். பிரமம் என்பது விஷ்ணுவுக்கு ஒரு பெயர். பரமசிவனுக்கும் ஒரு பெயர். பிராம்மண ஜாதி, தபஸ், பரமாத்மஸ்வரூபம் என்பவைகளுக்கும் அந்தப் பெயருண்டு. பிரம்மா என்று நீட்டினால் சதுர்முகனுக்குப் பெயராகிறது.

பிரம்மசரியம் என்பது வேதாத்தியயனம் பண்ணு வதற்கேற்பட்ட ஒரு தீக்ஷை. அதற்குப் பூர்வாங்கமாக ஏற்பட்ட ஒரு காரியம் உபநயனம். பரிஷேசனம் ஏற்பட்டதெதற்கு? அது போஜனத்திற்கு அங்கம். உப நயனம் பண்ணிவிட்டு வேதாத்தியயனம் பண்ணமலிருப் பது பரிஷேசநம் பண்ணிச் சாப்பிடாமலிருப்பதைப் போன்றது.

உபநயனம் என்கிற பூர்வாங்கத்திற்கும், ஸமாவர்த் தனம் என்கிற உத்தராங்கத்திற்கும் நடுவில் நான்கு விரதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை, பிராஜாபத் தியம், ஸௌம்யம், ஆக்னேயம், வைச்வதேவம் என்பவை.

வேதம் என்பது மந்திர ஸமூஹம். மந்திரமாகச் சேர்த்து வைத்திருப்பது வேதம். லோகத்தில் எவ் வளவோ மந்திரங்களிருக்கின்றன. ராம மந்திரம், நரஸிம்ம

மந்திரம், பஞ்சாக்ஷர மந்திரம், தேள் மந்திரம், பாம்பு மந்திரம், த்ருஷ்டி மந்திரம், ஆபிசார மந்திரம், ஜால வித்தை மந்திரம், பில்லி சூன்ய மந்திரம் இப்படி எத்தனையோ நல்லவகைகளும் கெட்டவகைகளுமான மந்திரங்களிருக்கின்றன. எந்த மந்திரமானாலும் அதை உபாஸனை பண்ணி, ஸித்தி பெற்றுப் பிரயோஜனம் அடைய வேண்டுமானால் அதற்கென்று ஏற்பட்ட காலத்தில் சில நியமங்களோடு உபாஸனை செய்யவேண்டும். இன்ன நாளில், இன்ன ஸமயத்தில், தூபங் காட்டி இப்படிப் பண்ண வேண்டும் என்று சில மந்திரங்களுக்கு நியதி உண்டு. கிரஹண காலத்தில் ஜபிக்க வேண்டிய சில மந்திரங்களுண்டு. எந்த மந்திரத்துக்கும் நியமம் உண்டு. அப்படி நியமத்தோடிருந்தால்தான் மந்திரத்தினால் பிரயோஜனம் உண்டு. வேதம் மந்திர ஸமூஹமாதலால், அதை அத்தியயனம் பண்ணுவதற்குச் சில நியமங்களோடு இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்த மந்திரங்களால் பிரயோஜனம் உண்டாகும். ஒரு ஜீவன் பிறந்து, வளர்ந்து நன்றாக இருந்து, கிருஹஸ்தனாகி, பிரஜைகளை அடைந்து, அவர்களும் கடைத்தேற வழி பண்ணித் தன்னுடைய ஜன்மாவும் கடைத்தேறச் செய்வதற்கு எந்த மந்திரங்களைச் சொல்லிக் கர்மாக்களை அனுஷ்டிக்க வேண்டுமோ அந்த மாதிரி மந்திரங்கள் சேர்ந்தது வேதம். அப்படி ஒரு சாகையை அத்தியயனம் பண்ணுபவன் சுரோத்திரியன் என்று சொல்லப்படுவான்.

எந்த மந்திரஸித்திக்கும் நியமம் அவசியம் வேண்டும். ஆத்மா கடைத்தேறுவதற்கு வேதம் இருக்கிறது. அதற்கு ஒரு நியமம் வேண்டும். வேத ஸமூஹம் முழுவதற்

கும் ஏற்பட்ட நியமம் பிரம்மசரியமாகும். ஒவ்வொன்றுக்கும் தனித் தனிநியமங்கள் இருக்கின்றன. அவ்வளவுக்கும்சேர்ந்து மொத்த விரதம் பிரம்மசரியம். தனித்தனிப் பிரிவுக்குத் தனித்தனி விரதங்கள் இருக்கின்றன. வேதத்தை நான்கு காண்டமாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளை நாலு மஹறிஷிகள் பிரவர்த்திப்பித்திருக்கிறார்கள். அந்த மஹறிஷிகளை உத்தேசித்து பிரம்மயஜ்ஞம் பண்ணப்படுகிறது. பிரம்மயஜ்ஞம் என்பதற்கு வேதயஜ்ஞம் என்பதுதான் அர்த்தம். ஒவ்வொரு காண்டத்திற்கும் தனித்தனியாக ஒரு விரதம் உண்டு. ஒரு காண்டத்தை அத்தியயனம் பண்ணுகிறவரைக்கும் அதற்கு ஏற்பட்ட விரதத்தைப் பண்ண வேண்டும். அந்த விரதத்தைப் பிரம்மசரியத்துக்கு ஏற்பட்ட ஸாமான்ய விரதத்தோடு பண்ணவேண்டும். பிராஜாபத்ய காண்டத்திற்கு ஒரு விரதம் ஏற்பட்டிருக்கிறது. அது பிராஜாபத்தியம். அப்புறம் ஸௌம்ய விரதம், பின்பு ஆக்நேய விரதம், அப்புறம் வைச்வதேவ விரதம் செய்யவேண்டும். நான்கு காண்டங்களும் முடிந்த பின்பு குருவினுடைய அனுஜ்ஞையின்மேல் ஸமாவர்த்தனம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

முன்பு சொன்ன நான்கு விரதங்களும் கிருஷ்ணயஜுர் வேதத்துக்கு ஏற்பட்டவை. ருக்வேதத்துக்குக் கோதான விரதம், உபநிஷத் விரதம் முதலிய நான்கு விரதங்கள் உண்டு. கோதான மென்றால் கோவின் ரோமத்தை க்ஷவரம் செய்வது. இப்படி ஒவ்வொரு வேதத்துக்கும் தனித்தனி விரதங்கள் இருக்கின்றன.

ஸமாவர்த்தனத்திற்கு ஸ்நானம் என்று ஒரு பெயர் உண்டு. அதைச் செய்து கொண்டவனுக்கு ஸ்நாதகன்

என்று பெயர். எல்லாரும் ஒரு வேதத்தையும் வித்தைகளையும் அத்தியயனம் பண்ண வேண்டும். ஆவணி அவிட்டம் வருகிறது. உபாகர்மா அன்று பண்ணுகிறோம். சிராவண் பூர்ணிமையில் அது வரும். அன்று வேதாத்தியயனம் ஆரம்பித்துக் கொள்ள வேண்டும். தைமாஸம் பூர்ணிமையில் உத்ஸர்ஜனம் பண்ண வேண்டும். ஆவணி மாதத்தில் ஆரம்பித்து தை மாதத்தில் விட்டுவிட வேண்டும். இந்த ஆறு மாஸத்தில் வேதாத்தியயனம் பண்ண வேண்டும். மற்ற ஆறு மாதங்களில் அங்கங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாதத்திலும் சுக்ல பக்ஷத்தில் வேதத்தையும் கிருஷ்ண பக்ஷத்தில் அங்கத்தையும் அத்தியயனம் செய்ய வேண்டும். அந்தக் காலங்களல்லாத காலங்களில் ஸந்தை சொல்லலாம். புதிய மந்திரங்களை ஆரம்பித்துக் கொள்ளக் கூடாது.

வேதாத்தியயனம் செய்யும் பொழுது அந்த அந்தக் காண்டத்துக்கு ஏற்பட்ட தனி நியமத்தோடும் பிரம்மசரியத்துக்கு ஏற்பட்ட பொது நியமத்தோடும் பண்ணினால் மந்திரஸித்தி உண்டாகும். நாம் ஒன்றும் பண்ணுவதில்லை. உபயோகம் இல்லை என்று சொல்லுகிறோம். கல்யாணத்துக்கு முன்பு விரதம் என்று ஒரு பெயர் வைத்து ஒரு கர்மா பண்ணுகிறோம். அந்த கர்மாவாவது இருப்பதனால் இந்த உபந்யாஸம் பண்ண நேரிட்டது.

உபநயனத்துக்கு 'குரோருபநயனம்' என்று பெயர். உபாத்தியாயரிடம் சேர்த்து விடுவது என்பது அதன் அர்த்தம்.

ब्रह्मचार्यसि । आचार्याधीनो भव । भिक्षाचर्यं चर ।

'ஆசாரியனிடத்தில் இருக்க வேண்டியது, என்று சொன்னால் உபநயனம் பண்ணிக் கொள்பவன் 'பாடம்' அப்படியே செய்கிறேன் என்று சொல்லுகிறான்.

'பிக்ஷை வாங்கிச் சாப்பிடு' என்றால் அதற்கும் 'பாடம்' (बादम्) என்று சொல்லுகிறான். உபாத்தியாயரிடம் விட்டுவிட்டால் சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவது? பிக்ஷைவாங்கிச் சாப்பிடவேண்டும்?

இந்தக் காலத்தில்தான் சாப்பாட்டுக்குக் கஷ்டம். உபாத்தியாயருக்குச் 'சம்பளம் கொடுக்கவேண்டும். அந்தக்காலத்தில் உபாத்தியாயர் அகத்தில் இருப்பார். எங்கும் விண்ணப்பம் (Application) போடமாட்டார். சிஷ்யர்கள் நூறுபேர் இருப்பார்கள். அவருக்குச் சாப்பாட்டுக்குக் குறைவு இல்லை. சிஷ்யர்கள் எல்லோரும் பிக்ஷை வாங்கிக்கொண்டு வந்து பாதி பிக்ஷையை உபாத்தியாயருக்குக் கொடுப்பார்கள். அன்னம் இருந்தாலே போதும். க்ஷீரத்தைச் சேர்ந்துக்கொண்டு சாப்பிடுவார்கள். பிரம்மசரியம் முடிகிறவரைக்கும் அலவணமாகவே சாப்பிடவேண்டும். பிரம்மசாரி பிக்ஷை எடுத்துக்கொண்டுவந்த அந்த அன்னத்தைக் குருவினிடம் அர்ப்பணம் பண்ணி அவருடைய ஆஜ்ஞைப்படி பாதி எடுத்துக்கொள்ளவேண்டும். இப்படிப் பண்ணினால் அந்தக் குருவுக்கு என்ன கஷ்டம்? உபாத்தியாயர் சம்பளம் வாங்கிக் கொள்ளக் கூடாது.

வித்தியார்த்தி அகத்தில் சாப்பிட்டு இப்பொழுது வர்சிக்கிறான். அதனால் "இவர் கிடக்கிறார்" என்று குருவினிடம் அலக்ஷிய புத்தி தோன்றுகிறது. அந்தக் காலத்தில் குரு கொடுத்துச் சாப்பிட வேண்டும். அவன் ஏதாவது தப்புப் பண்ணினால் அவனைச் சொந்த வீட்டிற் சேர்க்கமாட்டார்கள். அதனால் தப்பே பண்ணமாட்டான்.

பிரம்மசாரி ஸமாவர்த்தனம் பண்ணும்போது குரு தக்ஷிணை கொடுக்க வேண்டும். அவன் ஜீவனத்துக்கே அவரை எதிர்பார்ப்பதினால் வித்தை சீக்கிரத்தில் ஏறும். பக்தி இருந்தால் நன்றாக வரும். ஸமாவர்த்தனத்தின் போது குருதக்ஷிணையாக எதை வேண்டுமானாலும் கேட்கலாம். ஒரு குரு முன்காலத்தில் தம் சிஷ்யனிடம் நாகரத்தினத்தைக் கேட்டாரர்ம். மஹாபாரதத்தில் இந்தக்கதை இருக்கிறது. அப்படி குருவானவர் எதைக் கேட்கிறாரோ அதைக் கொடுத்துவிட்டுத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளவேண்டும். தன்னிடம் அதற்கு வேண்டிய பொருள் இல்லாவிட்டால், யாசகம் பண்ணிக் கொடுக்கவேண்டும். குருவின் ஆஜ்ஞைக்காக யாசகம் கேட்டால் எல்லோரும் கொடுப்பார்கள்.

குருவுக்குத் தக்ஷிணையாக வந்த பணம் மிச்சப்படும். அவர் பெரிய ஐசுவர்யவானாகிவிடலாம். அதனால் தாரித்திரயமே அவர்களுக்கு இல்லை. தினந்தோறும் போஜனமும் கிடைத்துவிடுகிறது. அப்படி இல்லாவிட்டால் உஞ்சவிருத்தி செய்து சாப்பிடவேண்டும். அந்தக் காலத்தில் ஒவ்வொரு வயலிலும் பிராம்மணர்களுக்கென்று போரடிக்கும்போது ஒரு பாகம் கீழே போட்டுவிடுவதுண்டு. அதை ஏழைப்பிராம்மணர்கள் பொறுக்கிக் கொள்ளுவார்கள். அதுதான் உஞ்ச விருத்தி. அப்பொழுது பலபேர் வருவார்கள். ஆகையால் களப்பிக்ஷை யென்று போடுவார்கள். இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்புவரையில் இந்த வழக்கம் இருந்து வந்தது. இப்பொழுதும் சில இடங்களில் இருக்கலாம். இப்பொழுது செம்பை எடுத்துக்கொண்டு அரிசி வாங்குவதை உஞ்சவிருத்தி என்று நினைக்கிறார்கள். உஞ்சம்

என்றால் பொறுக்குவதென்பது அர்த்தம். அதனால் உஞ்சவிருத்தி யென்பது களத்தில் நெல்லைப் பொறுக்கி அதனால் ஜீவனம் செய்வதற்குத்தான் பெயர்.

அந்தக் காலத்தில் க்ஷத்திரிய வைசியர்களும் வேதாத்தியயனம் பண்ணினார்கள். அவர்கள் குரு தக்ஷிணை கொடுத்தால் குரு மிகவும் தனிகராக ஆய்விடுவார். எல்லாரும் குருவானால் யாரிடம் பிக்ஷை வாங்குவது? தானம் வாங்கினமையால் தனிகர்களான பிராம்மணர்கள் இருந்தார்கள். அவர்களிடம்போய் தினந்தோறும் பிக்ஷைவாங்கி வருவார்கள். பின்பு ஸமாவர்த்தனத்தின்போது குருதக்ஷிணை க்ஷத்திரியர்களும் வைசியர்களும் நிறையத் தருவார்கள்.

आचार्याय प्रियं धनमाहृत्य प्रजातन्तुं मा व्यवच्छेत्सीः ।

[தைத்திரீயோபநிஷத்]

என்று உபநிஷத் சொல்லுகிறது 'ஆசார்யருக்குப் பிரியமான தனத்தைக் கொடுத்துவிட்டுப் பின்பு கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டும். பிரஜாதந்து வேத ஸம்ரக்ஷணத்துக்காக வந்திருக்கிறது. அதை அறுத்துவிடாதே' என்று அதில் சொல்லியிருக்கிறது.

குரு ஸமீபத்திலிருப்பதுதான் உபநயனம், எவ்வளவு பெரிய சக்கிரவர்த்தியினுடைய குழந்தையாக இருந்தாலும் பிக்ஷை வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டு ஆசாரியனிடத்தில் இருக்கவேண்டும்.

ஒவ்வொருநாளும் பிரம்மசாரிகள் அக்கினிகாரியம் அதாவது ஸமிதாதானம் பண்ணவேண்டும். பிக்ஷாசரியம் செய்யவேண்டும். அலவணமாகச் சாப்பிட வேண்டும், பிராம்மணன் பலாசதண்டமும், க்ஷத்திரியன்

அசுவத்த தண்டமும், வைசியன் அத்தி தண்டமும் வைத்துக்கொள்ள வேண்டும். சுருததாரணத்துக்காகத் தண்டம் வைத்துக்கொள்ள வேண்டும். எதை அத்தியயனம் பண்ணுகிருேே அதைத் தாரணம் பண்ணுவதற்கு அப்படிச் செய்யவேண்டும். வேதத்திலுள்ள எல்லா மந்திரங்களும் மறவாமல் மனதில் இருக்கும்படி பாதுகாக்கத் தண்டம் வேண்டும். வேத மந்திர சக்தியைத் தாரணம் பண்ணுவதற்கு அந்தத் தண்டத்திற்கு ஒரு சக்தி இருக்கிறது. வேதநிதி அகலாமல் இருக்க அதை வைத்துக்கொள்ள வேண்டும். பிரம்மசாரி மேலே கிருஷ்ணஜினம் போட்டுக்கொள்ள வேண்டும். மேல் வேஷ்டி கூடாது. வேதாத்தியயனம் பண்ண ஆவணியில் ஆரம்பித்துத் தைமாதத்தில் உத்ஸர்ஜனம் செய்து பின்பு அங்காத்தியயனம் செய்யவேண்டும். இப்பொழுது நாம் உபாகர்மாவைத்தான் பண்ணுகிறோம். உத்ஸர்ஜனம் பண்ணுவதில்லை. அது பண்ணாததற்குப் பிராயச்சித்தமாக காமோகார்ஷீத் ஜபம் பண்ணுகிறோம். 'நான் பாபம் பண்ணவில்லை; காமம் பண்ணியது கோபம் பண்ணியது; என்னிடம் வராது; நமஸ்காரம் பண்ணுகிறேன்' என்று சொல்லுகிறோம். அந்த மந்திரத்துக்கு அதுதான் அர்த்தம். உத்ஸர்ஜனம் பண்ணினால் இந்த ஜபம் அவசியம் இல்லை.

இப்படி, கால நியமம், விரத நியமம், ஆஹார நியமம் முதலியவைகளை அநுஷ்டிப்பது பிரம்மசரியம். ஸ்வர லோபம், வர்ண லோபம், வேதோச்சாரணத் தப்புக்கள் ஏற்படுகின்றன. ஆவணியவிட்டத்தன்று எள்ளு மாத்திரம் சாப்பிட்டு அன்று முழுதும் பட்டினி இருந்து மறுநாள் 1008 ஸமித்தால் ஹோமம் பண்ணவேண்டும். அந்த ஹோமம் ஸ்வரவர்ணலோபங்களுக்காகச் செய்ய

வேண்டும். அதை ஒவ்வொரு வருஷமும் பண்ண வேண்டும். இப்பொழுது பிரதம சிராவணக்காரர்கள் மட்டும் பண்ணுகிறார்கள். எல்லோரும் சிராவண பூர்ணிமைக்கு அடுத்த பிரதமையில் செய்யவேண்டும். ஸமித்ஹோமம் பண்ணுவதுதான் உத்தமம். வெறும் ஜபம் பண்ணினால் தூக்கம் வருகிறது. அதனால் லோபம் வருகிறது. ஒரு காரியம் இருந்தால் தூக்கம் வராது. அதற்காகவாவது ஸமித்தினால் ஹோமம் பண்ணலாம். பலாசஸமித்தால் பண்ணவேண்டும். இல்லாவிட்டால் அசுவத்தஸமித்தால் பண்ணவேண்டும். கடைசி பக்ஷம் தர்ப்பையினாலாவது பண்ணவேண்டும். 'மித்யாதீதப் பிராயச்சித்தார்த்தம்' என்று ஸங்கல்பம் பண்ணிக் கொண்டு செய்ய வேண்டும்.

பிரம்மசாரி சாப்பிடுவதற்குக் கணக்கு இல்லை. வயிறு நிறையச் சாப்பிடலாம். நாக்கு ருசியைக் குறைக்க வேண்டும். உபவாஸம் முதலியவை கூடா. ஒரு வேதத்தையும் மற்ற வித்தைகளையும் பன்னிரண்டு வருஷங்கள் குருகுலவாஸம் செய்து தெரிந்து கொள்ளவேண்டும். பிரம்மசாரி ஸமாவர்த்தனம் பண்ணாமலே இருக்கலாம். குருவினிடத்திலேயே இருந்து வாழ்க்கை முழுவதையும் அவருக்கே அர்ப்பணம் பண்ணலாம். அதற்கு நைஷ்டிகப்பிரம்மசரியமென்று பெயர். அது இந்தக் கலியுகத்தில் பிரசஸ்தமாகச் சொல்லப்படவில்லை.

உபநயன காலம் பிராம்மணனுக்கு கர்ப்பம் முதல் எட்டாவது வருஷமாகும்; அதாவது ஏழாவது வயதில் உபநயனம் பண்ணவேண்டும். ஐந்தாவது வயதிலேயும் பண்ணலாம். அது காம்யோபநயனம் என்று சொல்லப் படும். விசேஷ அபிவிருத்தி அடையவேணுமென்று அதைப் பண்ணலாம். ஐந்து வயதில் பண்ண விட்டால்

தோஷமில்லை. உபநயனத்துக்கு முன்பே ஸம்ஸ்கிருத அக்ஷரஞானமும் பாஷாஞானமும் இருக்க வேண்டும்.

எல்லாக் குழந்தைகளையும் ஸ்வல்பமாவது வேதாத்தியயனம் பண்ணச் சொல்லவேண்டும். பிக்ஷாசரணமும் பண்ணச் சொல்ல வேண்டும். ஒரு வருஷமாவது ஒரு உபாத்தியாயரிடம் இருக்கும்படி செய்யலாம். பள்ளிக்கூடத்தில் ஒரு வருஷம் தவறி விட்டதாக (Fail) வாவது நினைத்துக்கொள்ளலாம். அப்படிப் படிக்கும் ஒரு வருஷத்தில் இரண்டு, மூன்று வருஷத்துப் புத்தி வரும். விரதாநுஷ்டானத்தால் புத்தி தைக்ஷ்ண்யம் உண்டாகும். பூஜை, ஸ்நானம், ஔபாஸனம் என்றால் இன்னவை என்று தெரியும்.

இப்பொழுது ஸ்கௌட்டாக இருந்து வெளியூர் போய் இருப்பது (Camp) உண்டல்லவா? அதைப் போல இதையும் எண்ணிக்கொள்ளலாம். ஆனால் அதனால் விருத்தமான ஆசாரத்தைப் பழக்கிக் கொள்ளுகிறார்கள். அதிலும் சில காரியங்கள் புத்திசாலித்தனத்துக்காகப் பண்ணுகிறார்கள். ஒரு வருஷமாவது பிக்ஷாசரியம் செய்து வேதாத்தியயனம் பண்ணினால் நல்ல பழக்கங்கள் உண்டாகும்.

ஸமாவர்த்தனம் பண்ணிக்கொண்டு விவாஹம் பண்ணிக் கொள்ளாமல் இருப்பவன் ஸ்நாதகன். காசியாத்திரை பண்ணுகிறவன் அவன்தான்.

### விவாஹம்

விவாஹம் ஸஹதர்மசாரிணீஸம்பிரயோகம் என்று சொல்லப்படும். வேதத்தைக் கிரஹித்தாயிற்று. அதற்கப்புறம் ஒரு காரியம் பண்ணவேண்டும். அதற்கு ஒரு துணை வேண்டும். பிரிக்க முடியாத ஒரு சொத்தாக இருக்க வேண்டும். உசிதமான ஒருவரைச் சேர்த்துக் கொள்ள

வேண்டும். சேர்ந்து தர்மாநுஷ்டானம் பண்ணுகிறவர்களுடைய சேர்க்கை வேண்டும். பிரம்மசரியம், ஸந்யாஸம் என்னும் இரண்டிலும் செய்யும் கர்மபலன்கள் தன்னுடைய ஸொத்து. கிருஹ்யதர்மம் பொது ஸொத்து. பதியும் பத்தினியும் சேர்ந்து கிருஹ்யதர்மத்தை அநுஷ்டிக்கவேண்டும். பத்தினி முதலில் செத்துப் போனால் ஔபாஸனம் போய்விடுகிறது. பின்பு இவனுக்கு அக்கினியில்லை. அதற்காக முன்பே பாதி வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

ஸ்திரீக்கு வேறு ஸொந்த தர்மம் கிடையாது. புருஷன் இருக்கும் போது எந்தத் தர்மம் தனியாகப் பண்ணினாலும் ஒட்டாது. ஔபாஸனந்தான் ஸ்திரீயினுடைய ஸொத்து. வேதோக்தமான தர்மங்களில் ஸ்திரீகளுக்குச் சொந்தமான தர்மம் எது இருக்கிறது? கோயிலுக்குப் போவது, தீர்த்த ஸ்நானம், பூஜை பண்ணுவது முதலியவைகளைச் செய்கிறார்கள். இவைகள் வேதத்தில் சொல்லப்பட்டவைகள் அல்ல. புராணத்தில் சொல்லப்பட்டவை. வேதத்தில் சொல்லியிருப்பதுதான் முக்கியமானது. அதில் சொல்லப்பட்ட கர்மாக்களில் ஸ்திரீகளும் பண்ணுவது ஔபாஸனம், அது தான் சொந்த ஸொத்து. எந்த வீட்டில் ஔபாஸனம் இல்லையோ, அந்த வீட்டில் வேதோக்த கர்மா ஸ்திரீக்கு இல்லாமற் போகிறது. புருஷன் காயத்திரியாவது பண்ணுகிறான். காயத்திரீ மூன்று வேதங்களின் ஸாரம். அது மூன்று பாதம் உடையது. அதனால் த்ரிபதா காயத்திரி என்று அதற்குப்பெயர் உண்டு. அதர்வ வேதத்துக்கு வேறு காயத்திரீ உண்டு. அதர்வவேத அத்தியயனம் பண்ண வேறு உபநயனம் பண்ணிக்

கொண்டு அந்தக் காயத்திரீ ஜபம் பண்ணவேண்டும். எப்படியாவது வேதோக்த கர்மா கொஞ்சம் புருஷனுக்கு இருக்கிறது. ஔபாஸனம், அக்கினிஹோத்திரம் இல்லாத பக்ஷத்தில் ஸ்திரீகளுக்கு வைதிக தர்மஸொத்து ஒன்றும் இல்லாமற் போய்விடும். அதனால் அவைகளில் ஸ்திரீகளுக்குத்தான் சிரத்தை அதிகமாக இருக்கவேண்டும். ஆகையால் ஸ்திரீகளாவது ஒவ்வொரு வீட்டிலும் ஔபாஸன குண்டம் வைத்துக் கொள்ள முயற்சி பண்ண வேண்டும். அதில் அக்ஷதையையாவது தினந்தோறும் போடவேண்டும். அக்கினி அணையாமல் இருக்க வேண்டும். வீட்டில் எவ்வளவோ அக்கினி இருக்கிறது. காப்பி போட, சமைக்க, இன்னும் ஏதாவது பண்ண அக்கினி இருக்கிறது. எதை ஸாக்ஷியாக வைத்துக் கொண்டு விவாஹம் பண்ணிக்கொள்ளுகிறார்களோ அந்த அக்கினியை மட்டும் அணைத்து விடுகிறார்கள். வீட்டில் ஔபாஸனாக்கினியை வைத்துக் கொள்ள வேண்டும். நெல்லை வீட்டிலே குத்தச் சொன்னால் உமி கிடைக்கும். அது ஔபாஸனத்துக்கு உதவும். குத்துகிறவர்களுக்கு இந்தக் காலத்தில் ஜீவனமும் கிடைக்கும்.

இந்த அக்கினி காரியந்தான் வைதிகமானது. மற்றவைகளெல்லாம் பௌராணிகம்; அவைகளை லௌகிகம் என்று சொல்லுகிறதுண்டு. அக்கினி நடுவில் விச்சின்னமாகப் போனால் என்ன பண்ணுகிறது என்று கேட்கிறார்கள்? இத்தனை நாள் பண்ணாததற்கு இரண்டு நாள் இல்லாமற் போவது பரவாயில்லை. புருஷர் வந்தால் மறுபடியும் புதுப்பித்துக் கொள்ளலாம். இதுவரைக்கும் பண்ணியது பண்ணியாய்விட்டது. பட்டமளிப்புக் கொண்டாட்டந்தான் (Convocation) எல்லோருக்கும்

ஸமாவர்த்தனமாக இருக்கிறது. இனிமேலாவது பண்ணுவதைக் கவனிக்க வேண்டும்.

பதிபத்தினி இரண்டு பேரும் பரஸ்பரஸஹாயமாக இருந்து கொண்டு தர்மாநுஷ்டானம் செய்யவேண்டும்.

பெண்களுக்கு உபநயனம் வேண்டாமா? தர்ம சாஸ்திரம் சொன்னவர்களில் மனு முக்கியமானவர். அதில் ஸ்திரீகளுக்கு ஒரு உபநயனம் சொல்லியிருக்கிறார். கல்யாணந்தான் அவர்களுக்கு உபநயனம். உபநயனம் என்றால் குருவின் ஸமீபத்தில் அழைத்துக் கொண்டு போகிறது என்று சொன்னேன். ஸ்திரீகளுக்கு குரு பதிதான்.

स्त्रीणाम् उपनयस्थाने विवाहं मनुरब्रवीत् ।

[மனுஸ்மிருதி]

இங்கே எது ஸமிதாதானம்? கிருஹ தர்மாநுஷ்டானந் தான் அக்கினி கார்யம். அப்படியானால், பெண் குழந்தைகளுக்கு எப்பொழுது கல்யாணம் பண்ண வேண்டும்? உபநயனம் எப்பொழுது பண்ணுகிறோமோ அப்பொழுதுதான் பண்ண வேண்டும். அதாவது ஏழாவது வயதில் பண்ண வேண்டும். இப்பொழுது அப்படி பண்ணுவது சட்ட விரோத மென்று உபத்திர வப்படுத்துகிறார்கள். எல்லாரும் சேர்ந்து இப்படி ஒரு சட்டத்தை உண்டு பண்ணியிருக்கிறார்கள். அதை எல்லாரும் சேர்ந்து மாற்ற வேண்டும். இதை மறந்து போகக் கூடாது. ஒவ்வொருவரும் மறந்து போகாமல் இதை மாற்ற பிரயத்தனம் பண்ண வேண்டும். இது மாறுவதற்கு நூறு வருஷம் ஆனாலும் ஸரி; அப்புறம் மாற்றுவதற்கு இன்று முதல் பிரயத்தனம் பண்ண வேண்டும்.

# 4. விவாஹம்

[17—11—1932]

பிரம்மசரிய உபக்ரமத்துக்கு முன் செய்ய வேண்டிய ஸம்ஸ்காரங்கள் ஏழு. பிரம்மசரியத்தில் செய்யவேண்டியவை ஆறு. கிருஹஸ்தாசிரமத்தில் மாத்திரம் விவாஹ ஸம்ஸ்காரம் ஒன்றும், மூன்றுவகை யஜ்ஞங்களாகிய இருபத்தொரு ஸம்ஸ்காரங்களுமாக இருபத்திரண்டு. இவைகளோடு பஞ்சமஹாயஜ்ஞங்களையும் சேர்த்தால் நாற்பது ஸம்ஸ்காரங்களாகின்றன.

விவாஹத்தில் அநேகப் பிரகாரங்கள் இருக்கின்றன. ஆஸுரம், காந்தர்வம், ஸ்வயம்வரம், பைசாசம் என்பவை போன்ற பலவகை உண்டு. பிராஹ்மம் என்று ஒரு வகை இருக்கிறது. அது பிராம்மணர்களுக்கு எடுத்தது. ஸ்வயம்வராதி விவாஹங்களுக் கெல்லாம் காலம் கொஞ்சம் மாறுபடும். வயது கழித்தும் விவாஹம் உண்டு. பிராஹ்ம விவாஹந்தான் சீக்கிரம் செய்ய வேண்டுமென்பது ஸம்பிரதாயம். கன்னிகையா யிருக்கிற அவஸ்தையே அதற்கு ஏற்றகாலம்.

கன்னிகையா யிருக்கும் பொழுது அந்தச் சரீரத்தில் ஒருவர்பின்ஒருவராக மூன்று தேவர்கள் இருந்து ரக்ஷித்து அப்புறம் மனுஷ்யர்களிடத்தில் அர்ப்பணம்பண்ணுகிறார்கள். முதலில் ஸோமன் என்ற தேவதை குழந்தையா யிருந்து லஜ்ஜை தெரிகிறவரைக்கும் அதிஷ்டான தேவதையாக யிருக்கிறான். லஜ்ஜை தெரிந்து ருதுவாகும் வரையில் கந்தர்வன் அதிஷ்டான தேவதையாக இருக்கிறான். அதற்கப்புறம் ருதுவாகி மூன்று

வருஷங்கள் வரை அக்னி அதிஷ்டான தேவதையாக இருக்கிறான். அப்புறம் அவன் மனுஷ்யர்களிடத்தில் ஒப்புவிக்கிறான். ஒவ்வொரு தேஹத்திலும் அத்யாத்மமாகத் தேவதைகள் இருக்கிறார்கள். வயோவஸ்தைக்குத் தக்கபடி கன்னிகையின் சரீரத்தில் மட்டும் இந்த மூன்று தேவதைகளும் இருக்கிறார்கள். ஸோமன் முதலில் இருக்கிறான். அப்பொழுது பார்க்கக் குளிர்ச்சி மாத்திரம் இருக்கும். அப்புறம் லாவண்யம் அதிகமாகின்றது. அது கந்தர்வனுடைய அதிகாரகாலம். அப்புறம் காமாக்கினியின் அதிகாரம் உண்டாகிறது. அதனால் அக்கினி இருக்கிறனென்று சொல்லுகிறோம். இவ்வாறு லௌகிகமாக அர்த்தம் பண்ணுவதுண்டு,

सोमः प्रथमो विविदे गन्धर्वो विविद उत्तरः ।
तृतीयो अग्निष्टे पतिस्तुरीयस्ते मनुष्यजाः ॥
सोमोऽददद्गन्धर्वाय गन्धर्वोऽददद्ग्नये ।
रयिं च पुत्राँश्चादादग्निर्मह्यमथो इमाम् ॥

[விவாஹப்பிரயோகமந்த்ரம்.]

என்பது வேத வாக்கியம். இதனால் என்ன தெரிகிறது? ருதுவாகி மூன்று ஸம்வத்ஸரத்துக் கப்புறம்தான் விவாஹம் பண்ண அதிகாரம் உண்டு என்றேற்படுகிறது. நேற்று ஸ்திரீகளுக்கு உபநயனம் விவாஹந்தான் என்றும் அந்த விவாஹம் உபநயன காலத்தில் செய்ய வேண்டுமென்றும் அந்தக் காலம் கர்ப்பாஷ்டமம் என்றும் சொன்னேன். வேத வாக்கியத்தைப் பார்க்கும்பொழுது, ஸோமன் முதலிய மூன்று தேவதைகளுடைய அதிகாரத்துக்குப் பின்பு

தான் வரனுக் கதிகாரம் என்று தெரிகிறது. இந்த விஷயம் வேதத்தில் இரண்டு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கல்யாண காலத்தில் வரனுடைய வார்த்தையாக, 'அக்கினி என் வசப்படுத்தட்டும்' என்ற அர்த்தமுள்ள மந்திரம் சொல்லப்படுகிறது. இது மனுஷ்யர்கள் எல்லோருக்கும் ஏற்பட்ட விதி. சரீராபிவிருத்தி, மனோபாவம் இவைகளுக்குத் தகுந்தபடி தேவதைகள் சரீரத்தை ரக்ஷிக்கிறார்கள். முன்பு சொன்ன விதி காந்தர்வம் முதலிய எல்லாவற்றுக்கும் பொதுவானது.

பிராம்மண ஜாதிக்கு பிராஹ்மம் என்று ஒரு விவாஹம் ஏற்பட்டிருக்கிறது. அந்த விவாஹமத்தியில் கந்தர்வ பூஜை பண்ணவேண்டும்.

उदीर्ष्वातो विश्वावसो नमसेडामहे त्वा । अन्यामिच्छ प्रफर्व्यं संजायां पत्या सृज । उदीर्ष्वातः पतिवति ह्येषा विश्वावसुं नमसा गीर्भिरीट्टे अन्यामिच्छ पितृषदं व्यक्तां सते भागो जनुषा तस्य विद्धि ।

என்ற மந்திரம் அப்பொழுது சொல்லப்படுகிறது. இந்த விவாஹம் கந்தர்வனுடைய அதிகார காலத்தில் செய்ய வேண்டும். 'இது பிராஹ்ம விவாஹமாதலால் நீ புறப்பட்டுப்போய்விடு' என்று கந்தர்வனுக்கு ஒரு மந்திரம் சொல்லப்படும்.

ஸ்வயம்வரம் சீக்கிரம் நடக்கலாம்; பின்பும் நடக்கலாம். காந்தர்வாதிகள் க்ஷத்திரியர்களுக்கு ஏற்பட்டவையாதலால் பின்பு நடந்தன. பிராம்மணர்களுக்கு ஸ்வயம்வராதிகள் சாதாரணமாக அனுஷ்டானத்திலில்லை. பிராம்மணனுடைய விவாஹத்தில் கந்தர்வ பூஜையிருப்பதைப்

பார்த்தால் அவனுடைய அதிகார காலத்தில் விவாஹம் செய்யவேண்டுமென்று தெரிகிறது. இதர வர்ணங்களுக்கு அக்கினியின் அதிகாரத்துக்கு அப்புறம் செய்ய வேண்டுமென்று தெரிகிறது. லௌகிகமாகப் பார்த்தாலும் அப்படித்தான் இருக்கிறது.

அம்பாளுக்கு ஸதீ என்று ஒரு பெயர் இருக்கிறது. ஸதீ—பதிவிரதை. நம்முடைய தேசத்தில் உடன்கட்டையேறுவதென்று ஒரு வழக்கம் இருந்தது. அதற்கு ஸதி (Sati) யென்று இங்கிலிஷில் பெயரெழுதியிருக்கிறார்கள். உத்தம ஸ்திரீகள் பண்ணுவதால் அதற்கு அப்படிப் பெயர் வைத்தார்கள் போலத் தோற்றுகிறது. தாக்ஷாயணிக்கு ஸதீ என்ற பெயர்,

> कलत्रं वैधात्रं कतिकति भजन्ते न कवयः
> श्रियो देव्याः को वा न भवति पतिः कैरपि धनैः ।
> महादेवं हित्वा तव सति सतीनामचरमे
> कुचाभ्यामासङ्गः कुरवकतरोरप्यसुलभः ॥

[ஸௌந்தர்யலஹரீ, 96.]

என்று ஸௌந்தர்யலஹரியில் ஸ்ரீ ஆசார்யர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஸதிகள் இப்படி இருக்கவேண்டுமென்று காட்ட அம்பிகை தாக்ஷாயணியாக அவதாரம் செய்தாள். அந்த மாதிரி இருப்பதுதான் பாதிவிரத்தியம்.

விவாஹ உத்தேசம் மூன்று. முதலாவது நல்ல பிரஜை உண்டாகவேண்டும். சரீரபுஷ்டியோடு லாவண்யமும் புத்தியும் உடையவர்களாக இருக்கவேண்டும். எந்த மாதிரி இருக்கவேண்டுமோ அப்படி இருக்கவேண்டும். இது ஒரு உத்தேசம். இரண்டாவது, ஸ்திரீகளுக்குச்

சித்த பரிசுத்தி ஏற்பட்டு ஒன்றைப் பிடித்துக்கொள்ள வேண்டும். அதன் மூலமாகக் கடைத்தேற வேண்டும். அதற்காக விவாஹம் பண்ணவேண்டும். மூன்ருவது உத்தேசம், புருஷனுக்குக் கிருஹஸ்தாசிரமத்திலிருந்து ஸ்வதர்மானுஷ்டானம் பண்ணி சிரேயஸை அடைய ஒரு ஸஹாயம் வேண்டும். இப்படி மூன்று உத்தேசங்கள் இருக்கின்றன. புருஷனுக்கு, பரிபக்குவ மடையாத நிலையில் தர்மானுஷ்டானத்திற்காகவும் ஸ்திரீக்ளுக்கு வேறுவழி கிடையாதாகையால் அவர்கள் கடைத்தேற ஒரு அவலம்பனம் வேண்டியதற்காகவும் லோகத்திற்கு நல்ல பிரஜைகள் உண்டாவதற்காகவும் இப்படி மூன்று உத்தேசங்களுக்காக விவாஹ மாகவேண்டும்.

வர்ணாசிரமவிபாகங்களில் ஒவ்வொரு உத்தேசத்துக்கு ஒவ்வொரு தர்மத்தை வைத்திருக்கிருர்கள். ஸந்யாஸிகள் இருக்கிருர்கள்; புருஷர் இல்லாத ஸ்த்ரீகள் இருக்கிருர்கள்; வானப்பிரஸ்தர்கள் இருக்கிருர்கள். அவர்களுக்கு ஸ்நானம் உபவாஸம் முதலிய அதிக நியமங்கள் உண்டு. ஸுமங்கலிகள் அடிக்கடி ஸ்நானமே பண்ண வேண்டாம். தீர்த்தத்தை புரோக்ஷணம் பண்ணிக்கொண்டாலே போதும். ஸந்யாஸி அடிக்கடி ஸ்நானம் பண்ணவேண்டும். க்ஷத்திரியன் மாம்ஸாதி ஆஹாரங்கள் தின்ருல் தோஷமாகச் சொல்லவில்லை. ஸ்ரீராமர் முதற்கொண்டு சிராத்தாதிகளுக்கு மாம்ஸத்தை உபயோகித்திருக்கிருர்கள்: வேலை செய்கிற தொழிலாளி இவ்வளவு நியமம் பார்க்க முடியாது. எல்லோரும் உபவாஸமாக் இருந்தால் லோகத்தில் கார்யம் நடக்காது. எல்லோரும் மாம்ஸம் தின்ருல் சுத்தமேயிராது. நம்முடைய தேசத்தில் எல்லாவற்றையும் ஒன்ருகப்

பண்ணமுடியாது. எல்லோருக்கும் ஒன்றாகச்சொன்னால் ஒரு காரியந்தான் நடக்கும். மற்றவைகள் நடக்கமாட்டா. வர்ணாசிரம தர்மத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரியம் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லோரும் தங்கள் தங்கள் காரியத்தை நன்றாகச் செய்தால் பொதுக்காரியங்களில் ஒன்றாகச் சேர்ந்து கொள்வார்கள்.

காந்தர்வ விவாஹம், லாவண்யம் வீரியம் முதலியவை இருக்கிற ஒரு ஜாதிக்கு ஏற்பட்டது. ஸ்வயம்வரம் ஸ்வயேச்சை (freewill) யாகப் புருஷனைத் தெரிந்தெடுத்துக்கொள்ளுவது. அப்படிப்பட்ட ஸ்வயேச்சை நம்முடைய மதத்தில்தான் இருக்கிறது. ஸ்வயேச்சையை அபிவிருத்தி பண்ணுகிறவர்களுக்கு அது ஏற்பட்டிருக்கிறது. ஜன்மா கடைத்தேறுவதைப் பிரதானமாகக் கொண்டது பிராஹ்ம விவாஹம். மற்றவைகளில் அது இருந்தாலும் அவைகளுக்குத் தனித்தனியாக ஒரு லக்ஷ்யம் ஏற்பட்டிருக்கிறது. பிராஹ்ம விவாஹத்தில் ஆத்மசிரேயஸ் பிரதானம். மற்றவைகள் அதற்கடுத்தபடியானவைதாம்.

மற்ற ஜாதிகளில் சரீரபுஷ்டி ஏற்பட்ட பிறகு விவாஹம் செய்யவேண்டும். பிராம்மண ஜாதியில் மனோபாவ வித்தியாஸம் இல்லாத காலத்தில் இதுதான் தெய்வம் என்று நினைத்து அப்படியே பழக்கம்பண்ணி, அப்புறம் விகாரம் உண்டாகிற காலத்தில் தன்னை அர்ப்பணம் பண்ண வேண்டும். அந்தமாதிரி எண்ணம் உண்டாவதற்குக் கந்தர்வாதிகார காலத்திலே கல்யாணம் செய்ய வேண்டும்.

பத்தினி பதிவிரதையாக இருக்கவேண்டுமேயொழிய பதியானவன் பத்தினிவிரதம் இருக்கவேண்டு

மென்று நியமமில்லை. ஏகபத்தினி விரதம் உண்டே யொழிய பத்தினியே தெய்வம் என்று நினைக்கக்கூடாது. பிரம்மசரியத்திற்குச் சில விரதங்கள் ஏற்பட்டிருக்கிறது போலப் பாதிவிரத்தியத்திற்கு ஒரு விரதம் ஏற்பட்டிருக்கிறது. அது பதியையே பரமேசுவரனாக நினைத்து ஜன்மபரியந்தம் நடக்கவேண்டும். பிரதோஷ விரதத்தைச் சிலபேர் ஜன்ம விரதமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போலப் பதிவிரதைகளுக்கு இது ஜன்ம விரதமாக ஏற்பட்டிருக்கிறது.

பாதிவிரத்தியம் என்பது பதிக்குத் துரோகம் பண்ணாமலிருப்பதுமட்டுமன்று. பரமேசுவரனே இப்படி வந்திருக்கிறார். அவரிடத்தில் எப்படி யிருக்கவேண்டுமோ அப்படியே இருக்கவேண்டும். அந்த அந்தச் சித்தத்திற்கு எப்படி யிருக்கவேண்டுமோ அப்படி அப்படி இருக்கவேண்டும். நமக்கென்று ஒன்று எதற்காகவென்று,

पतिव्रता महाभागा छायेवानुगता सदा ।

[ராமாயணம், பாலகாண்டம்.]

நிழலைப்போல அந்தமனதை அனுஸரித்து நாம் போக வேண்டும். நமக்கு வேறு காரியமில்லை. பிரம்மசரியத்தில் குருவினிடத்தில் இருப்பதுகூட அவ்வளவில்லை. ஆத்ம வித்தைக்கு குரு வேறு இருக்கிறார். ஸ்திரீகளுக்கு அப்படியில்லை. பதியே ஈசுவரனென்றிருக்க வேண்டும். மஹாராஷ்டிரர்களுக்கும் ஆந்திரர்களுக்கும் நோன்புகள் அதிகம். அவர்கள் செய்யும் அநேக விரதங்களில் கன்யகாவஸ்தையில் செய்யவேண்டியவை சில உண்டு. அவைகளில் பரமேசுவரனைப் பதியாக

நினைத்துப் பூஜை பண்ணவேண்டுவது ஒன்று. விவாஹ மான பின்பு பதியைப் பரமேசுவரனாக நினைத்துப் பூஜை பண்ணவேண்டும். 'நாம் முன்பு பூஜை செய்த பரமேசுவரனே இப்படி வந்திருக்கிறார்' என்ற ஞாபகம் இருக்கவேண்டும், ஸ்ரீராமர் அவதாரம் செய்தார். அவருடைய பத்தினியாகிய ஸீதாதேவி இருந்ததுகூட அவ்வளவு பாதிவிரத்தியமில்லை. ராமன் புருஷனாக வந்தால் யாரும் ஸீதைக்குமேல் பதிவிரதையாக இருக்க லாம். மனதுக்குச் சலனம் ஏற்படக்கூடிய பல ஆபத்துக் களில் ஜாக்கிரதையாக இருந்தாள் என்பதனால் தான் ஸீதைக்கு ஒரு கௌரவம் ஏற்பட்டிருக்கிறது. ராமன் காட்டுக்குப் போகும்பொழுது நானும் வருவேனென்று அவள் சண்டை போட்டாள். பாதிவிரத்தியத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருந்தவள் நாளாயனி. அவள்தான் திரௌபதியின் முற்பிறப்பு. அவள் இருந்ததுதான் உத்தம பாதிவிரத்தியம். பரமவிபரீதமான குணங்களும், பரம குத்ஸிதமான சரீரமும் இருந்தாலும் பதியினிடத்தில் பக்தி பண்ணினாள். தேஹம் நன்றாயிருந்தால் நாமென்ன விரதமாயிருக்கிறது? மஹாமகக்குளத்தில் ஊற்றுப் போட்டு ஜலம் இறைத்தால் வெள்ளைக்காரன்கூட ஸ்நானம் பண்ணுவான். எவ்வளவு சேறானாலும் அது தீர்த்தம் என்று முழுகினால் அப்பொழுதுதான் உண்மை யான பக்தி இருக்கிறதென்று தெரியும். பதி நிரம்பப் பணக்காரனாகவும் அழகுடையவனாகவுமிருந்தால் எல் லோரும் அவனிடத்தில் பிரியமாயிருப்பார்கள். மூடனாக வும் குரூபியாகவும் இருக்கிறவனிடத்தில் 'அவர் எப்படி யிருந்தாலும் நமக்கு வெறுப்புக் கூடாது. நம் மனது என்று ஒன்று வேண்டாம். நாம் அப்படி யிருந்துவிட்டால் என்ன பண்ணுவோம்' என்று நினைக்கவேண்டும்.

அவளுக்கு அவருடைய செய்கையால் மான நஷ்டம் முதலிய குறைகள் வரும். அதற்காக ஸ்திரீகள் வருந்தக் கூடாது. 'நாம் அப்படிப் பிறந்தால் என்ன பண்ணுவோம்' என்று இருக்க வேண்டும். அசட்டைப் பின்பற்றினால் அப்பொழுது அதிகப் புண்ணியம். 'நமக்கு ஒரு மனது; அது இவருடைய மனது' என்று அநுஸரித்து வருபவள்தான் பதிவிரதை. எத்தனை கஷ்டம் வந்தாலும், 'அவர் நல்ல பதியாக இருந்தால் நம்முடைய பாதிவிரத்தியத்தைக் காட்ட முடியாது. பரமேசுவரன் இப்படிக் கொடுத்துப் பார்க்கிறார்' என்று சந்தோஷமாக இருக்கவேண்டும். அவமானம், கஷ்டம் முதலியவைகளெல்லாம் கொஞ்ச காலந்தான் இருக்கும். பதியை அநுஸரிப்பதால் வந்த அவமானம் கொஞ்ச காலந்தான் இருக்கும். 'இருக்கட்டும்; அவர் மனதுதான் நம் மனது. நமக்கென்று வேறு இல்லை.' என்று இருந்துவிட்டால் அதிக புண்ணியம் உண்டாகிறது. அவமானம் முதலியவைகளுக்குப் பயந்துகொண்டு விரோதித்துக்கொண்டு இருந்தால் கொஞ்சம் இஹத்தில் லாபம் இருக்கலாம்; நஷ்டம் அதிகம். சித்தவிருத்தியையே அர்ப்பணம் பண்ணிவிட வேண்டும். பதி நன்றாக இருந்தால் அவர் நன்றாக இருக்கிறாரென்பதற்காக அன்பாக இருப்பது பாதிவிரத்தியம் ஆகாது.

விவாஹ ஸம்பந்தங்கள் இதர தேசங்களில் ஒப்பந்தம் (contract) மாதிரி இருக்கிறது. இருக்கிற வரைக்கும் கஷ்டமில்லாமல் அன்போடே இருக்கவேண்டும் என்று சொல்லி நமக்குப் பிரேமை பேர்தாது என்றும் சொல்லுகிறார்கள். அந்தக் கல்யாணங்களும் ஸ்வாமி ஸந்நிதானத்தில்தானே செய்கிறார்கள்? ஆனாலும் அவைகளுக்கும் நம்

முடைய விவாஹத்துக்கும் வித்தியாஸம் உண்டு. எல்லோ ரும் தங்களுக்கிருப்பவைகளை ஓர் இடத்தில் அர்ப்பணம் பண்ணவேண்டும். புருஷன் குருவினிடத்தில் அர்ப்பணம் பண்ணவேண்டும். ஸ்திரீகள் பதியினிடத்தில் அர்ப் பணம் பண்ணவேண்டும். ஏழு எட்டுப் பேரைக் குருவாக வைத்துக்கொண்டால் கஷ்டம். அப்பொழுது மனது மாறும். ஆகையால் ஒரு குருவைத்தான் வைத்துக் கொள்ளவேண்டும். அதைப் போல ஸ்திரீயானவள் மனதை ஒருவரிடமே அர்ப்பணம் பண்ண வேண்டும். நம் முடைய மனதுக்கு தோன்றுவதை விட்டுவிட வேண்டும். லோகத்தில் லாப நஷ்டம் என்பவை உண்மையில் இல்லை. அவை கொஞ்சநாள் இருப்பது போல் தோன்றுவன. பாக்கி இடங்களில்தான் லாப நஷ்டம் பார்க்க வேண்டும். அந்தக் குருவினிடத்தில் சரணாகதி பண்ணிவிட வேண்டும்.

भूमौ स्खलितपादानां भूमिरेवावलम्बनम् ।
त्वयि जातापराधानां त्वमेवालम्बनं गुरो ॥

மாடியிலிருந்து விழுந்தால் பூமி தாங்கும். மரத்திலிருந்து விழுந்தாலும் தாங்கும். பூமியிலிருந்து விழுந்தால் பூமி தான் தாங்கும். ஈசுவராபசாரத்தைக் குருவினிடம் சொல்லித் தீர்த்துக்கொள்ளலாம். குருவினிடம் அபசாரம் பண்ணினால், எங்கே அபசாரம் பண்ணி னோமோ அங்கேயே போக வேண்டும்.

குரு ஒருவரைத் தேடவேண்டுவது நமது கடமை. மனது மாறாமல் இருக்க வேண்டுமென்று பெரியவர்களை நாம் தேடுகிறோம். மனதை அர்ப்பணம் பண்ணுவதைப் பிரதானமாக வைத்துக் கொண்டால் யாரா யிருந்தாலும்

ஸரி; போதும். நல்லவர்களாக இருந்தால் நல்லதாக இருக்கும். நமக்கு என்ன காரியத்துக்காக அது வேண்டும்? அயோக்கியன் குருவாக இருந்தால் மனது நல்ல பக்குவம் அடையும். அப்படித்தான் இருக்க வேண்டும். பரீக்ஷித்து (Check) மனதின் பக்குவத்தைத் திடப்படுத்த ஏற்பட்டது அது; அதனால் அதிகப் புண்ணியம் உண்டென்று எனக்குத் தோன்றுகிறது. மஹான்களை அடைகிறது நம்முடைய மனோபக்குவத்தைப் பரீக்ஷிக்க விரும்பாத சோம்பலால்தான். அவர்கள் பெரியவர்களாக இருந்தால் நமக்கு ஒரு சக்தியும் இல்லை. நம்முடைய பக்தியும் பிரயோஜனப் பட வேண்டும். வெங்கடாசலபதி கோயிலில் அர்ச்சகர் மிகவும் அசுத்தியாக இருக்கிறாரென்று வைத்துக் கொள்ளுவோம். அதற்காக நாம் தரிசனம் செய்யாமல் இருக்கிறோமா? நாம் அர்ப்பணம் பண்ணுவதுதான் லாபம். குரு மஹானாக இல்லாவிட்டால் ஒவ்வொரு க்ஷணத்திலும் துன்பம் உண்டாகும். அதை மீறத் திடமாக இருந்தால் அதிகப் புண்ணியம் உண்டாகிறது.

புருஷன் குருவைத் தேட வேண்டும். எந்த ஸமயத்தில் விவாஹமாயிற்றோ அப்பொழுதே புருஷன் ஸ்திரீக்குக் குருவாகி விடுகிறான். அவன் எவ்வளவுக் கெவ்வளவு துஷ்டனாக இருக்கிறானோ அவ்வளவுக் கவ்வளவு அர்ப்பண சக்தி அதிகமாகிறது. அவனுடைய மனதின்படி போவது தான் நம்முடைய காரியமென்று நினைக்க வேண்டும். அதுதான் பாதிவிரத்தியம். இவன் பணக்காரன். அழகாக இருக்கிறான் என்ற ஞாபகங்கள் தோன்றுவதற்கு முன்பே நமக்கு ஏற்பட்ட இடம் இது என்று நினைத்து அப்புறம் அந்த இடத்தில்

எல்லாவற்றையும் அர்ப்பணம் பண்ணிவிட வேண்டும். இது ஸ்வல்ப பேர்களுக்குத்தான் ஏற்பட்டது. அதாவது பிராம்மணர்களுக்கு ஏற்பட்டது. மற்றவர்களுக்கு தேஹபுஷ்டிப் பிரதானம். அவர்களுக்கும் இது வேண்டும். ஆனால் அது அடுத்தபடியானதுதான். இந்த விஷயங்களெல்லாம் தெரிந்து கொள்ளாமல் சட்டம் ஏற்படுத்திவிடுகிறார்கள். அதற்காகப் பல பொய்க் காரணங்கள் சொல்லுகிறார்கள்.

புருஷன் நல்ல இடமாக, தர்மத்துக்கு அநுஸரணையாக இருக்கத் தக்க இடமாகப் பார்த்துக் கிரஹிக்க வேண்டும். கன்னிகைக்கும் மனதை அர்ப்பணம் பண்ண ஓர் இடம் வேண்டும். இரண்டு பேரும் சேர்ந்து லோகத்துக்கு நல்ல பிரஜைகளை உண்டாக்கவேண்டும்.

இந்த விவாஹத்தைப் பற்றி 20 வருஷகாலமாக நம்முடைய தேசத்தில் பல பேர் பல விதமாகச் சர்ச்சைகள் பண்ணிப் பலவித அபிப்பிராயங்களை உண்டாக்கி வருகிறார்கள்.

விவாஹத்தில் அக்கினி ஸம்பந்தம் ஏற்படுகிறது. அதுவரையில், பிரம்மசாரியாயிருக்கும்பொழுது ஸமிதாதானம் பண்ணவேண்டும்; அப்புறம் ஔபாஸனாக்கினி ஏற்படுகிறது. ஸந்யாஸி அக்கினியை ஆத்மாவில் வைத்துக்கொள்ளுகிறான். ஔபாஸனாக்கினியை ஸ்திரீ புருஷர்கள் இரண்டுபேரும் ஆராதிக்கவேண்டும்.

ஔபாஸனம் பண்ணிவருவதோடு சுக்கில பிரதமையிலும், கிருஷ்ண பிரதமையிலும் ஸ்தாலீபாகம் பண்ண வேண்டும். அது ஸ்திரீ இல்லாமல் புருஷன் பண்ணக் கூடாது. புருஷன் வீட்டில் இல்லாவிட்டாலும் ஸ்திரீ ஔபாஸனம் பண்ணலாம். கிருஹநிர்மாணத்தில்

ஔபாஸனத்துக்கு இடம் சொல்லப்பட்டிருக்கிறது. கிருஹ நிர்மாணம் கல்பஸூத்திரங்களில் சொல்லப்படுகிறது. வைசுவதேவபலி இந்த இந்தத் துவாரத்தில் செய்யவேண்டும் என்று அவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. வர்ணாசிரமதர்மத்தை அநுஸரித்து கிருஹ நிர்மாணம் சொல்லப்பட்டிருக்கிறது. நான் பூஜை பண்ணுகிறேன். அதற்கென்று சில இடம் இருக்க வேண்டும். பங்களா ஒன்றில் எல்லா இடமும் ஸமமாக இருக்கிறது. அப்படிப்பட்ட இடம் ஒன்றில் பூஜை செய்ய ஆரம்பித்தால் கூட்டம் அதிகமாக வந்தால் மேலே மேலே வந்து பூஜைக்குப் பக்கத்தில் வந்துவிடுகிறார்கள். ஸ்திரீகள்-புருஷர்கள், விழுப்பு, மடி, ஆசார அநுஷ்டானம், வர்ணாசிரம தர்மம் முதலிய பிரிவுகள் அந்தக் கூட்டத்தில் மாறி விடுகிறது. பங்களா அப்படி மாறும்படிச் செய்து விடுகிறது. இந்தச் சில்பம் யாருடையது? இந்த மாதிரி வித்தியாஸங்கள் அல்லாதவருடைய சில்பம் தனித் தனியாக இருக்க வேண்டும். எல்லோருக்கும் இடம் இருக்க வேண்டுமென்ற ஆசையிருந்தாலும் இடமானது ஒன்றாகப் பண்ணிவிடுகிறது. மேடை, கூடம், உள் என்று தனித்தனி இடங்கள் இருந்தால் அப்பொழுது வருபவர்கள்கூடத் தனித் தனியாக உட்கார்ந்து கொள்ளுவார்கள். சில்பமே அவர்கள் உட்கார்ந்து கொள்ள வேண்டிய மாதிரியைச் சொல்லிக் கொடுக்கும். நம்முடைய ஸம்பிரதாயத்தை அநுஸரித்து நம்முடைய சில்பம் ஏற்பட்டிருக்கிறது. கீழே சிமெண்டுத் தரையாக இருந்தால் எச்சிலை மெழுக ஜலம் விட்டால் எல்லாம் ஒரே எச்சிலாய்விடுகிறது. அந்தச் சில்பம் உடையவர்கள் மேஜையின்மேல் சாப்பிடுகிறவர்கள். ஆகையால் அவர்களுக்கு எப்படி இருந்தாலும் பாதகமில்லை. நமக்குத்தான் கஷ்டமாக இருக்கிறது.

நம்முடைய சில்பப்படி கிருஹநிர்மாணம் பண்ண வேண்டும். கிருஹஸ்தன் என்பது கிருஹம் என்பதி லிருந்து ஏற்பட்ட பெயர். அவன் நம்முடைய சில்பப்படி தான் கிருஹநிர்மாணம் செய்ய வேண்டும். அதை ஸூத்திரக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள்! பற்று, விழுப்பு, மடி, எச்சில் முதலியவைகளைக் கவனித்துக் கொண்டு இருக்க விரும்புகிறவர்கள், நம்முடைய சில்பத் தைக் கவனிக்க வேண்டும். மற்றவர்கள் சில்பப்படி உள்ள இடங்களில் அவைகளை அநுஸரிக்க முடியாமல், சில நாள், 'இப்படியிருக்கிறதே என்ன பண்ணுகிறது' என்று எண்ணுகிறோம்; பின்பு ஆசாரம் மாறி விடுகிறது. கிராமத்தில் சில இடங்களில் நம்முடைய சில்பப்படி வீடுகள் இருக்கின்றன. நகரங்களில் கட்டிடங்கள் பெரியவைகளாக இருந்தாலும் தனித்தனி இருக்கவும் சாப்பிடவும் முடியாது. இப்பொழுது இந்த இடத்தில் இந்த மேடையில்லாவிட்டால் எவ்வளவு கஷ்டமாக இருக்கும்! அதனால்தான் வர்ணாசிரம தர்மத்தை அநுஸரித்து ஆபஸ்தம்பாதி ஸூத்திரங்களில் கிருஹ நிர்மாணம் சொல்லப்பட்டிருக்கிறது.

கிருஹஸ்தன் என்பதைத்தான் அகமுடையான் என்று தமிழில் சொல்லுகிறார்கள். கிருஹிணீ என்பதை அகமுடையாள் என்கிறார்கள்; தெலுங்கில் இல்லு என்பார்கள்.

கிருஹஸ்தாசிரமம் நான்கு வருணத்துக்கும் உண்டு. நான்காவது வர்ணத்துக்கு செளளபரியந்தமுள்ள ஸம்ஸ் காரங்கள் உண்டு. ஒளபாஸனாதி பாகயஜ்ஞங்களையும் அவர்கள் பண்ணவேண்டும். அதனால்தான் விவாஹ காலத்தில் அவர்கள் ஒளபாஸனம் பண்ணுகிறார்கள்.

வைத்தியனுத தீக்ஷிதீயத்தில் அவர்களுக்கு ஔபாஸனம் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் அந்த அந்த சுலோகரூபமான மந்திரங்களைக் கொண்டு பண்ணவேண்டும்.

கிருஹஸ்தன் ஔபாஸனம் பண்ணவேண்டும். அவன் இல்லாதபொழுது பத்தினி பண்ணலாம். ஸ்தாலீபாகம் புருஷன் வந்துதான் பண்ணவேண்டும். ஔபாஸனுக்கினி நடுவில் விச்சின்னமானல் புருஷன் வந்தவுடன் மறுபடியும் அக்கினி ஸந்தானம் பண்ணிக்கொள்ள வேண்டும்.

பாரஸீக தேசத்து ஜனங்களிடத்தில் மாறுபட்ட நம்முடைய வைதிகாநுஷ்டானம் இருக்கிறது. அவர்களுடைய பிரதான மதக்கிரந்தத்துக்குச் ஜெண்டவஸ்தா என்ற பெயர் இருக்கிறது. அது சந்தோவஸ்தை என்பதன் திரிபு. ஸௌராஷ்ட்ர தேசத்திலிருந்து ஒருவர் போனர். அவர் அவர்களுக்குக் குருவாக ஏற்பட்டார். அவரை ஸௌராதஸ்தர் என்று சொல்லுகிருர்கள். ஸௌராஷ்ட்ரர் என்பதன் திரிபுதான் அது. அவர் ஸந்ததி தான் பாரஸீகர்கள் (Parsees). ருக் வேதத்தில்,

अग्निमीळे पुरोहितम् ।

என்று சொல்லி யிருக்கிறது. அக்கினியில் பரமேசுவரனை ஆராதிக்க வேண்டும். தீப சிகையில் பரமேசுவரன் இருக்கிருர். அது ஜோதிர்லிங்கம்; தேஜோரூபமானது. அந்த மகாலிங்கம் அந்தகாரத்தை நிவர்த்திக்கிறது. அந்தத் தீப சிகையில் மூன்று வர்ணம் காணப்படும். பச்சை, மஞ்சள், சிவப்பு என்ற மூன்று வர்ணங்களும் தீப சிகையில் இருக்கின்றன. அந்த

மூன்றைப் போலத்தான் லிங்காகாரத்தில் பிரம்ம விஷ்ணு ருத்திர மூர்த்திகளாகப் பாகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. காயத்திரியிலும் ஸூர்யனிலும் அக்கினியிலும் சம்பு இருக்கிறார் என்று நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்கள் சொல்லியிருக்கிறார்கள். திருவண்ணாமலையில் பரமேசுவரனை அக்கினி ஸ்வரூபியாக ஆராதிக்கிறார்கள். கேரளத்தில் விளக்கேற்றி வைத்து அதில் அம்பாளை ஆராதிக்கிறார்கள். பகவதிஸேவை என்று அதைச் சொல்லுவார்கள்.

ஆகையால்தான், பார்ஸிகர்கள் அக்கினியைத் தெய்வமாக வைத்து வணங்குகிறார்கள். அது நமது வைதிக மதத்திற்கும் ஸம்பந்தமான காரியந்தான். அவர்கள் 'அக்னிமீளே' முதலிய மந்திரங்களைக் கொஞ்சம் மாற்றிச் சொல்லுகிறார்கள். அவர்கள் ரொம்ப ஜாக்கிரதையாக அக்னியைக் காப்பாற்றுகிறார்கள். அவர்கள் க்ஷத்திரியாபாஸர்கள். மனு தர்ம சாஸ்திரம் முதலியவற்றில் கர்மாநுஷ்டானம் பண்ணி வைக்கப் பிராம்மணர்கள் இல்லாத பொழுது க்ஷத்திரியத்துவம் போன க்ஷத்திரியாபாஸர்களாகச் சீனர்களும் திராவிடர்களும் சொல்லப்பட்டிருக்கிறார்கள். பார்ஸீகர்களிடம் வைதிக அநுஷ்டானபாஸம் காணப்படுகிறது. ஆபாஸம் மாறுவது. அவர்கள் எப்படி இருந்தாலும் அக்னியைக் காப்பாற்றுவதை ஒரு முக்கிய காரியமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான்கு வர்ணத்தாரும் அக்கினியை வைத்துக் கொள்ள வேண்டும். ஔபாஸனாதி அக்கினி கார்யங்களில் மந்திர கலாபம் நிறைய இருக்கிறது. அதனால் அந்த அக்னியைக் காப்பாற்றி வந்தால் பூதப் பிரேத

பிசாசாதிகளால் வரும் கஷ்டங்களும் வியாதிகளும் வராது. இப்பொழுது எவ்வளவோ பிராம்மணர்கள் வீட்டில் பேய் முதலியவைகளால் கஷ்டப்படுபவர்களை வேப்பிலையால் அடித்து மந்திரிக்கிறார்கள்; பிரம்பால் அடிக்கிறார்கள். வைதிக அக்னி வீட்டில் இருந்து வந்தால் இவைகளெல்லாம் வேண்டாம். நாம் அதை வைத்துக் கொண்டிருந்தால் அந்த ரக்ஷையே நமக்குப் போதும். ஒரு உபத்திரவமும் வராது. ஸ்த்ரீகளுக்கு வைதிகமான தர்மத்தில் சொந்தமாக இருப்பது அது ஒன்று தான்.

ஔபாஸனம் செய்வதற்கு அகத்திலேயே நெல் குத்தி உமி வைத்துக்கொள்ள வேண்டும். அதனால் சாஸ்திரீயமான அரிசியை நாம் அடைகிறோம். சில ஏழை ஜனங்களுக்குப் பிழைப்பு உண்டாகிறது, சுதேசிக் கொள்கைப்படி யந்திரங்களுடைய உதவியை நாடாமல் இருக்கலாம். யந்திரத்தில் அரைப்பதனால் உண்டாகும் உஷ்ணம் இல்லை. உமியும் கிடைக்கும். அகத்தில் இருப்பவர்களே குத்தினால் சரீரதிடம் உண்டாகும். எத்தனைக் கெத்தனை யந்திரத்தினிடம் நாம் போகிறோமோ அத்தனைக்கத்தனை கஷ்டந் தான் உண்டாகிறது.

ஔபாஸனாக்கினியை ஒவ்வொரு வீட்டிலும் வைத்துக் கொண்டு இரண்டு மந்திரமாவது சொல்லித் தினமும் அக்ஷதை போட்டு வரவேண்டும். அந்த ரக்ஷை நமக்குப் பெரிய ரக்ஷையாக இருக்கும். ஔபாசனத்திலிருந்து தான் பஸ்மதாரணம் ஏற்பட்டது. அந்த ரக்ஷைக்கு மந்திரம் உண்டு. இன்ன இன்ன இடத்தில் இன்ன இன்ன மந்திரம் சொல்லி அக்ஷதை போட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

விவாஹத்தில் மூன்று நாள் பிரம்மசரிய விரதத்தோடு இருக்க வேண்டும். அது எல்லாக் கல்யாணத்துக்கும் பொது. நாலாவது நாள் சேஷஹோமம் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

விவாஹ தீக்ஷையை ஸம்வத்ஸர தீக்ஷை என்று சொல்லுவதுண்டு. முக்கியகல்பம் ஒரு ஸம்வத்ஸரம். மூன்று நாள் வெளியில் போகக்கூடாது என்று இப்பொழுது வைத்திருக்கிறோம். சிலர் ஒரே நாளில் விவாஹம் பண்ணிவிடுகிறார்கள். மூன்று நாள் பண்ணுவது கடைசி பக்ஷம். அதற்குக் குறைந்தால் ஔபாஸனஸித்தி ஏற்படுகிறதில்லை. லௌகிகத்தில் செலவு அதிகம் ஏற்படுவதால் ஒரு நாள் விவாஹமாகப் பண்ணவேண்டுமென்று முயற்சி பண்ணுகிறார்கள். ஐம்பது வருஷங்களுக்கு முன் விவாஹ விஷயத்தில் இவ்வளவு கஷ்டம் இல்லை. வைதிக கர்மாவுக்குப் பணம் செலவழிக்கவேண்டிய அவசியம் இல்லை. விவாஹம் ஸந்தியாவந்தனம் போன்ற ஒரு வைதிககர்மாதான். பணத்தால் பண்ணவேண்டியதாக இருந்தால் எல்லோரும் பண்ணவேண்டுமென்று வைக்கமாட்டார்கள். ஆத்ம ஸம்ஸ்காரமான காரியங்களில் பண ஸம்பந்தத்தை வைக்கக்கூடாது. அப்படி வைத்திருந்தால் பணக்காரராக இல்லாவிட்டால் மஹாதோஷம் வரும் என்று ஆகிவிடும். பணத்துக்கும் கர்மாநுஷ்டானத்துக்கும் ஸம்பந்தம் வைப்பது தப்பு. ஏழை முதல் பணக்காரன் வரை எல்லோரும் செய்வது கர்மாநுஷ்டானம். பழைய காலத்தில் அப்படித்தான் நடந்தது. காலக்ஷேபத்தைப் பற்றிக் குறைவே இல்லாமல் இருந்தது. 'வேலை இல்லையே! எப்படிச் சாப்பிடுவோம்!' என்று நினைக்க

மாட்டார்கள். சாப்பாட்டைப் பற்றிய கவலையே கிடையாது. எவ்வளவு ஏழையானாலும் சாப்பாட்டுக் கவலை அவனுக்கு இராது. கல்யாணத்தைப்பற்றிக் கவலையில்லை. வீடு கூரைவீடாகத்தான் இருக்கும்.

இந்தக் காலத்திலோ, வீடு பெரியதாக இருக்கிறது; சட்டை பெரிது; ஆனாலும் 'அடுத்த மாதம் என்ன பண்ணுவோம்!' என்று பயப்படுகிறார்கள். இத்தகைய ஸ்திதி இப்பொழுது வந்திருக்கிறது. வியாபார ஸௌகரியம் அதிகமாக ஏற்பட்டதனால் விளைந்த 'ஸுகம்' இது. ரயில் தந்தி தபால் முதலியவை வந்தன. தாரித்திரியமும் வந்தது. ரயில் தந்தி ஏற்பட்ட காலத்தில் ஒரு கலஹம் ஏற்பட்டதாக எழுதியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் சுருட்டிக்கொண்டு போய் விடுவார்களென்று கலஹம்பண்ணினார்கள் என்று வாசித்துச் சிரித்திருக்கிறோம். இப்பொழுது அதிகப் பணம் இருப்பதாகப் பாவனை மட்டும் இருக்கிறது. நெல் விளைகிறது; மிஞ்சுகிறது. ஆனால் திகில் போகவில்லை. எல்லாத் தேசத்து ஜனங்களும் கஷ்டப்படுகிறார்கள். வேகமாக லாபம் ஸம்பாதிக்க ஆரம்பித்ததன் பலன் இது. கல்யாணமும் அப்படிக் கஷ்டத்தைத் தருவதாகிவிட்டது. அதிகச் செலவு பண்ண ஆரம்பித்துவிட்டோம். அதிக ஸாமான்களை வைத்துக்கொண்டிருக்கிறோம். அவசியத்துக்கு அதிகமாக எல்லாவற்றையும் சுமத்திக் கொள்ளுகிறோம். அந்தக் காலத்தில் அநேகமாகப் பல வீடுகள் கூரை வீடுகளாகவே இருக்கும். கொஞ்சம் அதிகமானால் ஓட்டு வீடாக இருக்கும். மண்சுவர்தான் இருக்கும். கொஞ்சம் காரைச் சுவர் இருக்கும். அகத்தில் ஏட்டுச் சுவடிகள் வைக்கப் பனைமட்டைப் பெட்டி இருக்கும்.

விபூதிபோடும் சுரைக் குடுக்கை இருக்கும். இரண்டு மூன்று மணைகள் இருக்கும். அடுப்பு இருக்கும். இவ்வளவுதான். இப்பொழுதோ ஸாமான்கள் அதிகம். சட்டைத்துணி, உடுப்புக்கள் நிறைய வாங்கவேண்டி இருக்கின்றன. அவைகளைச் சுத்தம் பண்ண ஸாமான்கள் வேண்டி இருக்கின்றன. உத்தமமான வஸ்திரம் லௌகிகத்திற்கு வேண்டியிருக்கிறது.

ஸாமான்யமாக இருந்தால் ஸமமான ஸம்பந்தி வர மாட்டார்கள். அதற்காக இப்பொழுதிருந்தே அதிகச் செலவு பண்ணவேண்டி யிருக்கிறது.

நகரத்தில் வந்து ஜீவனம் பண்ண ஆரம்பித்தார்கள். நிலத்தையெல்லாம் விற்றுச் சர்ட்டிபிகேட்டுகளாக மாற்றிக் கொண்டார்கள். வித்தைக்கு உத்தியோகம் இப்பொழுது கிடைப்பதில்லை. ஜாதிக்குத்தான் கிடைக்கிறது. அதனால் வேறு ஜாதியில் பிறக்க வேண்டுமென்று பரமேசுவரனைப் பிரார்த்தனை செய்கிறார்கள். இந்த மாதிரி வந்துவிட்டதனால் தேசம் தத்தளிக்கிறது. இந்த வழியில் ஆரம்பித்தவர்கள் பிராம்மணர்கள் தான். அவர்கள் மட்டும் முதலில் நிலங்களை விற்றுச் சர்ட்டிபிகேட்டாகப் பண்ணிக்கொண்டார்கள். பின்பு 'நாமும் ஏன் அப்படி செய்யக்கூடாது?' என்று எல்லோரும் அப்படிப் பண்ணினார்கள். கிராமத்தை விட்டு நகரங்களுக்கு வந்தார்கள். அதனால் என்ன வந்தது? தாரித்திரியந்தான் அதிகமாயிற்று. முதலில் பிராம்மணனுக்கு வேலையில்லை யென்று சொன்னார்கள். அப்புறம் எல்லாருக்குமே இல்லை யென்று ஆகிவிட்டது. கல்யாணச் செலவுகளும் பிராம்மணனைப் பார்த்து எல்லோரும் பண்ண ஆரம்பித்து விட்டார்கள்.

வியாபாரம் முதலியவைகள் இப்பொழுது அதிகமாய் விட்டன. லாபத்தில் அதிக ஆசையால் வேகமாகக் காரியங்கள் நடக்கின்றன. கிராமத்தில் இருக்கிறவன் பட்டணத்துக்கு வந்துவிடுகிறுன். கிராமத்தில் குட்டிச் சுவர்கள் அதிகமாகின்றன. இங்கே வந்தால் அதிகச் செலவு செய்யவேண்டி யிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் காரணம மோட்டார் பஸ் வேகந்தான். வேகமான நிலைமை தாரித்திரியத்தில் கொண்டுவந்து விட்டு விட்டது. இவைகளெல்லாம் கர்மாநுஷ்டானத்தில் போய் முட்டி விவாஹத்திலும் வந்துவிட்டன. பழைய வாழ்க்கை வர வேண்டுமென்ருல் எல்லோரும் முயன்ருல்தான் முடியும். நமக்கு இஷ்டமாக இல்லாமல் இருந்தாலும் இப்படிப் பண்ணுகிற ஸ்திதிக்கு நாம் வந்து விட்டோம்.

சாஸ்திரத்தில் தாரித்திரியம் உண்டாக்குவதற்காகக் கர்மாநுஷ்டானங்கள் சொல்லப்படவில்லை. விவாஹம் பண்ணுகிறது ஒரு நாள்தான். அப்புறம் மூன்று நாள் மாப்பிள்ளை தன் சொந்த வீட்டில் தீக்ஷையோடு இருக்க வேண்டும். அந்தக் காலத்தில் மேளம் வேண்டாம், நலுங்கு வேண்டாம். மாற்ற விரும்புகிறவர்கள் இப்படி மாற்றலாம். இதுதான் வாஸ்தவமான சீர்திருத்தம் (Reform). பிள்ளையகத்துக்காரர் இதைச் செய்யலாம். "ஒரு நாள் கல்யாணம் உங்கள் அகத்தில் செய்வேன். பாக்கி மூன்று நாள் எங்கள் அகத்தில் செலவில்லாமல் பண்ணுவேன்" என்று சொல்லிவிடலாம். கல்யாணம் ஆன மறு நாள் கிருஹஸ்தன் ஔபாஸனுக்னியைத் தன் வீட்டிற்குக் கொணடுவர வேண்டும். அப்படி ஔபாஸன குண்டத்தை எடுத்துக்கொண்டு வரும்போதும், வண்டியில் வைக்கும்போதும, நுகத்தடியில் மாடுகளைப் பூட்டும்

போதும், ஓடத்தில் வைக்கும்போதும், மறுபடியும் வண்டியில் வைக்கும்போதும் சொல்ல வேண்டிய மந்திரங்கள் இருக்கின்றன. இப்பொழுது மோட்டாரில் வைத்துக்கொண்டு வரலாம். அதனால் ஒரு தோஷமும் இல்லை. அந்த நாளில் பக்கத்து ஊர்களில் ஸம்பந்தம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அதனால் ஔபாஸனத்தைக் கொண்டு போவது ஸௌகரியமாக இருந்தது. இப்பொழுது பிள்ளையகம் என்று ஒன்று வைத்துக் கொள்ளுகிறோமே, அங்கேயே மூன்று நாளும் பண்ண வேண்டியதைப் பண்ணலாம். யாரையும் சாப்பிட வேண்டுமென்று சொல்லவேண்டாம். ஸம்பந்திக்குக் கூடச் சாப்பாடு போடவேண்டாம். ஒரு நாளில் எல்லா வற்றையும் முடித்து விடுவது சாஸ்திர ஸம்மதம் இல்லை. விவாஹம் பண்ணுவது சாஸ்திரத்தை அநுஸரித்துத் தானே? அதைப் போல இந்தக் காரியத்தை பண்ண லாம். வட தேசத்தில் பிரம்மஸமாஜம் என்று ஒன்று இருக்கிறது. கல்யாணத்துக்குப் பயந்துகொண்டு பல பேர் அதில் சேருகிறார்கள்.

இரண்டு ரூபாயில் கல்யாணம் பண்ணிவிடலாம். உபாத்தியாயருக்குமட்டும் ஸம்பாவனை பண்ணினால் போதும். அதிகச் செலவு பண்ணவேண்டுமென்று அவசியமில்லை. ஆகையால், விவாஹம் பண்ணும் பிள்ளையகத்துக்காரர்கள் எவ்வளவு உத்ஸவம் உண்டோ அவ்வளவையும் முதல்நாளிலே பண்ணிவிடவேண்டும். அடுத்த நாளில் ஔபாஸனாக்கினியை எடுத்துக் கொண்டு தங்கள் வீட்டுக்கு வரவேண்டும். அங்கே மூன்று நாள் பண்ணவேண்டியவைகளைப் பண்ணலாம். இப்படிச் செய்தால் வீண் செலவு ஆகாது. தெலுங்கர்கள் கல்யாணத்தில் வெள்ளை வஸ்திரத்தை மஞ்சளில்

ந்தை த்துக் கட்டிக் கொள்ளுகிருர்கள். அது ஸுலபமாக இருக்கிறது. அதைத்தான் கட்டிக் கொள்ளவேண்டு மென்று வைத்துக் கொண்டிருக்கிருர்கள். உத்தர தேசத்தில் ஸாதாரணமாக ஸாமான்ய வஸ்திரங்களைத் தான் பெண்கள் கட்டிக்கொள்ளுகிருர்கள். இங்கேயும் அப்படிச் செய்து வரலாம்.

பிரவேச ஹோமம் என்று விவாஹ காலத்தில் ஒன்று செய்வதுண்டு. அது வரன் தன் வீட்டில் பிரவே சிப்பதற்குப் பண்ணுவது. விவாஹாக்கினியை எடுத் துக்கொண்டுபோய் ஒளபாஸன ஹோமத்தைத் தன்னுடைய வீட்டில் அவன் பண்ணவேண்டும். அங்கே பண்ணுவதற்குத்தான் ஒளபாஸனம் என்று பெயர். ஸௌகர்யத்தை உத்தேசித்தும் சாஸ்திர ஸம்மதமாகவும் முன் நான் சொன்னபடி செய்யலாம். ஒருநாள் கோவிலுக்குப் போய்க் கல்யாணம் பண்ணி விட்டு வந்துவிடுவது என்பது தப்பான காரியம். பணக் காரர்கள் அப்படிச் செய்ய ஆரம்பித்தால் ஏழைகளும் பின்பற்றுவார்கள்.

மற்றெரு கஷ்டம் இருக்கிறது. பிள்ளைக்குப் பணம் கொடுத்துத்தான் விவாஹம் பண்ணவேண்டும் என்பதையும் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

விவாஹ ஸம்பந்தமாக இதுவரையிற் பல ஸமாசாரங் களைச் சொன்னேன். பாதிவிரத்தியத்தைப் பற்றிச் சொன்னேன். பதி எவ்வளவு கெட்டவனுக இருந்தாலும், அப்படி இருக்கிருனே என்று ஸ்திரீ துக்கப்படக் கூடாது. அப்படி இல்லாமல் இருக்கவேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டும்; பிரீதியோடு அவனைப் பிரார்த் திக்க வேண்டும். கொஞ்சங்கூடச் சலிப்பில்லாமல்

இருக்கவேண்டும். அவர்கள் க்ஷேமத்துக்காக அவனைப் பிரார்த்திக்கவேண்டும். இப்படி இருக்கிருனே என்ற துக்கம் வரவேகூடாது. அவன் மனது சந்தோஷமாக இருப்பதை உத்தேசித்தே பிரார்த்திக்கவேண்டும். அவன் பின்னேடே போகவேண்டும். அதனுல்தான் பத்தினிக்குச் 'சாயா' என்று ஒரு பெயர் ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருந்து, தனக்கென்று ஒன்று இல்லாமல் இருந்தால் கவலை இல்லை. அதனுல் ஸ்திரீகளுக்கு லாபம்.

விவாஹ வயதைப் பற்றிச் சொன்னேன். விவாஹத்துக்கு மூன்று காரியங்கள் பிரதானம். அதை அநுஸரித்து பிரஹ்ம விவாஹத்துக்கு வயது ஏற்பட்டிருக்கிறது. ருக்மிணி முதலியவர்கள் க்ஷத்திரியர்களாகையால் பலவிதமான விவாஹங்கள் அவர்களுக்கு ஏற்பட்டன. ருக்மிணியின் விவாஹம் ராக்ஷஸம்; சீதை, தமயந்தி, திரௌபதி என்பவர்களுக்கு ஸ்வயம்வர விவாஹம்; சகுந்தலை காந்தர்வ விவாஹம் செய்து கொண்டாள்.

விவாஹமானவன் திரிராத்திர தீக்ஷையோடு இருக்கவேண்டுமென்று சொன்னேன். பிரம்மசரிய நியமத்தோடு மூன்று நாட்களும் பூர்ண பிரம்மசரிய நியமத்தை அநுஷ்டிக்கவேண்டும். ஸ்திரீ ஸங்கமமே இல்லாமல் இருக்கவேண்டியது ஒன்று. காந்தர்வாதிகளுக்கு அந்த அர்த்தம். பிராம்ம விவாஹத்துக்கு விசேஷ சாஸ்திரம் இருப்பதுபோல் இந்தத் தீக்ஷையிலும் விசேஷ அநுஷ்டானம் இருக்கிறது. பிரம்மசரியம் எட்டுவிதம். அந்த எட்டு விதங்களிலும் திரிராத்தர பிரம்மசரியத்தைப் பிராம்மணன் அநுஷ்டிக்கவேண்டும். தரிசனுதிகளிற்கூட பிரம்மசாரியாக இருக்கவேண்டும்.

ஒருநாள் விவாஹம் பண்ணுவது தப்பென்றும் சாஸ்திரப் பிரகாரம் ஸ⁻லபச் செலவில் கல்யாணம் செய்யலாமென்றும் சொன்னேன். ஒவ்வொரு வீட்டிலும் ஔபாஸனுக்கினி இருந்துவரவேண்டுமென்றும் சொன்னேன்.

இப்பொழுது உள்ள தாரித்திரியத்திற்குக் காரணம் வெள்ளைக்காரர்களுடைய வியாபாரவேகம் என்று சொன்னேன். இப்பொழுது எங்கும் தாரித்திரியம் காணப்படுகிறது. அமெரிக்காவில்கூடத் தாரித்திரியம் ஏற்பட்டிருக்கிறது. ராஜாங்கம்கூட தரித்திர நிலையை அடைந்துவிட்டது. என்ன பண்ணுகிறதென்று யோசிக்கிறோம். உபத்திரவமாக இருக்கிறது. எனக்கு ஒருவழி தோன்றுகிறது. ஆனால் அது முடியுமோ முடியாதோ என்பது தெரியாது.

ஒரு பிராம்மணர் ஒரு வேத பாடசாலையை வைத்திருந்தார். ஒரு நாள் ஒரு லௌகிகர் அந்தப் பாடசாலைக்கு வந்தார். அங்கே உள்ள பிள்ளைகளையெல்லாம் பார்த்துவிட்டு அவர், ''அநியாயமாக இவ்வளவு பிள்ளைகளை அடைத்துவைத்துக் கெடுக்கிறீர்களே! இவர்கள் இங்கிலீஷ் வாசிக்கவில்லையே! என்ன பிரயோஜனம்?'' என்று சொன்னாராம். அவர் அப்படிச் சொன்னாரென்று அந்தப் பாடசாலை வைத்த பிராம்மணர் என்னிடம் சொன்னார். ''இங்கிலீஷ் வாசித்தால் எவ்வளவு சம்பளம் வருகிறதோ, அதில் ஒரு பாகம் அநாவசியமான செலவுகளில் போகிறது. இங்கே இவர்களை அடைத்துப் போட்டதனால் அந்தச் செலவு லாபம். மாதம் 30 ரூபா சம்பளம் கொடுத்தாற்போலாயிற்று'' என்று சொன்னேன். இங்கிலீஷ் வாசித்தால் அதிகச் செலவு பழகிவிடுகிறது. காஞ்சி

புரம் போனால் சட்டை வேண்டியிருக்கிறது, உடுப்பு, வேலைக்காரன் (Servant), காப்பி முதலியவைகள் வேண்டும். எல்லாம் செலவு. இரண்டு நாள் போனால் அந்த இரண்டு நாளும் உத்தியோகம் செய்யாததற்காக அந்த நாட்களின் சம்பளக் குறைவு (Loss of pay) ஏற்படுகிறது. வைதிகனாக இருந்தால் அந்த ஊரில் ஐந்து ரூபாய் ஸம்பாதித்துக் கொண்டுவந்து விடுவான். பழைய நாளில் எவ்வளவு நாள் ஊர்ப் பிரயாணம் போகிறானோ அவ்வளவு நாள் சாப்பாடு லாபம். சட்டை, வாஹனம் முதலியவைகளுக்குச் செலவு இல்லை. வாடகை மோட்டார் (Taxi) செலவு இல்லை. வரும்படியில் இப்படிப் பல விதமாகப் போகிறவையெல்லாம் இங்கிலீஷ் படிக்காதவர்கள் ஸம்பாதிப்பதற்கு ஸமானந்தான். ஆகவே செலவை எல்லோரும் குறைத்துக்கொள்ளவேண்டும்.

எனக்கு மூன்று விதத்தில் குறைக்கலாம் என்று தோன்றுகிறது. எல்லோரும் ஸ்திரீகளுள்படக் கடைசித்தரமான வஸ்திரந்தான் வாங்குவது என்று வைத்துக்கொள்ளவேண்டும். காலையில் கோதுமைக் கஞ்சிதான் சாப்பிடுகிறதென்று வைத்துக்கொள்ள வேண்டும். அல்லது மோர் சாப்பிடலாம். ஒரு பழக்கத்தைப் பண்ணிவிட்டதால் அதை மாற்ற ஏதாவது ஒன்று வேண்டுமல்லவா? தக்ரந்தான் அமிர்தமென்று வைத்திய சாஸ்திரம் சொல்லுகிறது. இப்படிச் செய்வதனால் செலவில் நூற்றுக்கு அறுபது பங்கு குறைந்துவிடும் என்று தோன்றுகிறது. அரிசி எவ்வளவு வாங்குகிறோம்? பால், காப்பிக்கொட்டை எவ்வளவு வாங்குகிறோம்? பால் காப்பிக் கொட்டைதான் அதிகமாகச் செலவு. விவாஹத்துக்காகப் பணத்தைக் கொண்டுவா

என்று வரதக்ஷிணை வாங்குவதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். இப்படிப் பண்ணினால் டம்பம் போகும். அவை அநுபவத்தில் தெரிய வேண்டும். உசிதமானால் எடுத்துக்கொள்ளவேண்டும்.

விவாஹத்திற்காகப் பண்ண வேண்டிய செலவு ஒன்றும் சாஸ்திரத்தில் சொல்லப்படவில்லை. முன்னாளில் பெண் குழந்தைகளுக்கு நிறையப் பணங் கொடுத்தார்கள். இப்பொழுது பிள்ளைக்குக் கொடுக்கிறார்கள். அந்தக் காலத்தில் பணம் வாங்குகிறவர்கள் பெண் வீட்டுக்காரர் ஆகையால் கொஞ்சமாகச் செலவு பண்ணிக் கொண்டு பாக்கியை வைத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது பணம் கொடுக்கிறதோடு விவாஹச் செலவும் அதிகமாக இருக்கிறது. சாஸ்திரப் பிரகாரம் அலங்கிருத கன்னிகாதானம் பண்ணவேண்டும். தானத்துக்குத் தக்ஷிணை உண்டு. கன்னிகைக்கு பணம் வாங்குவது சாஸ்திர ஸம்மதமில்லை. சில ஜாதியில் இப்பொழுதும் கன்னிகைக்குப் பணம் வாங்குகிறார்கள். குருக்கள், வைகாநஸர்கள், தெலுங்கர்களில் சில ஜாதியார் இவர்களில் கன்னிகைகள் குறைவு. அதனால் கன்னிகைக்காகப் பணம் வாங்குகிறார்கள்.

வரசுல்கத்தால் அதிக ஸங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பிள்ளை வீட்டுக்காரர்கள் வாங்குகிற பணம் இப்பொழுது வீணாகத்தான் செலவழிகிறது. வாங்காவிட்டால் கௌரவம் இல்லை என்று நினைக்கிறார்கள். இந்தக் கஷ்டம் தீர்வதற்கு எவ்வளவோ பிரயத்தினம் பண்ணி வருகிறார்கள். தாரித்திரியம் வந்தால் தீரும்.

எனக்கு ஒரு மருந்து தோன்றிற்று. சொல்ல நினைத்தேன். இப்பொழுது ஸமயம் வாய்ந்தது. இந்தக் கஷ்டம் தீர அது ஒரு வழி என்று எண்ணியிருக்கிறேன்.

ந—5

முன் நாளில் ஏன் கன்னிகைக்குப் பணம் கொடுத்தார்கள்? இப்பொழுது ஏன் இப்படி மாறியிருக்கிறது?

கன்னிகை ஒன்று பிறந்தால் அவளை எப்படியாவது ஒரு வரனிடத்தில் ஒப்புவிக்கவேண்டும். இந்த அவசியம் இருக்கிற பரியந்தம் வாங்கிக்கொள்ளுகிற வரனைத் தேடவேண்டும். வரன்கள் அதிகமாக இருந்தால் கன்னிகையின் பிதாவிடம் வந்து பிரார்த்தித்துக்கொண்டு கன்னிகையைப் பெற்றுக்கொண்டு போவான்; பணம் கேட்கமாட்டான். ஆகவே கன்னிகைகள் குறைவாக இருந்தால் இந்த வரதக்ஷிணைக் கஷ்டம் இல்லாமற் போகும். விவாஹம் வியாபார விஷயமாய் விட்டது. அதிகமாக இருக்கிற ஸாமானுக்குக் கிராக்கியில்லை. குறைந்திருந்தால் நான்கு ஐந்து பேர் வந்தால் எது ஸௌகரியம் என்று பார்ப்பார்கள். ஸஹஜமாக அர்த்த ஸௌகர்யத்தைத் தான் பார்ப்பார்கள்.

கன்னிகைகள் குறைவாகப் பிறக்கவேண்டும். அதற்கு என்ன பண்ணுவது? சாஸ்திரரீதியாக என்ன பண்ணுவது? முன் காலத்தில் பிள்ளை வீட்டுக்காரர்களுக்குக் கஷ்டம் இல்லையா என்றால் அப்பொழுது இவ்வளவு அவஸரமில்லை. பெண்களுக்குத்தான் அவஸரமாகக் கல்யாணம் பண்ணவேண்டும். அந்தக் காலத்தில் கல்யாணம் பண்ணாமலும் இருக்கவில்லை. அப்பொழுது வரர்கள் அதிகம் இருந்தார்கள். ஏதனால் அதிகமாக இருந்தார்கள்? அதற்கு அந்தக் காலத்தில் என்ன செய்தார்கள்? அதுமாதிரி இப்பொழுதும் செய்தால் அப்படி ஆகுமல்லவா? புத்திரர்கள் என்ன காரணத்தால் அதிகமானார்கள்? அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். அதைக் கண்டு

பிடிக்கவேண்டும். அந்தக் காரணம் தர்ம சாஸ்திரத்திலும் வைத்திய சாஸ்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

பிராசீனமான ஆசாரம் உடையவர்களுக்குத் துர்ப்பலம் இல்லை; வியாதி இல்லை. பிராசீன ஆசாரத்தை இப்பொழுது அநுஷ்டித்து இருக்கிறவர்கள் ஸ்திரீகள் தாம். அவர்களிடம் ஸ்வல்பப் பழக்கமாவது இருக்கிறது. அதனால் அவர்களிடம் உண்டாகிறவர்கள் பெண்களாக இருக்கிறார்கள். புருஷர்கள் அதிகமாக பிராசீன ஆசாரத்தை வைத்துக்கொண்டிருந்தால் ஆண் ஸந்ததி அதிகமாக உண்டாகும். ஸ்தல தரிசனம், தீர்த்த ஸ்நானம், ஔபாஸனம் முதலியவைகளைப் புருஷர்கள் பண்ணி வந்தார்கள். இப்பொழுது அவர்களுக்கும் சேர்த்து ஸ்திரீகள் பண்ணுகிறார்கள். புருஷர்கள் ஆசாரத்தை விட்டதனால் புருஷப் பிரஜைகள் குறைவாக ஆகிவிட்டார்கள். அவர்கள் பிராசீன ஆசாரத்தை வைத்துக்கொண்டிருந்தால் புருஷப் பிரஜைகள் பிறப்பார்கள். இப்பொழுது பாட்மிண்டன், டென்னிஸ் முதலியவற்றை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளுக்குப் பதிலாக ஆசார அநுஷ்டானங்களை வைத்துக் கொள்ள வேண்டும். தாரித்திரிய நிவர்த்திக்கும் வரசுல்க நிவர்த்திக்கும் ஆசார அநுஷ்டானந்தான் வழி.

கூட்டம் கூடி யோசிக்காமல் கையெழுத்துப் போடுகிறார்கள். அந்தமாதிரி காரியங்களெல்லாம் தற்கால சாந்தியானவையே. நிரந்தரமாக இருப்பதற்கு இது தான் மருந்து. பிராசீன தர்மத்தோடு இருந்து லௌகிகமான விஷயங்களை விட்டுவிட வேண்டும். பிராதஸ்நானம், ஸந்தியாவந்தனம் முதலியவைகளைச்செய்துவர

வேண்டும். மனு பிராத ஸ்நானம் பண்ணுகிறவன் அகாலமரணம் முதலியவற்றைப் பார்க்கமாட்டான் என்று சொல்லியிருக்கிறார். அதனால் டாக்டர் பில் (Doctor Bill) குறையும். பிராதஸ்நானம், ஸ்வாமிதரிசனம் காயத்ரீ ஜபம் நாமாக நமது வேஷ்டியைத் துவைத்துக் கொள்ளுவது முதலியவைகளை வைத்துக் கொள்ள வேண்டும். இவைகளுக்காக கிளப் (Club) பிற்குப் போவது பீச்சுக்குப் போவது முதலியவைகளைக் குறைத்துக் கொள்ளலாம்.

முன்பு சொன்ன காரியங்கள் நியமமாகப் பண்ண வேண்டும். நம்முடைய தாரித்திரியத்தைப் போக்கிக் கொள்ள ஒரு ஸங்கல்பம் பண்ணிக் கொள்ளவேண்டும். ஒருநாள் கல்யாணமும் மூன்று நாள் அக்னி காரியமும் பண்ணவேண்டும். கதைசித்தரமாக உள்ள வஸ்திரத்தைக் கட்டிக்கொள்ள வேண்டும். ஆசார அநுஷ்டானங்கள் செய்துவர வேண்டும். ஒள்பாஸனம் செய்து வர வேண்டும். அதனால் புத்திரப்பிரதிபந்தம் நீங்கும். பிசாசு முதலியவைகளால் ஏற்படும் தோஷங்கள் இல்லாமற் போகும். புத்திரப்பிரதிபந்த தோஷம் இல்லையென்றால் வரசுல்கக் கஷ்டமும் மாறும்.

ஒளபாஸனம் முதலிய பாகயஜ்ஞங்களை எல்லோரும் பண்ணலாம். ஹவிர்யஜ்ஞங்களை ஏழையும், ஸோமயஜ்ஞங்களை ஏழைகளும் வைதிகர்களும் பண்ண லாம். நன்றாகத் தெரிந்த தீக்ஷிதர்கள் பண்ணினால் அவர்களுக்குப் பணம் கொடுத்து உதவி செய்யலாம், நியாயமாக எல்லோரும் பண்ணவேண்டும். ஆனால் காலஸ்திதி அதற்கு இடம் கொடுக்கவில்லை.

# 5. ஹவிர்யஜ்ஞங்களும் ஸோமயஜ்ஞங்களும்

[20—11—1932]

கர்ப்பத்தில் இருக்கிறபொழுது அந்த ஜீவனை உத்தேசித்துப் பண்ணுகிற ஸம்ஸ்காரங்கள் மூன்று. அப்புறம் பிறந்தவுடன் விவரம் தெரிகிறவரைக்கும் சில ஸம்ஸ்காரங்கள் உண்டு. இவைகளைப் பெற்றோர்கள் செய்யவேண்டும். விவரம் தெரிந்த பின்பு பண்ணுவது உபநயனம். பின்பு விவாஹம். அப்புறம் நித்தியம் பண்ணவேண்டியது பஞ்சமஹாயஜ்ஞங்கள். ஸ்நான ஸந்தி பண்ணுவது பஞ்சமஹாயஜ்ஞங்களுக்கு முன் ஆதாரம். உதயாத்பூர்வம் ஸந்தியாவந்தனம் செய்ய வேண்டும்.

எல்லோரும் தங்கள் தங்களுக்குச் சொந்தமாக ஒரு பாத்திரம் வைத்துக்கொள்ளவேண்டும். வெளியூருக்குப் போனாலுங்கூட அதை எடுத்துக்கொண்டு போக வேண்டும். அதையே உபயோகிக்கவேண்டும். பொதுவான பாத்திரத்தை உபயோகிக்கக் கூடாது. இத்தனைக்கும் மூலமானது சௌசாசாரம். தேஹம் முதலியவை சுத்தமாக இருக்கவேண்டியது அவசியம். நம்முடைய தேகத்தை மண், தீர்த்தம் முதலியவைகளால் சுத்திபண்ணவேண்டும். கேவலம் ஜலசுத்திமட்டும் இருந்தால் கர்மயோக்கியமில்லை. சௌசாசாரம் இல்லை என்றால் எது பண்ணினாலும் உபயோகமில்லை. தேகத்துக்கு அசுத்தி ஏற்படுகிறபொழுது கால் கைகளை இத்தனை ஆவிருத்தி சுத்தி பண்ணவேண்டும் என்று தர்மசாஸ்திரம் சொல்லுகிறது. வாய் கொப்புளிப்பது இவ்வளவு தரம் என்பது உண்டு. செருப்பு, குடை

எல்லாருக்கும் தனித்தனியாக இருப்பது மாதிரி குழந்தை முதற்கொண்டு தனித்தனி தீர்த்தபாத்திரம் வைத்துக் கொள்ளவேண்டும்.

சௌசமும் தீர்த்தபாத்திரம் வைத்துக்கொள்ளுவது மாகிய இரண்டும் உத்திரதேசத்தில் இன்னும் இருந்து வருகின்றன. மற்ற விஷயங்களைப் பார்த்தால் அழுக்கு வேஷ்டி கட்டிக்கொண்டிருக்கிறார்களென்று தோன்று கிறது. இந்தத் தேசத்தில் வெளிவேஷம் பலமாக இருக்கிறது. அவர்கள் கொஞ்சம் கவனித்தால் நம்மை வெறுக்கிறார்கள்.

ஹைதராபாத்தில் கோதாவரி நதி வருகிறது. கௌதமி என்று அதற்கு ஒரு பெயர். அந்தப் புண்ணிய நதிதீரத்தில் பிராம்மணர்கள் இருக்கிறார்கள். புண்ணிய நதிஸ்நானம் செய்துகொண்டு நதிதீரத்தில் செய்யும் வேதாத்தியயனாதி பலன் அதிகம். நைஜாம் ராஜ்யத் தின் நடுவில் மந்தனன், தர்மபுரி என்று இரண்டு அக்கிரஹாரங்கள் இருக்கின்றன. அவைகளில் ஆயிரம் வீட்டிற்குமேலே பிராம்மணர்கள் வீடுகள் இருக்கின்றன. அந்தமாதிரி இந்தத் தேசத்தில் கல்லிடைக்குறிச்சியில் இருக்கின்றன. அந்த இரண்டு அக்கிரஹாரத்திலுள்ள பிராம்மணர்கள் எல்லோரும் வேதாத்தியயனம் பண்ணி யிருப்பார்கள். அது தெலுங்கு தேசம். அடுத்தாற் போல் மஹாராஷ்டிர தேசம் இருக்கிறது. அந்தப் பக்கத்திலிருந்து இங்கே ஒரு பிராம்மணன் வந்தான். மிகவும் பக்தியாக இருந்தான். ஒரு நாள் ஊருக்குப் போகவேண்டுமென்று சொன்னான். 'இன்னும் ஒரு நாள் இரு' என்றேன். 'இந்த அநாசாரத்தில் எப்படி யிருக்கிறது? அவரவர்களுக்குத் தீர்த்தபாத்திரம்

இல்லை. பட்டினி கிடக்கிறேன். இந்த அநாசாரத்தில் சாப்பிடப் பிடிக்கவில்லை.' என்று அவன் சொன்னான். இன்னும் ஓரிடத்தில் சில பைராகிகள் இருந்தார்கள். மிகவும் பக்தியுடையவர்களாக இருந்தார்கள். என்கூட வந்திருக்கிறவர்களைப் பார்த்துவிட்டுக் கத்தினார்கள். "இவர்களெல்லாம் மிருத்திகா சுத்தி பண்ணிக் கொள்ளுவதில்லை. நீங்கள் ஆசார்யர்களாக இருந்து இப்படி இவர்கள் இருக்கலாமா"? என்றார்கள். அவர்கள் தேஹ சுத்தி பண்ணிக்கொள்ளுவதில் தவறமாட்டார்கள். தீர்த்தபாத்திரம் தனியாக அவர்களுக்கு உண்டு. அழுக்கு வேஷ்டியை உடுத்திக்கொண்டிருப்பார்கள்; சில அநாசாரங்களும் இருக்கலாம். ஆனால் அடிப்படையான அநாசாரம் இந்தத் தேசத்தில்தான் இருக்கிறது. பட்டணத்தைத் தாண்டி வடக்கே போனால் ஒவ்வொருவரும் தீர்த்தபாத்திரம் தனியாக வைத்துக் கொண்டிருப்பார்.

ஸ்நானம் பண்ணவேண்டுமென்றால் முதல் நாள் மடியை மடி சஞ்சியில் வைத்துக்கொண்டால் எடுத்து உடுத்திக்கொள்ள ஸௌகரியமாக இருக்கும். ஆகையால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மடிஸஞ்சி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஸ்நானம் செய்தபின்பு எதையாவது உடுத்திக்கொள்ள வேண்டியிருக்கும். சரீரசுத்திக்கு மிருத்திகையைப் போல நல்லது வேறு இல்லை. ஸ்நானத்துக்கும் மிருத்திகை சொல்லப்பட்டிருக்கிறது.

मृत्तिके हन मे पापम् । [தைத்திரீயாரண்யகம்]

மிருத்திகையால் சுத்தி பண்ணிக்கொண்டு போனால் அருவருப்புப்போகும். ஸோப்புப் போட்டாற் போகிறாற்

போல் போய்விடும். ஸோப்புப் போட்டுக் கொண்டால் அப்புறம் இல்லாத அழுக்கு வந்துவிடுகிறது. மிருத்திகை எல்லாத் திரவியங்களிலும் விசேஷமானது. எல்லா ஓஷதிகளும் உண்டாகின்ற இடம் அது. அதற்கு, 'பூ' (भू) என்பது பெயர். உண்டாகிறது என்பது அதன் அர்த்தம். எல்லாப் பிராணிகளும் அதில்தான் உண்டாகின்றன. மிருத்திகை, ஜலம் என்னும் இந்த இரண்டினுல்தான் பிரபஞ்சமே உண்டாகிறது. ஸ்நானம் பண்ணும்போது மிருத்திகையால் உடம்பைத் தேய்த்துக் கொள்ளவேண்டும் என்று வேதத்தில் சொல்லி யிருப்பதை வைத்துக்கொண்டு தான் வைஷ்ணவர்கள் திருமண் என்று வைத்துக்கொண்டார்கள். ஔபாஸனம் ஏற்பட்டபோது விபூதி ஏற்பட்டது. பூமியிலிருந்து மண்ணைத் தோண்டி எடுக்கிறதுபற்றி ஆதிவராஹ மூர்த்தி பூமி முழுவதையும் எடுத்தார். ஔபாஸனுக்கினிஹோத்ர ரக்ஷைதான் முதலில் ஏற்பட்ட விபூதி. முதலில் நாமம் போட்டுவந்தது கோபீசந்தனத்தால் தான். அது மண் தான். விஷ்ணுபக்தர்கள் ஊர்த்வ புண்ட்ரம் அதினுல் தான் போட்டுவந்தார்கள். ஸ்ரீ ராமாநுஜாசார்யருக்குப் பின் இந்த வெள்ளை மண்ணைத் தாரணம் பண்ண ஆரம்பித்தார்கள். அதற்குமுன் கோபீசந்தனந்தான் போட்டு வந்தார்கள்.

வாய் கொப்புளிப்பதில் மூன்று பிரயோஜனங்கள் இருக்கின்றன. ஆகார ஸமயத்திலும் தந்ததாவன ஸமயத்திலும் அவசியம் கொப்புளிக்க வேண்டும். அதனுல் பல் அழுக்குப் போய்விடுகிறது. எந்த வியாதி வந்தாலும் பல் அழுக்கால் வந்ததென்றும் பல்லைப் பிடுங்கிவிடவேண்டுமென்றும் இந்தக் காலத்தில்

டாக்டர்கள் சொல்லுகிருர்கள். அந்தக் காலத்தில் பல்லேச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டிய பழக்கங்களெல்லாம் இருந்தன. இன்னது இன்னதற்கு இவ்வளவு தடவை கொப்புளிக்கவேண்டும் என்று சாஸ்திரங்களிற் சொல்லப் பட்டிருக்கிறது. ஒன்றுமட்டுமல்லவென்று தோன்றுகிறது. பத்துத்தரம் கொப்புளித்தால் ஏப்பம் வருகிறது; ஜீர்ணசக்தி ஏற்படுகிறது. அதற்கு அறிகுறி தான் ஏப்பம். கொப்புளிப்பதால் நரம்புக்கு வேலே உண்டாகிறது. கொப்புளிக்கிற காரியம் (Action) ஜீர்ண சக்தி உண்டாக்கி ரசிது கொடுத்துவிடுகிறது. ஆஹாரம் ஜீர்ணமாவதற்காக பிராணிகள் அசைபோடுகிறது. வாய் கொப்புளித்தால் பல் இடுக்குக்களில் புகுந்திருக்கிற பதார்த்தங்களெல்லாம் போய்விடும். முப்பது தரம் நாற்பது தரம் என்று கொப்புளிக்கவேண்டிய காரியங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அதுவே தேஹாப்பியாஸம் (Exercise) மாதிரி இருக்கிறது.

சௌசம் உடம்பு ஸௌக்கியமாக இருப்பதற்கு அவசியமானது. வஸ்திரங்களேக் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். நார்மடியையும் கம்பளியையும் துவைக்கலாம். பட்டை அமாவாஸையில்தான் சுத்தி பண்ணவேண்டும். மற்ற நாட்களில் பண்ணிஞல் சுத்தமாகாது.

கொப்புளிக்காததனுல் சாஸ்திரீயசுத்தி இல்லே; வியாதிக்கும் காரணமாகிறது.

இவ்வளவும் ஸ்நானத்துக்குமுன் பண்ண வேண்டியவை.

சிவபூஜையைப் பத்து நிமிஷங்களுக்குள் பண்ணிக் கொள்ளலாம். மந்திரத்தையும் லகுவாக வைத்துக்

கொள்ளலாம். ஷோடசோபசாரத்திற்குப் பெயர் என்ற மாத்திரம் சொன்னால் போதும். எல்லோரும் பஞ்சாக்ஷர உபதேசம் செய்து கொள்ள வேண்டும 'ஆபோ ஹிஷ்டா' மந்திரம் சொல்லி அபிஷேகம் பண்ணுவது போதும். அக்ஷதையினால் அர்ச்சனை பண்ணினால் போதும். நைவேத்தியத்துக்குத் திராக்ஷைப் பழம் போதும். சிவ பூஜையில்லாமல் ஆஹாரம் பண்ணுவது விசேஷம் இல்லை. இப்படிப் பண்ணி வந்தால் செத்துப் போகிறபோது அவர் கைவிடமாட்டார்.

त्र्यंबकं यजामहे सुगन्धिं पुष्टिवर्धनम् ।
उर्वारुकमिव बन्धनान्मृत्योर्मुक्षीय मामृतात् ॥

[ஸ்ரீ ருத்திரம்]

त्रियायुषं जमदग्नेः । कश्यपस्य त्रियायुषम् । अगस्त्यस्य त्रियायुषम् । यद्देवानां त्रियायुषम् तन्मे अस्तु त्रियुषम् ।

[தைத்திரீய ஸம்ஹிதை]

விபூதி இட்டுக்கொள்ள மந்திரம் இருக்கிறது. உத்தூளனத்திற்கு மந்திரம் இருக்கிறது. நாம் ஸாதாரணமாக இட்டுக் கொள்ளுகிறோம். அதோடுகூட மந்திரம் சொல்லலாம். அதற்காக நாழிகை தனியாக ஆகிவிடாது. ஸ்நானம் மந்திர பூர்வமாகப் பண்ணினால் அது சாஸ்திரீயமாகிறது. போஜனம் பண்ணுவது மாத்திரம் மந்திர பூர்வமாகப் பண்ணுகிறோம். அதைப்போல் விபூதி இடதிரியம்பக மந்திரம் இருக்கிறது. ஸம்ஸார பந்தத்திலிருந்து நீங்க

வேண்டுமென்று இட்டுக்கொள்ள வேண்டும். பஸ்மாவை எடுக்கிறபோது ஒரு மந்திரம் இருக்கிறது. எல்லாம் பஸ்ம.

अग्निरिति भस्म, वायुरिति भस्म, जलमिति भस्म, स्थलमिति भस्म, व्योमेति भस्म, सर्वँहवा इदं भस्म मन इति ऐतानि चक्षूँषि भस्मानि ।

[ஜாபாலஉபநிஷத்]

என்று அதில் சொல்லியிருக்கிறது. மந்திரம் கொஞ்சந் தான். அதைச் சொல்லி தரித்துக் கொண்டால் ஆத்மாவுக்கு உபயோகமாகும். இல்லாவிட்டால் உடம்போடே போய்விடும்.

இவற்றையெல்லாம் ஆலோசித்துக் கூடியவரையில் ஸாத்தியமாகிறதை அதிகமாக வாடிக்கைக்குக் கொண்டு வரவேண்டும். நாம் வழக்கத்துக்குக் கொண்டு வந்தால் அடுத்த தலை முறையில் கொஞ்சமாவது இருக்கும். இல்லாவிட்டால் மறைந்து விடும்.

விவாஹ காலத்தில் எந்த அக்கினியைச் சாக்ஷியாக வைத்துக்கொண்டு விவாஹம் பண்ணுகிறோமோ அதை வரன் வீட்டில் வைத்துக்கொண்டு அதில் ஔபாஸனம் ஆரம்பித்துக்கொண்டு ஆயுள்பரியந்தம் அதை வைத்துக் காப்பாற்றிக்கொண்டு வரவேண்டும். பதினைந்து நாளுக்கு ஒரு தரம், மந்திர வீரியம் குறையாமல் இருப்பதற்காக ஸ்தாலீபாகம் பண்ண வேண்டும். வருஷத்தில் ஆறு கர்மாக்கள் ஔபாஸனாக்கினியிற் பண்ண வேண்டும். சித்திரை மாதத்தில் ஈசான பலி கொடுக்க வேண்டும். அது பரமேசுவரனை உத்தேசித்துச் செய்ய வேண்டியது. பாக்கிக் காலங்களில் தேவதைகளை உத்

தேசித்துப் பண்ண வேண்டும். அவர்கள் துவாரா பரமேசுவரனுக்குப் பிரீதி ஏற்படும். ஸப் கலெக்டர் துவாரா ராஜாவுக்கு வரிப் பணம் போகிறது போன்றது அது. சித்திரை மாதத்தில் நேரே அவருக்குக் கொடுக்கிறது. அதற்குச் சைத்ரீ என்று பெயர். ஆஸ்வயுஜீ என்பது ஆஸ்வயுஜ மாஸம் பண்ணுவது. அப்பொழுது குறுவை நெல் விளைந்து வரும் காலம். அதை ஔபாஸ னக்கினியில் முதலில் ஆஹுதி பண்ணி உபயோகப் படுத்த வேண்டும். ஆக்ரக்ஷாயணம் என்பது சம்பா நெல் வரும் காலத்தில்—அதாவது மார்கழி மாதத்தில் செய்ய வேண்டும். சிராவண மாதத்தில் ஸர்ப்பங்களை உத்தேசித்துப் புற்றுக்களிற் பலிபோடவேண்டும். மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களில் அஷ்டமிகளில் அஷ்டகா சிராத்தம் செய்யவேண்டும்.

இப்படிப் பண்ணவேண்டிய கர்மாக்கள் ஔபாஸ னக்கினியாகிய ஸ்மார்த்தாக்கினியில் பண்ணப்படவேண்டும். அக்கினி ஹோத்திரம் அப்புறம் செய்யவேண்டும். ஒரு பிள்ளை பிறந்தபின் மயிர் நரைப்பதற்குமுன் அக்கினி ஹோத்திரம் செய்யவேண்டும். பிள்ளை பிறக்காவிட்டால் அக்கினி ஹோத்திரம் இல்லை. அக்னியாதானம் என்று அக்கினி ஹோத்திர ஆரம்பத்தைச் சொல்லுவார்கள். ஹவிர்யஜ்ஞங்களில் அது ஒன்று. வஸந்தகாலத்தில் விவாஹம் செய்ய வேண்டும். அந்த விவாஹத்தினால் ஔபாஸனஸித்தி உண்டாகிறது. அக்கினி ஆதானத்தால் அக்கினி ஹோத்திரஸித்தி உண்டாகிறது. ஸ்தாலீ பாகத்தைப் போலப் பதினைந்து நாட்களுக்கு ஒருதரம் தர்ச பூர்ணமாஸ இஷ்டி செய்யவேண்டும்.

ஔபாஸன அக்கினி அணைந்தால் அக்கினி ஸந்தானம் செய்யவேண்டும். அக்கினிஹோத்திராக்கினியை

யும் புனராதானம் பண்ணலாம். அதற்காக வருஷத்திற் கொருமுறை பசுபந்தம் பண்ணவேண்டும். அதுவும் ஹவிர்யஜ்ஞத்தில் சேர்ந்தது. மார்கழி மாதம் திரேதாக் கினி. அவை ஆஹவனீயம், கார்ஹபத்யம், தக்ஷிணாக் கினி என்பவை. பிறகு சாதுர்மாஸ்யம் செய்யவேண்டும். ஸந்யாஸிக்குச் சாதுர்மாஸ்யம் என்று ஒன்றுண்டு. அது ஒரே இடத்திலிருந்து பண்ண வேண்டியது. கிருஹஸ் தனுக்கு அது ஒரு யாகம். அக்கினியாதானம், அக்கினி ஹோத்திரம், தரிசபூர்ண மாஸம், ஆக்ரஹாயணி, சாதுர் மாஸ்யம், பசுபந்தம், ஸௌத்ராமணி என்னும் ஏழும் ஹவிர்யஜ்ஞங்கள்.

சாதுர்மாஸ்யத்தையும் ஸௌத்ராமணியையும் அநே கந் தடவை பண்ணினாலும் பண்ணலாம்; ஒருதரம் பண்ணினாலும் பண்ணலாம். புனராதானமும் பலமுறை அல்லது ஒரே முறை பண்ணலாம். இந்த ஊரில் பச்சை யப்பன் காலேஜில் இருந்த ஒரு பண்டிதர் இவ்வளவை யும் பண்ணினார். அவர் ஊர் சுவேதாரண்யம். அவர் பெயர் நாராயணயஜ்வா என்பது. வேறு ஒரு பிராம் மணர் தபாலாபீஸில் இருக்கிறார். இவ்வளவையும் தாமே பண்ண வேண்டுமென்று மந்திரங்களை எல்லாம் தெரிந்து கொண்டு ஸாமான்களெல்லாம் சேகரித்துக் கொண்டிருக் கிறார். ரிடையர் ஆனபின்பு பண்ணலாமென்று உத்தே சித்துக் கொண்டிருக்கிறார். ராஜமஹேந்திரியில் வேங்க டேச ஐயர் என்று ஒரு இங்கிலீஷ் புரொபெஸர் இருக் கிறார். அவர் ஸோமயாக மந்திரம் வரையில் மனனம் பண்ணியிருக்கிறார். அவைகளை யெல்லாம் செய்வதற்குக் காலம் பார்த்துக்கொண்டிருக்கிறார். சிதம்பரத்தில் சில பேர் ஸோமயாகம் செய்கிறார்கள். ஒரு வக்கீல்

அக்கினி ஹோத்திரம் முதலியவை பண்ணிக்கொண்டிருக்கிறார். இவைகளெல்லாம் பண்ணுவது ஒரு பிரமாதமல்ல என்ற தைரியம் வருவதற்காக திருஷ்டாந்தத்திற்கு இவைகளைச் சொன்னேன். பெரிய பட்டணத்தில் பத்துப் பேர் இவைகளைச் செய்கிறார்களென்றால் மற்றவர்களெல்லாம் அநுசாரத்தைக் குறைத்துக் கொண்டு ஸந்தியாவந்தனமாவது செய்வார்கள். இவர்களைப்போல வரக்காணோமே என்ற ஞாபகம் உண்டாகும்.

யஜ்ஞங்கள் மூன்று தினுஸு. யஜ்ஞம் என்பது யாகம். வேதத்தில் யஜ்ஞாதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குப் பிரயோகங்கள் கல்பஸூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. வேதத்தில் ஏறக்குறைய 400 வகை யாகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு பிராம்மணனும் செய்ய வேண்டிய யஜ்ஞங்கள் 21. அவைகளில் பாகயஜ்ஞங்கள் ஏழு போக பாக்கி உள்ளவை 14. யாகங்களைப் பற்றிய விஷயங்கள் வேதங்களில் நிறையச் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்ன கர்மாவுக்கு இன்ன அங்கம், இன்ன கிரமம் என்பவைகளெல்லாம் சொல்லப்பட்டுள்ளன. இவை இவை அங்க உபதேசம். அடிமுதல் நுனிவரை இந்தப்படி பண்ணுவதற்குப் பிரகிருதியாகம் என்று பெயர். ஸ்தாலீபாகம் அந்த வகையைச் சேர்ந்தது. சிலவற்றை யெல்லாம் முன் சொன்னபடி என்று சொல்லி விவரிக்கப்பட்டிருக்கிறது. அவை விகிருதி யாகங்கள். ஸ்தாலீபாகம் பிரகிருதி; மற்ற பாகயஜ்ஞங்களும் விகிருதிகள். ஹவிர்யஜ்ஞங்களில் தர்ச பூர்ணமாஸ இஷ்டி பிரகிருதி. மற்றவை யெல்லாம் அதனுடைய விகிருதி.

ஸோமயாகங்கள் ஏழு. அக்னிஷ்டோமம் முதல் யாகம். அதைச் செய்தவர்கள் ஸோமயாஜிகள். கடைசியில் இருப்பது வாஜபேயம். அதைச் செய்தவர்கள் வாஜபேயர்கள். வடதேசத்தில் பாஜபே என்று அவர்களைச் சொல்லுவார்கள். வாஜபேயம் பண்ணினவர்களுக்கு அவபிருத ஸ்நான காலத்தில் அரசர்கள் சுவேதச் சத்திரம் பிடிக்க வேண்டும். திருவாங்கூர், மைசூர், இந்த ராஜ்யங்களில் அவர்களுக்கு சுவேதச்சத்திரம் கொடுக்கிறார்கள். ஸோமயாகம பண்ணும்பொழுது ஸோமலதைச்சாற்றைப் பிழிந்து ஸோமபானம் செய்வார்கள். ஸோமலதையும் கிருஷ்ணாஜினமும் இப்பொழுது மலையாளத்தில் தான் கிடைக்கின்றன. மற்ற இடங்களில் இல்லை. நம்பூதிரிகளுள் பத்துக் குடும்பத்தில் ஒருவராவது ஸோமயாகம் பண்ணுகிறார். பிராம்மணனுக்கு இருக்கிற ஸொத்து ஸோமயாகம் செய்வதற்காக ஏற்பட்டது. அவர்களில் மூத்தவன்தான் ஸோமயாகம் செய்யலாம். அவனுக்குத்தான் ஸொத்து உரிமை ஏற்பட்டிருக்கிறது.

ஸோமயாகம் யார் பண்ணினாலும் கொல்லங்கோடு ராஜா ஸோமலதையும் கிருஷ்ணாஜினமும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஸோமலதை ஹிமாலயத்தில் இருக்கிறதென்று ஆயுர்வேதம் சொல்லுகிறது. அக்னிஷ்டோமத்திற்கே ஸோமயாகமென்று ஒரு பெயர் உண்டு. அதுதான் எல்லாவற்றிற்கும் பிரகிருதி.

ஜோதிஷ்டோமம் ஜன்மாவில் ஒரு தடவை பண்ண வேண்டும். தௌர்பிராம்மண்யம் மூன்று தலைமுறைகள் வேதாத்தியயனத்தையும் யஜ்ஞத்தையும் விட்டவர்

களுக்கு ஏற்படும். திரும்பி ஆரம்பித்தால் பிராயச்சித்தத்திற்காக அதிகமாக ஒரு பசு உண்டு.

இந்த யஜ்ஞம் எதற்கு உபயோகம்? உபநிஷத்,

तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति यज्ञेन दानेन तपसानाशकेन ।

[பிருஹதாரண்யம்]

என்று சொல்லுகிறது.

பரமாத்மாவை அறியப் பிரயத்தனப்படுகிறவர்கள், யஜ்ஞம், உபவாஸம் முதலியவைகளெல்லாவற்றையும் பரமேசுவரப் பிரீதியாகப் பண்ண வேண்டும். மோக்ஷம் பெறுவதற்கு மனது பரிசுத்தமாக வேண்டும். பூர்வஜன்மத்தில் யாகங்கள் பண்ணினவன் இந்த ஜன்மத்தில் விவேகத்தைப் பெறுகிறான். யஜ்ஞம், தானம் தபஸ், இவைகளைச் செய்வதனால் சித்தசுத்தி உண்டாகிறது என்று நம்முடைய ஸ்ரீ ஆசார்யர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

யஜ்ஞம் பண்ணுவது, பாபமா? புண்ணியமா? மிச்ரமா? மத்வாச்சாரியார் யாகம் பசுவைக்கொன்று பண்ணக்கூடாது; மாவால் வபையைப் போலப் பண்ணி ஆஹுதி பண்ணவேண்டும் என்று கருணையால் ஏற்பாடு பண்ணினார்.

வியாஸர் பிரம்மஸூத்திரம் செய்தார். அதில் ஆத்ம ஸ்வரூபத்தைப்பற்றி உபநிஷத் சொல்வதன் தாத்பரியத்தைச் சொல்லியிருக்கிறார்.

யஜ்ஞப்பிரயோகம் பூர்வமீமாம்ஸையில் இருக்கிறது. அதனுடைய பிரயோஜனம் உத்தரமீமாம்ஸையில் இருக்கிறது.

अशुद्धमिति चेन्न शब्दात् । [பிரம்ம ஸூத்திரம்]

ஆத்மஜ்ஞான அங்கம் யஜ்ஞம். இது அசுத்தமான கர்மாவாக எப்படி ஆகும். அசுத்தம் என்று நாம் தீர்மானம் பண்ணுவதும், நல்லது கெடுதல் என்று தீர்மானம் பண்ணுவதும் எதனாலே? சாஸ்திரங்களைக் கொண்டு நாம் செய்கிறோம். வேதந்தான் பெரிய பிரமாணம். அந்த வேத சப்தமிருப்பதனால் பாபம் இல்லை. சுத்தம் அசுத்தம் இவைகள் சப்தப்பிரமாணத்தால் அறியப்படுகின்றன. கள் குடிக்காதே என்று வேதம் சொன்னால் அது அசுத்தம் என்று தெரிகிறது. வேத அபிப்பிராயம் யஜ்ஞம் அசுத்தம் என்பதாக இருந்தால் வியாஸர் அதை அங்கமாகச் சொல்ல மாட்டார். மாவாசார்யர் சொல்லுகிறபடி மாவினால் பசு பண்ணினாலும் அதில் பிராணப்பிரதிஷ்டை பண்ணுகிறோம். அப்பொழுது அதற்கும் தோஷம் உண்டாகிறது.

திருக்குறளில் யாகம் நிந்திக்கப்படுகிறதென்று சொல்லுவதுண்டு. பழைய காலத்துப் புஸ்தகம் எழுதினவர்கள் எல்லோரும் வைதிகாநுஷ்டானங்களில் நம்பிக்கை உடையவர்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம். லோகோபயோகமாக ஒரு கிரந்தம் எழுதினார் திருவள்ளுவர். அவர் நாஸ்திகரல்லர்.

" அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று "

என்று திருக்குறளில் ஒரு செய்யுள் இருக்கிறது.

ஹவிஸை அக்கினியில் ஆஹுதிபண்ணி ஆயிரம் யஜ்ஞம் பண்ணுவதைக் காட்டிலும் ஒரு பிராணியை வதைத்து உண்ணுமல் இருக்கிறது நல்லதென்பது இதன் அர்த்தம்.

தர்மத்துக்காகச் செய்யவேண்டியது எப்படியிருந்தாலும் பண்ணவேண்டும். ஹிம்ஸையென்று பார்க்கக் கூடாது. ஆயிரம் யஜ்ஞத்தைக் காட்டிலும் ஒரு பிராணியை ஹிம்ஸை பண்ணுமல் இருப்பது நல்லது என்று திருக்குறள் சொல்லுகிறது. இதனுல் யாகத்தைத் திருவள்ளுவர் நிந்தித்திருக்கிருர் என்று சொல்லுகிருர்கள். ஆயிரம் யஜ்ஞத்தைவிட ஓர் அஸ்வமேத யாகம் செய்வது உயர்ந்தது என்று மனு ஓரிடத்தில் சொல்லியிருக்கிருர். ஆயிரம் அஸ்வமேதத்தைவிட ஒரு ஸத்யம் உயர்ந்தது என்றும் சொல்லுகிருர். யஜ்ஞம் பாபமாக இருந்தால் ஆயிரம் பாபத்தைக்காட்டிலும் ஒரு புண்ணியம் உத்கிருஷ்டமானது என்று சொல்லுவார்களா? 100 ஏகாதசியிலும் ஒரு சிவராத்ரி உத்கிருஷ்டமானது என்று சொல்லலாம். 100 கசாப்புக்கடைகள் வைப்பதைக்காட்டிலும் ஒரு சிவராத்ரி உபவாஸம் உத்கிருஷ்டம் என்று சொல்லுவார்களா? புண்ணியகர்மாக்களுள் இதை விட இது உத்கிருஷ்டமானது என்றுதான் சொல்லுவார்கள். சாந்தோக்யோபநிஷத்தின் முடிவில்,

अहिंसन् सर्वभूतान्यन्यत्र तीर्थेभ्यः ।

[சாந்தோக்யோபநிஷத்]

என்று சொல்லியிருக்கிறது.

வேதத்தில் சொல்லப்பட்ட கர்மாக்களைத் தவிர மற்ற இடங்களில் அஹிம்ஸையை அநுஷ்டிக்க

வேண்டும். யஜ்ஞம், யுத்தம் முதலிய இடங்களில் ஹிம்ஸை என்று நினைக்கக்கூடாது. யஜ்ஞத்தைவிட அஹிம்ஸை சிரேஷ்டமென்றால் யஜ்ஞமும் சிரேஷ்டந் தான்; அதைவிட அஹிம்ஸை சிரேஷ்டம் என்றுதான் அர்த்தமாகும். 100 சாக்கடைகளைவிட ஒரு கங்கை சிறந்தது என்று சொல்லுவது இல்லை. ஆயிரம் காவேரியை விட ஒரு கங்கை சிறந்தது என்றுதான்சொல்லுவார்கள். அதைப்போல ஆயிரம் யஜ்ஞங்கள் மிகவும் உயர்வானவை; அவைகளிலும் ஓர் அஹிம்ஸை உயர்வானது என்ற அர்த்தத்தில்தான் அந்தக் குறள் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் இந்தக் குறள் துறவற வியலில் சொல்லப்பட்டிருக்கிறது. கிருஹஸ்தன் ஆயிரம் யஜ்ஞங்களைச் செய்வதைக் காட்டிலும் ஸந்யாஸி ஒரு பிராணிக்கு ஹிம்ஸை செய்யாமலிருப்பது நல்லது என்ற அபிப்பிராயத்தில் இந்தக் குறளைச் சொல்லியிருக்கிறார்.

தேவாரத்திலும் திவ்வியப் பிரபந்தங்களிலும் பிராம்மணர்களைப்பற்றிச் சொல்லுமிடங்களிலெல்லாம், வேதத்திலும் வேள்வியிலும் வல்லவர்களாகவே சொல்லப்படுகிறார்கள்.

"கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே

செற்றார் வாழ்தில்லை"

என்று தேவாரம் சொல்லுகிறது.

"பரப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்பும்"

என்பது மற்றொரு தேவாரம்.

பரப்பு என்பது சயனம். ஓமாம்புலியூர்த் தேவாரத்தில் யஜ்ஞங்களைப் பற்றி நிறையச் சொல்லப்பட்டிருக்கிறது.

நம்முடைய புத்தியைக்கொண்டு இது நல்லது, இது கெட்டது என்று தீர்மானம் பண்ணுவதைவிடச் சாஸ்திரம் சொல்லுவது எதுவோ அதுதான் பிரமாணம் என்று இருக்க வேண்டும். அந்த எண்ணந்தான் பழைய காலத்தில் எல்லோருக்கும் இருந்தது. வேதத்திலும் தர்ம சாஸ்திரத்திலும் சொல்லப்பட்ட அநுஷ்டானங்களை அப்படியே நம்பினார்கள்.

ஆதானம், அக்கினிஹோத்திரம், தர்ச பூர்ணமாஸம் இவைகளுக்குப் பசு கிடையாது. பசு பந்தத்துக்கு முதலில் மட்டும் உண்டு. ஸோமஸம்ஸ்காரத்துக்கு மட்டும் பசு உண்டு.

இந்த மாதிரியாக யஜ்ஞங்களைச் செய்து வரவேண்டியது பிராம்மணன் கடமை. இவைகள் ஸம்ஸ்காரங்களைச் சேர்ந்தவை. இவற்றை யன்றி ஆத்ம குணங்கள் எட்டு இருக்கின்றன. அவை தயை, பொறுமை, அஸூயையின்மை, சௌசம், பிடிவாதமின்மை, ஆனந்தமாக இருத்தல், லோபமின்மை, பேராசையின்மை என்பவை.

தர்மஸூத்திரங்களில் இந்த நாற்பது ஸம்ஸ்காரங்களும் எட்டு ஆத்ம குணங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

---

# 6. ஸந்தியாவந்தனம்

[23—11—1932]

தனுர்வேதத்தில் அஸ்திரம் சஸ்திரம் என்று இரண்டுவகை ஆயுதங்கள் செல்லப்பட்டிருக்கின்றன வென்றும், அஸ்திரம் மந்திரபூர்வமாக ஒரு பதார்த்தத்தை விட்டால் எதன்மேல் விடுகிறோமோ, அது நாசமடையும் என்றும் அன்றொரு நாள் சொன்னேன். நாம் பிரதிதினமும் பண்ண வேண்டிய அஸ்திரப் பிரயோகம் ஒன்று இருக்கிறது. அஸுரர்களை நாசம் பண்ணுவதற்காகப் பிராம்மணர்கள் தினந்தோறும் ஓர் அஸ்திரப்பிரயோகம் பண்ணவேண்டும். அஸ்திரம் என்றால் ஒன்றை விட்டு எறிகிறதல்லவா? அந்த அஸ்திரம் எது? எதை விட்டெறிகிறது? நம்முடைய புத்தியை ஆசிரயித்திருக்கிற அஸுரர்கள் தொலைய வேண்டுமென்று ஜலத்தை எறிகிறது. 'பாபம், பொய் முதலியவை தொலைய வேண்டும். ஞானஸூரியன் பிரகாசிக்க வேண்டும். அது பிரகாசிக்காமல் பண்ணிக் கொண்டு உள்ளே இருக்கிற பிரதிபந்தகங்கள் நிவர்த்தியாக வேண்டும்' என்று அந்த அஸ்திர பிரயோகம் பண்ணவேண்டும். ஒவ்வொருநாளும் மூன்று வேளை பண்ணவேண்டும். எந்தக் காரியம் பண்ணினாலும் பண்ணவிட்டாலும் மூச்சைப் பிடித்துக் கொண்டுக் அதைப் பண்ணவேண்டும். அதுதான் ஸந்தியா வந்தனத்தில் அர்க்கியம் கொடுப்பது.

ஒரு காரியத்தை 'சிரத்தையாக' ஒருவன் பண்ணினால் மூச்சைப் பிடித்துக் கொண்டு பண்ணுகிறான்' என்று சொல்லுகிறோம். இந்தக் காரியத்தையும் மூச்சைப்

பிடித்துக்கொண்டு பண்ண வேண்டும். தினந்தோறும் இதைப் பண்ணி வந்தால் அந்தச் சத்துருக்கள் நாசமாய்ப்போய் விடுவார்கள். இது பண்ணுவதற்கு முதலில் மூச்சைப் பிடித்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது, நாம் மூச்சைத் தான் பிடிக்கிறோம். 'நாசிகாம் ஆயம்ய' என்று சொல்லுவதில்லை. 'ப்ராணன் ஆயம்ய' என்றுதான் சொல்லியிருக்கிறது.

எந்தக் காரியம் பண்ணினாலும் மனது ஒருமைப்பட வேண்டும். ஜலத்தைக்கொண்டு அஸ்திரப்பிரயோகம் செய்வதற்கு மனது ஒருமைப்படவேண்டும். அதற்காகத் தான் மூச்சைப் பிடிக்க வேண்டும். மூச்சைப் பிடித்தால் மனது எப்படி நிற்கும்? மனது நிற்கிறபொழுது மூச்சு நிற்கிறதல்லவா? பெரிய ஆச்சரியம் உண்டாகிறது. பெரிய துன்பம் வருகிறது, பெரிய சந்தோஷம் ஏற்படுகிறது; அப்பொழுது மனது லயித்துப் போய் ஏகாந்தமாக நிற்கிறது. ஹா! என்று கொஞ்ச நேரம் நின்று போய்விடுகிறது. அப்புறம் வேகமாக ஓடுகிறது. நாமாக அதை நிறுத்தவில்லை. இது தானாக நிற்கிறது. மனது அதிலே ஈடுபட்டு நின்றுவிடுகிறது. பின்பு பெருமூச்சு விடுகிறோம். எதற்காக? முன்பு விடாத மூச்சையும் சேர்த்து விடுகிறோம். மனது ஒருமைப்படுகிறபோது மூச்சு நிற்கிறது. மூச்சு நின்றால் மனது ஒருமைப்படும்.

நாம் அர்க்கியம்விடும்போது சித்தைகாக்கிரியத்தோடு விடவேண்டும். பிராணாயாமம் பண்ணினால் சித்தைகாக்கிரியம் உண்டாகும். அதை நிறையப் பண்ணுவது யோகத்திற்கு; அது கஷ்டமானது; உபதேசத்தின்படி செய்ய வேண்டியது. நாம் அதிகமாகப் பண்ணினால் பத்துத் தடவைதான் பண்ணுகிறோம்

மூன்று பண்ணு என்று சிலவற்றிற்கு நியமம் ஏற்பட்டிருக்கிறது. சிறுவயதில் உபநயனமான காலம் முதற் கொண்டு கிரமமாக நாம் பிராணுயாமம் பண்ணிக் கொண்டு வந்திருந்தால், இத்தனை நாளில் யோகீசுவராக இருப்போம். பண்ணுகிறதைச் சரியாகப் பண்ணவேண்டுமல்லவா? அரை நிமிஷம் பிராணன் நிற்கப் பண்ண வேண்டும். அதிகமாக வேண்டாம். சரீரத்துக்குத் தகுந்தாற்போல் செய்யலாம். பிராணண் நின்ருல் மனது நிற்கும். அது நின்ருல் நாம் விடுகிற ஜலம் அஸ்திரமாகும்.

ஸந்தி பண்ணி ஆரம்ப முதல் கடைசி வரையில் பரமேசுவரார்ப்பணம பண்ண வேண்டும். அர்க்கியமாகிய அஸ்திரப் பிரயோகத்தைப் பண்ணவேண்டும். பின்பு காயத்ரீ பண்ண வேண்டும். பிராணுயாமத்தைக் கூடிய வரையிற் பண்ண வேண்டும்; கொஞ்சம் நிறுத்துகிறது, பின்பு விடுகிறது என்ற அளவில் இருந்தாலே போதும். அதிகம் வேண்டாம். ஸங்கல்பம், மார்ஜனம், பிராசனம், அர்க்கியப்பிரதானம், ஜபம் ஸ்தோத்திரம், அபிவாதனம் இவ்வளவும் பரமேசுவரனுடைய அநுக்கிரஹம் பெறுவதற்காகப் பண்ணுகிறேனென்று சொல்லிச் செய்ய வேண்டும். ஸங்கல்பம் என்பது அதுதான். அப்புறம் மார்ஜனமந்திரம் சொல்லித் தீர்த்தத்தைப் புரோக்ஷணம் பண்ணிக் கொள்ள வேண்டும். இவ்வளவுக்கும் பிராணுயாமம் முக்கிய அங்கம். திரிகாலங்களிலும் ஸ்வல்பம் பண்ண வேண்டும். அதிகமாகப் பண்ணிஞல்தான் உபத்திரவம் உண்டாகும். அதற்குக் குரு வேண்டும். தினந்தோறும் பண்ண வேண்டியதால் ரோகிஷ்

டன் கூடப் பண்ணவேண்டி யிருப்பதால் உபத்திரவம் இராது.

ऋषयो दीर्घसन्ध्यत्वाद्दीर्घमायुरवाप्नुयुः ।
प्रज्ञां यशश्च कीर्तिं च ब्रह्मवर्चसमेव च ॥

[மனுஸ்மிருதி, 4-94.]

மனோவாக்காயங்களால் பாபம் பண்ணி யிருக்கிறோம். அந்த மூன்றினாலும் செய்யும் கர்மாக்களால் அந்தப் பாபத்தைப் போக்கிக் கொள்ளவேண்டுமென்று முன்பு சொல்லியிருக்கிறேன். ஸந்தியாவந்தனத்தில், வாக்கினால் மந்திரம் சொல்லுகிறோம்; காயத்ரீ ஜபத்தை மனதினால் தியானித்துப் பண்ணுகிறோம்; மார்ஜனம் முதலியவைகளால் காயசுத்தி உண்டாகிறது, இவைகளைத்தவிர கர்மயோக பக்தியோக ஞானயோக ரூபமாகவும் ஸந்தியா வந்தனம் இருக்கிறது. ஸந்தியாவந்தனம் பண்ண அவரவர்கள் தங்கள் தங்களுக்கென்று ஒவ்வொரு பாத்திரம் வைத்துக்கொள்ள வேண்டும். அதிலே ஸந்தியாவந்தனம் பண்ணவேண்டும். பிராணாயாமம் அவசியம் பண்ணவேண்டும். ஈசுவரார்ப்பணமாக எல்லாவற்றையும் பண்ணவேண்டும். ஸந்தியாவந்தனத்தை அவஸரமாகப் பண்ணக்கூடாது.

ஸரியான காலத்தில் உசிதமாக ஸந்தியாநுஷ்டானம் பண்ணினதால்தான் பலர் ரிஷிகள் ஆனார்கள். அபிவாதனத்தில் எந்த மஹரிஷியினுடைய ஸந்ததியில் பிறந்திருக்கிறோமோ அந்த மகரிஷி கோத்திரத்தைச் சொல்லி அன்று முதல் காயத்திரீ ஜபிக்கப்பட்டு வருகிறது. அந்த கோத்திரத்தில் பிறந்ததற்காவது கர்மாநுஷ்டானங்களைச் செய்யவேண்டியது நமதுகடமை.

அந்த முதல் ரிஷிக்கு அப்புறம் எவ்வளவோ பேர் ரிஷிகளாக இருந்திருக்கிறார்கள். திரயார்ஷேயம், பஞ்சார்ஷேயம், ஸப்தார்ஷேயம், ஏகார்ஷேயம் என்று சொல்லுகிறார்கள். அந்த அந்த கோத்திரத்தில் அவ்வளவு ரிஷிகள் இருந்திருக்கிறார்கள் என்று அதனால் தெரிய வருகிறது. ஸ்ரீவத்ஸகோத்ரம் பஞ்சார்ஷேயம்.

தொடர்ச்சியாக வந்த தாரையை நாம் அறுத்து விடக்கூடாது. பிராணாயாமத்தோடு சித்தைகாக்கிரியத்தோடு மந்திர லோபமில்லாமல் பரமேசுவரார்ப்பணம் பண்ணி எல்லாவற்றையும் பண்ணவேண்டும். பக்தி சிரத்தையோடு பண்ணவேண்டும். மர்மகலாபத்தோடு பண்ணவேண்டும். அர்த்தத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

# 7. காயத்ரீ

[24—11—1932]

காயத்ரீ என்னும் வார்த்தைக்கு எவர்கள் தன்னைக் கானம் பண்ணுகிறார்களோ அவர்களை ரக்ஷிப்பது என்பது அர்த்தம்.

गायन्तं त्रायते यस्माद्गायत्रीत्यभिधीयते ।

கானம் பண்ணுவதென்பது பிரேமையுடனும் பக்தியுடனும் உச்சரிப்பதாகும். யார் தன்னைப் பயபக்தியுடனும் பிரேமையுடனும் உச்சாரணம் செய்கிறார்களோ அவர்களைக் காயத்ரீ மந்திரம் ரக்ஷிக்கும். அதனால் அந்தப் பெயர் அதற்கு வந்தது. வேதத்தில் காயத்ரீயைப்பற்றிச் சொல்லும் பொழுது

गायत्रीं छन्दसां माता ।

என்று இருக்கிறது. சந்தஸ் என்பது வேதம். வேத மந்திரங்களுக்கெல்லாம் தாயார் ஸ்தானம் காயத்ரீ என்று வேதம் சொல்லுகிறது. சாஸ்திரப் பிரகாரம் செய்ய வேண்டிய கார்யங்களுக்கெல்லாம் முக்கியமான காரியம் இது என்று சொல்லும்பொழுது வேதம், மந்திரசக்தி குறையாமல் தேஹத்தைச் சுத்தியாக வைத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறது.

देहो देवालयः प्रोक्तो जीवप्रोक्तः सनातनः ।

தேஹம் ஒரு தேவாலயம். ஜீவன் ஈசுவரஸ்வரூபம். ஆலயத்தில் அசுத்தியோடு போகக்கூடாது. அங்கே அசுத்தமான பதார்த்தங்களைக் கொண்டுபோகக்கூடாது.

மாம்ஸம், சுருட்டு முதலியவைகளைக் கொண்டுபோனால் அசுத்தம் உண்டாகும். ஆகம சாஸ்திரங்களில் தீட்டோடும் தேஹ அசுத்தத்தோடும் போகக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியே தேஹம் ஒரு தேவாலயமானால் அதிலும் அசுத்தமான பதார்த்தங்களைச் சேர்க்கக்கூடாது. மந்திர சக்தி இருக்கிற தேஹத்தில் அசுத்தியானவைகளைச் சேர்த்தால் அது கெட்டுப்போய்விடும். வீட்டுக்கும் தேவாலயத்திற்கும் வித்தியாஸம் இருக்கிறது. வீட்டிலும் அசுத்தம் பண்ணக்கூடாது; ஆனாலும் தேவாலயத்தைப்போல அவ்வளவு கடுமையாக அசுத்தம் வராமல் வைத்துக்கொள்ள வேண்டியதில்லை. தேஹங்களுக்குள் சில தேஹங்கள் தேவாலயத்தைப் போல இருக்கின்றன. பிராம்மண தேஹங்கள் வேதமந்திர சக்தியை ரக்ஷிக்க வேண்டியவைகளாதலால் அதிகமான பரிசுத்தமாக இருக்கவேண்டும். அந்தத் தேஹம் மற்றத் தேஹங்களை விட அதிகமான பரிசுத்தியோடு இருக்கவேண்டும். அசுத்தியான பதார்த்தங்களை உள்ளே சேர்க்கக்கூடாது. மந்திர சக்தியை ரக்ஷித்து அதனால் லோகத்துக்கு நன்மையை உண்டாக்கவேண்டுவது பிராம்மணன கடமை. அவனுடைய தேஹம் தேவாலயத்தைப்போல் சுத்தமாக வைத்துக்கொள்ளப்பட வேண்டும். அதனால் தான் அவனுக்கு அதிகமான நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அது பண்ணுகிறார்கள்; நாமும் ஏன் பண்ணக்கூடாது? என்று அசுத்தியைத் தரும்காரியங்களை பிராம்மணன் பண்ணக்கூடாது. அவர்களெல்லாம் சரீரத்தை வைத்துக்கொண்டு ஸந்தோஷமான அநுபவங்களை அடைகிறார்களே யென்று நாமும்

நமக்குத் தகாதவற்றைச் செய்யக்கூடாது. பிராம்மணனுக்குத் தேஹம் ஸந்தோஷத்தை அநுபவிப்பதற்காக ஏற்பட்டதல்ல. வேதத்தை ரக்ஷிக்கிற தேஹம் அது. அதற்காகத்தான் செலவுபண்ணி உபநயனம் முதலியவைகளைச் செய்துகொள்ளுகிறோம். வேத மந்திரங்களை ரக்ஷிப்பதற்காக அதை வைத்துக்கொள்ள வேண்டும். தேஹத்தைத் தேவாலயமாக வைத்து அதற்குள் ஆசாரத்தை வைத்துக் கொள்ளுவதனால் எல்லோருக்கும் ஸௌக்கியம் உண்டாகும். 'எல்லோரும் தொழில் பண்ணுகிறார்களே! பணம் ஸம்பாதிக்கிறார்களே! ஏன் நாம் செய்யக்கூடாது' என்று பிராம்மணன் நினைக்கக்கூடாது. நம்முடைய தொழிலை நன்றாகச் செய்துவிட்டு அதனோடுகூடக் கொஞ்சம் பிரயத்தனப் படவேண்டியதுதான். நிரம்ப பணத்தை ஸம்பாதிக்க வேண்டுமென்று அநாசார வழிகளில் பிரவேசிக்கக் கூடாது. பிராம்மணர்களுக்குத் தாரித்திரியம் வேண்டியதுதான். கண்ட தேசங்களுக்குச் சென்று ஆசார அநுஷ்டானங்களை விட்டுவிட்டு ஸம்பாதிக்கிற ஐசுவரியம் நமக்கு வேண்டாம். அப்படி ஸம்பாதிக்காவிட்டால் ஒன்றும் முடியாது என்பது இல்லை. நம்முடைய மந்திர சக்தியைக் காப்பாற்றிக்கொண்டு நம்முடைய தர்மத்தை அநுஷ்டிப்பது முதல் கடமை. பணம் ஸம்பாதிப்பது இரண்டாவது (Secondary) தான்.

மந்திர சக்தி என்ற அக்கினியை நாம் காப்பாற்றிக் கொண்டு வந்தால் அது எல்லோருக்கும் க்ஷேமத்தை உண்டாக்கும். எல்லோருக்கும் கஷ்டம் வந்தால் நிவர்த்திக்கும் சக்தி இருக்கவேண்டும். யாராவது கஷ்ட காலத்தில் வந்து பிரார்த்தித்தால், "நீ பண்ணுவதைத்

தான் நானும் பண்ணுகிறேன். உனக்கு இருக்கிற சக்தி தான் எனக்கும் இருக்கிறது.'' என்று சொன்னால் அவன் பிரார்த்தித்ததற்குப் பிரயோஜனம் இல்லை. மந்திரசக்தியாகிய அக்கினி இப்பொழுது அணைந்திருக்கிறது. தேஹம் விகாரம் ஆய்விட்டது. அசுத்தமான பதார்த்தங்கள் சேர்க்கப்படுகின்றன. ஆனால் ஒரு பொறிமட்டும் அணையாமல் இருக்கிறது. அதை விருத்தி பண்ண வேண்டும். அப்படிச் செய்தால் எப்பொழுதாவது பற்றிக் கொள்ளும். அந்த நெருப்புப் பொறிதான் காயத்ரீ. அது பரம்பரையாக வந்திருக்கிறது. மூன்று தலைமுறையாக காயத்ரீயை விட்டுவிட்டால் அவன் பிராம்மணனாக மாட்டான். அப்பேர்ப்பட்டவர்கள் இருக்கிற தெரு அக்கிரஹாரம் ஆகாது. அது குடியானவர் தெருவுதான். ஆனால் இன்னும் மூன்று தலைமுறை ஆகவில்லை. ஆகையால் இன்னும் பிராம்மணர்கள் என்று நான் நினைக்கிறேன். மூன்று தலைமுறை யஜ்ஞம் இல்லாவிட்டால் அவன் துர்ப்பிராம்மணன். மறுபடியும் பிராம்மணனாவதற்கு பிராயச்சித்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் காயத்ரீயை மூன்று தலைமுறையாக விட்டுவிட்டால் பிராமணத்துவம் போய்விடுகிறது. அவன் மறுபடியும் பிராம்மணனாகமாட்டான். அவன் பிரம்ம பந்துதான். அப்படியே க்ஷத்திரியன் காயத்ரீயைவிட்டால் க்ஷத்திரிய பந்துவாகிறான். வைசியன் வைசிய பந்துவாகிறான். ஆகையால் அந்த நெருப்புப்பொறியை ஊதிப் பெரியது பண்ணவேண்டும். நெருப்புப்பொறி எதற்கும் உபயோகப்படாது. ஆனால் உபயோகப்படுவதற்கு ஆதாரம் இருக்கிறது. ஆகையினால் ஞாயிற்றுக்கிழமையாவது ஆயிரம் காயத்ரி பண்ணவேண்டும். கண்ட

இடத்தில் கண்ட ஆஹாரத்தை உண்ணலாகாது. இதுவரைக்கும் அநாசாரம் செய்ததற்குப் பிராயச் சித்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். இனியாவது கண்ட ஆஹாரத்தை உண்ணுமல் மந்திர சக்தி இருப்பதற்குத் தேஹத்தைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும. ஒவ்வொரு காலத் திலும் பத்து காயத்ரிகளையாவது பண்ணவேண்டும். மூன்று காலமும் சாந்தம் உண்டாகிற காலம். காலையில் பக்ஷி முதலிய பிராணிகளும் மனிதர்களும் எழுந்திருக்கும் காலம். அப்பொழுது மனது சாந்தியாக இருக்கும். ஸாயங்காலம் எல்லோரும் வேலையை முடித்து ஓய்ந்திருக் கும் காலம். அதுவும் சாந்தமான காலம். மத்தியான்ன காலத்தில் ஸூரியன் உச்சியில் இருக்கிறுன். அப் பொழுது எல்லோரும் அயர்ந்திருக்கும் காலம். அப் பொழுதும் மனதுக்கு சாந்தமான காலம். இந்த மூன்று காலங்களிலும் காயத்ரீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதி என்று மூன்று பிரகாரமாகத் தியானம் செய்யவேண்டும். காலை விஷ்ணு பிரதானமானது. மத்யான்னம் பிரம்மப் பிர தானமானது. ஸாயங்காலம் சிவப்பிரதானமானது. ஆகையால் காலையில் விஷ்ணு ரூபிணீயர்கவும் மத்யான் னம் பிரம்மரூபிணீயாகவும் ஸாயங்காலம் சிவ ரூபிணீ யாகவும் தியானம் செய்யவேண்டும். இந்த மூன்றும் சேர்ந்தால் ஸமஷ்டி காயத்ரீ என்பார்கள். தனித்தனி யாக வியஷ்டி காயத்ரீயும் உண்டு.

காயத்ரீயில் ஸகல வேத மந்திர சக்தியும் அடங்கி யிருக்கிறது. எல்லா மந்திரங்களுக்கும் சக்தியைக் கொடுப்பது அதுதான். அதை ஜபிக்கா விட்டால் வேறு மந்திரஜபத்திற்குச் சக்தி இல்லை. ஹிப்னாடிஸம்

என்பதனல் பல காரியங்களைச் செய்கிறார்கள். மோக்ஷத்துக்குப்போக உதவும் ஹிப்நாடிஸம் காயத்ரீ மந்திரம். ஆசையை யடக்கி ஜன்மம் எடுத்ததின் பலனை அடையச் செய்கிற ஹிப்நாடிஸம் காயத்ரீ. அது இப்பொழுது நெருப்புப் பொறி மாதிரி இருக்கிறது. லோக காரியங்களைக் குறைத்துக்கொண்டு அதை அதிகமாகச் செய்யவேண்டும் என்ற விரதத்தை வைத்துக்கொண்டு சரீரத்தைப் பரிசுத்தமாக ரக்ஷித்து வரவேண்டும். அப்பொழுதான் அந்தப் பொறியாவது அணையாமலிருக்கும்.

ஸந்தியா வந்தனத்தில் அர்க்கியமும் காயத்ரீயும் முக்கியமானவை. மற்றவைகளெல்லாம் அதற்கு அங்கமானவை. அசக்தர்களாயிருப்பவர்கள் அர்க்கியத்தைக் கொடுத்து விட்டுப் பத்து காயத்ரீகளையாவது செய்ய வேண்டும். அந்த இரண்டுதானே முக்கியம். அவைகளை மட்டும் செய்து விடலாம் என்றால் வரவர அவைகளுக்கும் லோபம் வந்து விடும். ஆகையால் அங்கபுஷ்களத்தோடு செய்து வந்தால் முக்கியமானது நிற்கும். ஆபத் காலத்திலுங்கூட இவைகளைச் செய்து வரவேணடும். காலத்திலும் செய்யவேண்டும். பாரத யுத்தத்தில் ஜலம் அகப்படாமல் தூளியை வைத்துக்கொண்டு காலம் தவறாமல் அர்க்கியம் கொடுத்தார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

அஸ்தமன காலத்திலும், உதய காலத்துக்கு முன்பும் உச்சிக் காலத்திலும் அர்க்கியம் கொடுக்கவேண்டும். இடைக் காட்டுச் சித்தர் என்று ஒருவர் இருந்தார். அவர் ஆடு மேய்த்தார். அவர், "காணமற் கோணமற் கண்டு கொடு, ஆடுகாண் போகுது பார் போகுது

பார்" என்று சொல்லி இருக்கிறார். காணாமல் என்றால் ஸூரியனைக் காண்பதற்கு முன்பு என்பது அர்த்தம். அதாவது ஸூரியோதயத்திற்கு முன் காலை அர்க்கியம் கொடுக்கவேண்டும். கோணாமல் என்பதற்குத் தலைக்கு நேரே இருக்கும்பொழுது என்பது அர்த்தம். அதாவது ஸூரியன் மேற்கே போவதற்கு முன் உச்சிகாலத்தில் மாத்யான்னிக அர்க்கியம் கொடுக்க வேண்டும். கண்டு என்பதற்கு ஸூரியன் இருக்கும் பொழுது என்பது அர்த்தம். ஸூரியன் அஸ்தமிப்ப தற்கு முன்பு மலைவாயில் இருக்கும்பொழுது ஸாயங்கால அர்க்கியம் கொடுக்கவேண்டும். இந்த விஷயங்களைத் தான் இலேசாகச் சொல்லியிருக்கிறார். ஆடு என்றால் நீராடு. கங்கையில் ஸ்நானம் பண்ணு என்பது அர்த்தம். காண் என்றால் ஸேது தரிசனம் பண்ணு என்பது அர்த்தம். போகுது என்றால் ஷை கங்கா ஸ்நானத் தாலும் ஸேது தரிசனத்தாலும் நாம் பாபம் தொலைகிறது. இதைப்பார் என்று சொன்னார்.

காயத்ரீயைச் சரியாகப் பண்ணினால்தான் வேத மந்திரஸித்தி உண்டாகும். அர்க்கியத்தையும் காயத்ரீ யையும் தவறாமல் செய்து கொண்டு வரவேண்டும். ஜன்மத்தில் ஒரு தரமாவது கங்காஸ்நானம், ஸேது தரிசனம் பண்ணவேணும். ஸந்தியாவந்தனத்தைத் தவறாமல் செய்து வரவேண்டும். அங்க புஷ்களமாகப் பண்ணினால்தான் பிரதானமாவது நன்றாக இருக்கும்.

ஜ்வரம் வந்தால் கூட இருக்கிறவர்கள் அவர்களுக் காக ஸந்தியா வந்தனம் பண்ணித் தீர்த்தத்தை ஜ்வரம் வந்தவர் வாயில் விடவேண்டும். இப்பொழுது நமக்கு நித்தியப்படி ஜ்வரம் வந்தது போலத்தான் இருக்கிறது.

ஜ்வரம் வந்தால் அதற்கு மருந்து அவசியம்; அதுபோல ஆத்மாவுக்கு உபயோகமான காயத்ரீயும் முக்கியமானது. அதை எந்தக்காலத்திலும் விடக்கூடாது. மருந்தைவிட அதுதான் முக்கியமானது. ஒரு நாளாவது ஸந்தியா வந்தனத்தை விட்டுவிட்டோமென்று இருக்கக்கூடாது. கண்டபடி அநாசாரம் பண்ணக்கூடாது. இதுவரையிலும் பண்ணின அநாசாரத்துக்குப் பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ளவேண்டும். காயத்ரீ ஜபம் பண்ணுவது எல்லாராலும் ஆகிற கார்யந்தான். ஆயுள் இருக்கிற வரைக்கும் ஸந்தியாவந்தனத்துக்கு லோபம் வராமல் பண்ணவேண்டும். காயத்ரீயை மாத்ருரூபமாக உபாஸிக்க வேண்டும். பகவான் பலவிதமான ரூபங்களில் வந்து பக்தர்களுக்குக் கிருபை செய்கிறார். நம்மிடம் எல்லாரையும்விட அன்பாக இருப்பது மாதா தான். தாயாரிடம் எதை வேண்டுமானாலும் பயமில்லாமற் சொல்லலாம். பகவான் எல்லா ரூபமாக இருந்தாலும் மாதா ரூபமாக வந்தால் நல்லது. காயத்ரீயை மாதா வென்று வேதம் சொல்லுகிறது.

புருஷனுக்குத்தான் காயத்ரீ இருக்கிறது. ஸ்திரீக்கு எந்தக் காயத்ரீ இருக்கிறதென்றால் புருஷன் காயத்ரீயை அநுஷ்டித்தால் ஸ்திரீகளுக்கு க்ஷேமம் உண்டாகும். அதனால் மற்ற ஜாதிகளுக்கும் க்ஷேமமுண்டாகும்.

பலவித மந்திரங்கள் இருக்கின்றன. அவைகளை ஜபம் பண்ணுவதற்கு முன்பு இன்ன இன்ன பலனை உத்தேசித்துப் பண்ணுகிறேன் என்று சொல்லுகிறோம். காயத்ரீமந்திரத்தினுடைய பலன் சித்தசுத்திதான். மற்ற மந்திரங்களால் உண்டாகிற பலன்களெல்லாம்

கடைசியில் சித்த சுத்தி உண்டாகத்தான் இருக்கின்றன. அதுவே காயத்ரீக்கு நேரான பலன்.

त्रिभ्य एव तु वेदेभ्यः पादं पादमदूदहम् ।

[மனுஸ்மிருதி]

காயத்ரீ மூன்று வேதத்திலிருந்தும் எடுத்தது அதனால் மூன்று வேதங்களைச் சேர்ந்தோர்களுக்கும் காயத்ரீ பொதுவானது. அதர்வவேதத்துக்கு மாத்திரம் வேறு காயத்ரீ உண்டு. அந்த வேதத்தை அத்தியயனம் பண்ணுகிறவர்கள் வேறு உபநயனம் பண்ணிக்கொண்டு வேறு காயத்ரீ உபதேசம் செய்து கொள்ள வேண்டும். அப்படியே அதர்வவேதி மற்றவேதங்களை அத்தியயனம் பண்ணவேண்டுமென்றாலும் மறுபடியும் உபநயனம் செய்து கொள்ள வேண்டும்.

இந்தக் காலத்தில் காலையிலும் விடியற்காலத்திலும் எல்லாரும் காலந்தவறாமல் ஸந்தியாவந்தனம் செய்யலாம். சீக்கிரம் ஆபீஸுக்குப் போகவேண்டியவர்கள் கௌண காலத்தில் காலை ஸந்தியாவந்தனம் செய்ய வேண்டும். மாத்யான்னிக அர்க்கியத்தை ஸாயங்காலத்திலாவது கொடுக்க வேண்டும். ஜ்வரம் வந்தால் மற்றவர்களிடம் கஞ்சி கொடு, தீர்த்தம் கொடு என்று சொல்லுவதைப் போல எனக்காக ஸந்தியாவந்தனம் பண்ணு என்று சொல்ல வேண்டும். ஆஹாரத்தில் நியாயமாக இருக்க வேண்டும். அசுத்தமான ஆஹாரத்தைச் சாப்பிடக் கூடாது. அசுத்தமானவர்களோடு சாப்பிடக்கூடாது. அவர்களை நாம் தூஷிக்க வேண்டாம், வெறுக்கவும் வேண்டாம். நாமாக நம்மை விலக்கிக் கொள்ளவேண்டும். அவர்கள் இருக்கும் பந்தியில் உட்கார்ந்து சாப்பிடக்

கூடாது. இவ்வளவும் நம்முடைய தேஹபரிசுத்தியை ரக்ஷிப்பதற்காகத்தான் ஏற்பட்டவை. தேஹசுத்தியைக் காப்பாற்றினால்தான் மந்திர சக்தி இருக்கும். அப்பொழுதுதான் நமக்கும் மற்றவர்களுக்கும் க்ஷேமம் உண்டாகும். மந்திர சக்தியானது அணையாமல் விருத்தியாகக் கிருபை செய்யவேண்டுமென்று பகவானை எல்லோரும் பிரார்த்திப்போமாக!

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம:

## ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் ஸம்ஸ்க்ருத, க்ரந்த மூலமும், தமி
அனுவாதமும், பல வர்ணப் படங்களுடனும் ஸ்ரீ ஆசார்யா
அனுக்ரஹ பூர்வமான ஸ்ரீ முகத்துடனும் கூடியது.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ர நாமஸ்தோத்திரம் ... | 1 | 8 |
| 2. | ஷை மூலம் மட்டும் ... | 0 | 2 |
| 3. | ஸ்ரீ பஜ கோவிந்தம் ... ... ... | 0 | 4 |
| 4. | ஸ்ரீ முகுந்தமாலை ... ... ... | 0 | 6 |
| 5. | ஸ்ரீ ப்ரச்னோத்ர ரத்னமாலிகா (தெலுங்கில்) ... | 0 | 2 |
| 6. | ஸ்ரீ தேவீ ஸ்தோத்ர ரத்னாகரம் (ஸ்ரீ ச்யாமளா தண்டகம் முதலிய 12 தேவீ ஸ்தோத்ரங்கள் தமிழ் அர்த்தத்துடன் கூடியது) ... | 0 | 15 |
| 7. | ஸ்ரீ சீதலாஷ்டகம் ... ... ... | 0 | 2 |
| 8. | ஸ்ரீ அம்பாஷ்டகம் ... ... ... | 0 | 2 |
| 9. | ஸ்ரீ ஜம்புநாதாஷ்டகம் ... ... | 0 | 2 |
| 10. | ஸ்ரீ குலீரேசாஷ்டகம் ... ... | 0 | 2 |
| 11. | ஸ்ரீ கீதையும், குறளும் ... ... | 0 | 3 |
| 12. | ஸ்ரீ தயாசதகம் ... ... ... | 0 | 12 |
| 13. | ஸ்ரீ சிவபாதாதிகேசாந்த ஸ்தோத்திரங்கள் ... | 0 | 12 |
| 14. | ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம் ... ... | 0 | 5 |
| 15. | ஸ்ரீ ரங்கநாதாஷ்டகம் ... ... ... | 0 | 2 |
| 16. | ஸ்ரீ அத்வைதசித்தாந்த வினாவிடை ... | 0 | 5 |
| 17. | கும்பகோணம் அத்வைத சபை பொன் விழா நினைவு மாலை— | | |
| | (1) ஸம்ஸ்கிருதம்—51 கட்டுரைகள் அடங்கியது | 5 | 0 |
| 18. | (2) ஆங்கிலம் —12 ,, ,, ... | 3 | 0 |
| 19. | ஸ்ரீ ஆக்யா ஷஷ்டி ... ... | 0 | 10 |
| 20. | திருக்குறள்—பொருட்பாலும், காமத்துப் பாலும்—பாலருரையுடன் ... | 4 | 0 |

21. ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் நன்மொழிகள்
5 பாகங்களாக கூடிய சீக்கிரம் வெளியிடப்படும்

| | | | |
|---|---|---|---|
| (1) நமது வேதங்களும் சாஸ்திரங்களும் ... | 1 | 0 | 0 |
| (2) நமது ஆலயங்களும் மூர்த்திகளும் ... | 0 | 12 | 0 |
| (3) நமது அநாதி மதம் ... | 0 | 6 | 0 |
| (4) நமது தர்மம் ... | 0 | 12 | 0 |
| (5) நாற்பது ஸம்ஸ்காரங்களும் கர்மானுஷ்டானங்களும் ... | 0 | 10 | 0 |

ஸ்ரீ ஆதிசங்கரர். ஸ்ரீ ஆசார்யாள் அவர்களின்
திவ்ய மூவர்ண படங்கள். ஒவ்வொன்றும் விலை அணா

### ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் தெரு
கும்பகோணம்

4, பிரான்விஸ் ஜோஸப்புத் தெரு
சென்னை—1.

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம:

## ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் ஸம்ஸ்க்ருத, க்ரந்த மூலமும், தமி அனுவாதமும், பல வர்ணப் படங்களுடனும் ஸ்ரீ ஆசார்யா அனுக்ரஹ பூர்வமான ஸ்ரீ முகத்துடனும் கூடியது. ரூ. அ.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ர நாமஸ்தோத்திரம் | ... 1 | 8 | |
| 2. | ஷை மூலம் மட்டும் | ... 0 | 2 | 6 |
| 3. | ஸ்ரீ பஜ கோவிந்தம் ... ... | ... 0 | 4 | |
| 4. | ஸ்ரீ முகுந்தமாலை ... ... | ... 0 | 6 | 0 |
| 5. | ஸ்ரீ ப்ரச்னோத்ர ரத்னமாலிகா (தெலுங்கில்) | ... 0 | 2 | 6 |
| 6. | ஸ்ரீ தேவீ ஸ்தோத்ர ரத்னாகரம் (ஸ்ரீ ச்யாமளா தண்டகம் முதலிய 12 தேவீ ஸ்தோத்ரங் | | | |

5 பாகங்களாக கூடிய சீக்கிரம் வெளியிடப்படும்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | நமது வேதங்களும் சாஸ்திரங்களும் | ... 1 | 0 | 0 |
| (2) | நமது ஆலயங்களும் மூர்த்திகளும் | ... 0 | 12 | 0 |
| (3) | நமது அநாதி மதம் | ... 0 | 6 | 0 |
| (4) | நமது தர்மம் | ... 0 | 12 | 0 |
| (5) | நாற்பது ஸம்ஸ்காரங்களும் கர்மானுஷ்டானங்களும் | ... 0 | 10 | 0 |

ஸ்ரீ ஆதிசங்கரர், ஸ்ரீ ஆசார்யாள் அவர்களின் திவ்ய மூவர்ண படங்கள், ஒவ்வொன்றும் விலை அணா

**ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்**

57, மேல டபீர் தெரு, கும்பகோணம் | 4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை–1.